**க.து.ந.க.எண்.இ1/1791/2008**
**ஆணையாளர் அவர்களின் 01.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :348/2008 பொருள் எண்.59

**கல்வி அலுவலர் பொறுப்பேற்ற விவரம்**

அரசு ஆணை (நிலை) எண்.45, பள்ளிக்கல்வி (ஏ1) துறை, நாள்.19.02.2008 மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.66, பள்ளிக்கல்வி (ஏ1)துறை, நாள் 14.03.2008ன்படி திரு.த.மோகன குமார், முதன்மை கல்வி அலுவலர் அனைவருக்கும் கல்வித் திட்டம் சிவகங்கை அவர்கள் 21.04.2008 அன்று முற்பகல் முதல் பணியிடமாற்றத்தில் சென்னை மாநகராட்சி கல்வி அலுவலராக பணியில் சேர்ந்தார்.

இவர் சென்னை மாநகராட்சி கல்வி அலுவலராக பணியில் சேர்ந்த விவரத்தினை மன்றத்தின் பதிவுக்காகவும், தகவலுக்காவும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவிற்கும், தகவலுக்கும் சமர்ப்பிக்கின்றது’’.

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ2/2287/08**
**ஆணையாளர் அவர்களின் 30.05.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :349/2008 பொருள் எண்.60

**நிதி ஆலோசகர் பொறுப்பேற்ற விவரம்**

அரசணை (2D) எண்.17, நிதி (ஓபி11) துறை, நாள்.22.02.2008ன்படி தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையில் நிதிக்கட்டுப்பாடு அலுவலராக பணிபுரிந்த அரசு இணைச் செயலாளர் திரு.சி.ஜெயகாந்தன், அவர்கள் பணிமாறுதல் செய்யப்பட்டு அயற்பணியில் சென்னை மாநகராட்சியில் நிதி ஆலோசகராக, திரு.து.தனசாமி, அரசு இணைச் செயலாளர் அவர்கள் 31.01.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்ற காலிப்பணியிடத்தில் பணியமர்த்தப்பட்டார்.

திரு.சி.ஜெயகாந்தன், அரசு இணைச் செயலாளர், அவர்கள் அயற்பணியில் சென்னை மாநகராட்சியில் 02.04.2008 முற்பகல் முதல் நிதி ஆலோசகராக பணியில் சேர்ந்தார் என்ற விவரம் மன்றத்தின் தகவலுக்காகவும், பதிவுக்காகவும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவிற்கும், தகவலுக்கும் சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்1/1676/2008**
**ஆணையாளர் அவர்களின் 01.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :350/2008 பொருள் எண்.61

**வயது முதிர்வு ஓய்வு**

சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் மண்டல அலுவலராக பணிபுரியும் டாக்டர் திருமதி.எம்.மணிமேகலை , என்பவர் 31.07.2008 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெறவுள்ளார். தனியரின் பணிவிவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | பதவியின் பெயர் | பணி நியமன நாள் | உறுதியாக்கம் செய்யப்பட்ட நாள். ஆணை எண். | தகுதி காண் பருவம் முடிக்கப்பட்ட நாள். ஆணை எண். |
|---|---|---|---|---|
| 01 | உதவி அறுவை மருத்துவ அலுவலர் | 10.10.1979 முதல் சென்னை மாநகராட்சி | 10.10.1979 அ.ஆ.எண்.2193 சு(ம) கு.ந.து. நாள்.02.101981 | 12.10.1981 அ.ஆ.எண்.2193 சு(ம) கு.ந.து. நாள்.02.101981 |
| 02 | மண்டல அலுவலர் | 18.01.2008 | மண்டல அலுவலர் பதவியில் உறுதியாக்கம் செய்ய பிரேரணைகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | –––– |

தனியர் மீது நாளது தேதி வரையில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 10.06.2008 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை.

தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை. தனியரின் பணிப்பதிவேட்டை தணிக்கைக்கு அனுப்பி முன்தணிக்கை பெறப்பட்டுள்ளது. இவரை தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. நடப்பு நிதியாண்டில் தணிக்கை பத்தி தணிக்கையிலிருந்து பெறவில்லை. இதன் பொருட்டு தனியருக்கு அனுமதிக்கப்படவுள்ள பணிக்கொடையில் 25% தொகை நிறுத்தி வைக்கப்படும். இவரது ஊதியம் (ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி பணியமைப்பில் இவரது பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

எனவே, டாக்டர் திருமதி.எம்.மணிமேகலை மண்டல அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, என்பவரை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் நீண்ட கால முன்பணம் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அனைவகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 31.07.2008 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :351/2008 பொருள் எண்.62

**வயது முதிர்வு ஓய்வு**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர் திருமதி. டி.சபிதா என்பவர் 31.08.2008 அன்று பிற்பகல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற உள்ளார். தனியரின் பணி விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எ ண் | பதவியின் பெயர் | பணி நியமன நாள் | தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள் ஆணை எண். |
|---|---|---|---|
| 01 | மருத்துவ அலுவலர் | 09.02.79வேலூர் நகராட்சியில் முறைப்படியானபணி நியமனம் (on regular basic) 08..08.1983 முதல் சென்னை மாநகராட்சி | 20.10.81 வேலூர் நகராட்சி அலுவலக செ.மு.ஆணை 9472/88/எச்3, நாள் 31.05.1988 |

டாக்டர் திருமதி. டி.சபிதா, மருத்துவ அலுவலர் என்பவர் மீது நாளது தேதி வரையில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 16.05.08 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை.

தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை, இவரை தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. நடப்பு நிதியாண்டில் தணிக்கை பத்தி தணிக்கையிலிருந்து பெறவில்லை. இதன் பொருட்டு இவருக்கு அனுமதிக்கப்படும் பணிக்கொடையில் 25% தொகை நிறுத்தி வைக்கப்படும். இவரது நியமனம் ஊதியம் (ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. இவரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும், நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி பணியமைப்பில் இவரது பதவி வகுப்பு– 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இவரை பணியிலிருந்து விடுவிக்க நியமன குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

எனவே, டாக்டர் திருமதி. டி.சபிதா, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை என்பவரை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் நீண்ட கால முன்பணம் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 31.08.2008 அன்று பிற்பகல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்1/1181/2008**
**ஆணையாளர் அவர்களின் 01.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :352/2008 பொருள் எண்.63

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

டாக்டர் திருமதி.B.காஞ்சனமாலா, மண்டல அலுவலர், அவர்கள் 31.05.2008 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றார். தனியரின் பணிவிவரங்கள் பின்வருமாறு:–

| வ.எண் | பதவியின் பெயர் | பணி நியமன நாள் | உறுதியாக்கம் செய்யப்பட்ட நாள். ஆணை எண். | தகுதி காண் பருவம் முடிக்கப்பட்ட நாள். ஆணை எண். |
|---|---|---|---|---|
| 01 | மருத்துவ அலுவலர் / உதவி அறுவை மருத்துவ அலுவலர் | 26.02.79 திருப்பூர் நகராட்சி 22.12.81 முதல் சென்னை மாநகராட்சிக்கு பணி மாறுதல் | மருத்துவ அலுவலராக திருப்பூர் நகராட்சியில் பணியமர்த்தப் பட்டுள்ளார்(செ.மு.ஆ. 75686/78, நாள்.17.02.1979) | 22.05.81 DMA அவர்களின் செயல்முறை ஆணை எண்.72106/82 எச்.1 நாள்.21.08.82 |
| 02 | மண்டல அலுவலர் | 21.01.2008 | மண்டல அலுவலர் பதவியில் உறுதியாக்கம் செய்ய பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | –––– |

தனியர் திருப்பூர் நகராட்சியிலிருந்து 22.12.1981 முதல் சென்னை மாநகராட்சி சிறப்பு ஊட்டசத்து திட்டத்தில் (SNP) பணியமர்த்தப்பட்டார். பின்னர் இத்திட்டம் முடிவடைந்ததால் மகப்பேறு குழந்தை நலப்பிரிவில் 15.09.1982 முதல் பணியமர்ந்துள்ளார். சிறப்பு ஊட்டசத்து திட்டத்தில் பணிபுரிந்த காலத்தை பணிக்காலமாக அரசாணை 559 சு(ம)கு.ந.துறை 04.05.93ன்படி சேர்த்து கொள்ளப்பட்டுள்ளது.

தனியர் மீது நாளது தேதி வரையில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 10.04.2008 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை.

தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை. தனியரின் பணிப்பதிவேட்டை தணிக்கைக்கு அனுப்பி முன்தணிக்கை பெறப்பட்டுள்ளது. இவரை தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. நடப்பு நிதியாண்டில் தணிக்கை பத்தி தணிக்கையிலிருந்து பெறவில்லை. இதன் பொருட்டு அன்னாருக்கு அனுமதிக்கப்பட்டு பணிக்கொடையில் 25% தொகை நிறுத்தி வைக்கப்படும். இவரது நியமனம் ஊதியம் (ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் பண இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி பணியமைப்பில் இவரது பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க நியமன குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 30.05.2008 தேதியிட்ட ஆணையின்படி தனியர் 31.05.2008 முதல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற அனுமதி வழங்கப்பட்டது.

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்1/1181/2008**

எனவே, டாக்டர் திருமதி.B.காஞ்சனமாலா, மண்டல அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, என்பவரை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் நீண்ட கால முன்பணம் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அனைவகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 31.05.2008 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி வழங்கியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்

**மி.து.ந.க.எண்.மே1/அ2/1725/2008**
**ஆணையாளர் அவர்களின் 09.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :353/2008 பொருள் எண்.64

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மின்துறையில் உதவி கோட்ட மின் பொறியாளராக பணிபுரியும் திரு.பி.ஞானவேலு, அவர்கள் 31.05.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றுள்ளார். அன்னாரது பிறந்த தேதி 01.06.1950 ஆகும்.

திரு.பி.ஞானவேலு அவர்கள் வரைவாளர் (Draftsman) ஆக 15.09.1975 அன்று சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்துள்ளார். அப்பதவியில் 15.09.77 அன்று தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்டவராக அறிவிக்கப்பட்டுள்ளார். பின்னர் 20.06.1984 முதல் இளநிலை பொறியாளர் ஆக பதவி உயர்வு பெற்றுள்ளார். இளநிலை பொறியாளர் பதவியில் 20.06.84 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தனியர் டிசம்பர் 84 முதல் உதவி பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். அப்பதவியில் 01.07.85 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தனியர் 09.12.1999 அன்று உதவி கோட்ட மின் பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார். இப்பதவியில் 09.12.99 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. அரசாணை (1டி) எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.29.01.2001ன்படி அரசினால் உறுதியாக்கம் செய்யப்பட்டு, பொ.து.ந.க.எண்.ஈ1/36439/98, நாள். 29.01.2001ன்படி 09.12.1999 முற்பகல் முதல் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் இவர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது. அன்னார் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நீண்ட கால கடன்கள்/ முன்பணம் ஏதுமில்லை. இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் ஆனால் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக கடன் முன்பண நிலுவை இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

இவர் மீது தணிக்கைத் தடை இருப்பின் அவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என நிபந்தனை உறுதி மொழிக் கடிதம் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதால் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற மன்றத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

எனவே, திரு.பி.ஞானவேலு, உதவி கோட்ட மின் பொறியாளர், மின்துறை அவர்களை 31.05.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்கும் பொருட்டு, தணிக்கைத் தடை மற்றும் நிதி இழப்பீடுகளுக்கு இவர் பொறுப்பாகிறார் என்பது பின்னர் தெரியவரின் இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரை 31.05.2008 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதித்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மி.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

ம.அ8.வ.து.ந.க.எண்.ஆர்1/2528/08
ஆணையாளர் அவர்களின் 27.06.2008 நாளிட்ட குறிப்பு

## 30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :354/2008 பொருள் எண்.65

### வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

திரு.ஜி.புருஷோத்தம், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–8, அவர்கள் சென்னை மாநகராட்சியில் முதன் முதலாக வாடகை வசூலராக 12.12.1975 தேதியில் பணியில் சேர்ந்தார். பிறகு வரிதண்டலராக 04.10.1976 தேதியில் பணியில் சேர்ந்தார். பிறகு பதவி உயர்வு மூலம் உரிமம் ஆய்வாளராக 28.12.1992 தேதியிலும், வரி மதிப்பீட்டாளராக 26.08.1996 தேதியிலும் உதவி வருவாய் அலுவலராக 21.06.2006 தேதியிலும் பணியில் சேர்ந்தார். இவர் மொத்தம் சென்னை மாநகராட்சியில் 33 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். மேலும் உதவி வருவாய் அலுவலர் பதவி தவிர மற்ற பதவிகளில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. அன்னாரின் பிறந்த தேதி 13.05.1950 வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறும் நாள்.31.05.2008 ஆகும்.

தனியர் வயது முதிர்வு காரணமாக 31.05.2008 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார் இவர் பதவி இரண்டாம் நிலையைச் சார்ந்ததால் ஓய்வு பெற மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை மற்றும் துறை சம்மந்தமாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. இவர் மீது தணிக்கைத் தடை இருப்பது மற்றும் முன்பணம் நிலுவையில் இருப்பது ஏதும் பின்னர் தெரியவரின் அவ்விழப்பினை இவரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனையின் பேரில் அன்னார் பணிபுரிந்த மண்டலங்களான 1,4,5,8 ஆகியவற்றில் சான்றளித்துள்ளன.

மேலும் இவரது பணிப்பதிவேடு உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு ஓய்வூதியப்பயன்கள் பெற அனுப்பப்பட்டுள்ளது. முன்பணம் மற்றும் தணிக்கைத் தடை மூலம் பின்னர் கண்டுபிடிக்கப்படும் இழப்பை ஈடு செய்யும் வகையில் இவரது பணிக்கொடையில் 25 சதவீதம் நிறுத்தி வைக்கப்படும்.

தனியர் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் அறிக்கைக்கு உட்பட்டும், முன்பணம் நிலுவை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு இவரைபொறுப்பாக்கி இவரது ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைகளுக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், இவ்வலுவலக 27.05.2008 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி 31.05.2008 அன்று பிற்பகல் பணியிலிருந்து ஓய்வுபெற அனுமதியளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, திரு.ஜி.புருஷோத்தம், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–8, வருவாய்த்துறை அவர்களை 31.05.2008 அன்று பிற்பகல் மன்றத்தின் பின்னேற்பை எதிர்நோக்கி வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.8
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**ம.அ.வ.து.ந.க.எண்.ஆர்1/3906/07**
**ஆணையாளர் அவர்களின் 09.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :355/2008 பொருள் எண்.66

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.எஸ்.சம்பத்குமார், உதவி வருவாய் அலுவலர் மண்டலம்–9, (பணியிடம் மண்டலம்–1) அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.06.2007 அன்று பிற்பகல் முதல் ஓய்வில் செல்ல ஆணையாளர் அவர்களின் ஆணை பெற்று அனுமதிக்கப்பட்டார். இவர் முதன்முதலில் 20.08.1968ஆம் ஆண்டு மலேரியா ஆய்வாளராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். பின்னர் 20.10.1973 அன்று இளநிலை உதவியாளராகவும் 10.08.1979 அன்று உதவியாளராகவும் 23.10.1992 அன்று உரிமம் ஆய்வாளராகவும் 27.08.1996 அன்று வரி மதிப்பீட்டாளராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார். இவரது பணி 30.10.1973 முதல் இளநிலை உதவியாளர் பதவியிலும் 10.08.1979 முதல் உதவியாளர் பதவியிலும் 23.10.1992 முதல் உரிமம் ஆய்வாளர் பதவியிலும் 27.08.1996 முதல் வரி மதிப்பீட்டாளர் பதவியிலும் பணிவரன் முறை செய்யப்பட்டு உள்ளது. இவர் 30.10.1975 பி.ப. முதல் இளநிலை உதவியாளர், எழுத்தர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இவர் 07.09.2006 தேதியிட்ட செயல்முறை ஆணையின்படி பணிமூப்பு மறு நிர்ணயம் செய்யப்பட்டு கருத்தியலாக இளையவர் பணியில் சேர்ந்த 21.06.2006 நாளாக கொண்டு உதவி வருவாய் அலுவலராக 10.07.2006 அன்று பணியில் சேர்ந்துள்ளார். இவரது பதவி உயர்வுக்கு அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டது (அரசாணை எண்.537, ந.நி.ம.கு.வ.து. நாள்.05.11.2007)

தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது. மேலும் விழிப்பு குழுமத்தின் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கையும் விழிப்புத்துறையில் பெறப்பட்டுள்ளது. தனியர் மீது தணிக்கைத் தடைகள் முன்பணம் பெற்று ஈடு செய்தல் நிலுவை மற்றும் மிகை ஊதியம் வழங்கியது போன்றவை நிலுவையில் உள்ளதா என தனியர் பணிபுரிந்த மண்டலங்களில் கோரப்பட்டது. அது தொடர்பாக பரிசீலனை செய்த மண்டலம்–1,2,3,4,6,8,9,10, ஆகியன தனது குறிப்பில் தனியர் மீது தணிக்கை தடைகள் ஏதுமில்லை என தெரிவித்துள்ளது. மற்ற மண்டலங்களான 1, 5, 7 ஆகியன தனது குறிப்பில் தணிக்கை தடைகள் ஏதுமில்லை என்றும் பின்னர் ஏதும் இருப்பது தெரியவரின் அதனை பொறுப்பாக்கி அன்னாரின் பணிக்கொடையில் பிடித்தம் செய்திடலாம் என தெரிவித்துள்ளார்கள். மேலும் தனியரை ஓய்வில் செல்ல மன்றத்தில் அனுமதி நியமனக்குழு மூலமாக பெறப்பட வேண்டும். அதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதால் மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் தணிக்கை தடைகள் நீண்ட காலம் முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமல் இருப்பது மிகை ஊதியம் வழங்கியது குறித்து பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அவரது பணிப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் தனியரை 30.06.2007 முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல ஆணையாளரின் ஆணை பெற்று விடுவிக்கப்பட்டார். மேலும் தனியரின் பணிப்பதிவேடு உதவி வருவாய் அலுவலர் பதவியில் அரசின் உறுதியாக்கம் பெற்றிட அரசுக்கு அனுப்பி அரசாணை பெற்று மன்றத்தின் அனுமதியும் பெற்றதால் உரிய காலத்தில் கோப்பினை சமர்ப்பிக்க காலதாமதம் ஏற்பட்டது என்பதை தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, திரு.எஸ்.சம்பத்குமார், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–9, (பணியிடம் மண்டலம்–1) அவர்களை 30.06.2007 அன்று வயது முதிர்வு காரணமாக மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/122685/2008**
**ஆணையாளர் அவர்களின் 11.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :356/2008 பொருள் எண்.67

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–6, வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து 31.01.2006 பி.ப முதல் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.சி.கோட்டீஸ்வரராவ், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடித எண்.2111/எ4/2008, நாள்.09.07.2008ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.02.2006முதல் மாதம் | ரூ.7650/– |
| இறப்பு மற்றும்ஓய்வுக்காலப் பணிக்கொடை | ரூ.3,13,038/– |
| மாத தொகுப்பு தொகை | ரூ.2550/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.5100/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.3,20,076/– |
| ஓய்வூதியரின் காலத்திற்குப் பின்னர் அன்னாரது மனைவி திருமதி. சி.ஜெயலட்சுமி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.7650/– 06.01.2013 வரை<br>ரூ.4590/– 07.01.2013 முதல் |

35 ஆண்டுகள், 08 மாதங்கள், 11 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| தணிக்கை சான்றின்படி மிகை | ரூ.63,056/– |
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிகைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ.78,260/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கைத்தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு தனியருக்கு மீள வழங்கவும்,

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 31.01.2006 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற உதவி வருவாய் அலுவலர் திரு.சி.கோட்டீஸ்வரராவ், அவர்களுக்கு உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி மேற்படி தொகையை பிடித்தம் போக இதர ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**<u>பொ.சு.ந.க.எண்.பி13/16926/08</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 07.07.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :357/2008 பொருள் எண்.68

**<u>ஓய்வூதியம்</u>**

டாக்டர் திருமதி.மணிநேமிநாதன், மண்டல அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கள் கடந்த 30.06.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.4197/எ4/2007, நாள்.22.11.2007ல் தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.10950/– 01.07.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.9908/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.4,58,148/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.4,14,468/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.43,680/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது கணவர் திரு.எஸ்.நேமிநாதன், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.10950/– 09.06.2013 முடிய ரூ.6570/– 10.06.2013 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 22.11.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி திருமதி.டாக்டர் மணிநேமிநாதன் அவர்கட்கு மேற்கண்டவாறு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி2/7515/2008**
**ஆணையாளர் அவர்களின் 29.05.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :358/2008 பொருள் எண். 69

**ஓய்வூதியம்**

திரு.ஆர்.வெங்கடரமணன், உதவி செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்கள் வயது முதிர்வு அடைந்தமையால் பணியிலிருந்து 31.08.2004 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, கடிதம் நி.மு.எண்.5130/எ4/2004, நாள்.31.08.2004ல் கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்கள் வழங்க சான்றளிக்கப்பட்டுள்ளது.

| | ஓய்வூதிய பயன் |
|---|---|
| அ. வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் (01.09.2004) | ரூ.5013/– |
| ஆ. இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.2,56,394/– |
| தொகுப்பு | ரூ.1671/– |
| தொகுப்பு தொகை | ரூ.1,63,224/– |
| குடும்ப ஓய்வூதியம்<br>மனைவி திருமதி.வி. சாந்தா ரமணன் | ரூ.5013/– 06.08.2011 முடியவும், பின்னர் 07.08.2011 முதல் ரூ.3000/– |

தனியர், 1998ஆம் ஆண்டு மேற்கொண்ட சாலைவெட்டு சீரமைக்கும் பணியில் குறை இருப்பதாகவும், இதற்கு தமிழக விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககத்தினர் 2000ஆம் ஆண்டு மேற்கொண்ட நடவடிக்கையின் முடிவு அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தி ஓய்வூதிய பயன்களில் தனியருக்கு சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி2/15377/2005, நாள்.02.08.2005ன்படி தற்காலிக ஓய்வூதியமாக ரூ.3760/– மற்றும் தற்காலிக பணிக்கொடைத் தொகை ரூ.1,97,258/– வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மன்றத் தீர்மான எண்.548/2007, நாள்.29.10.2007ல் திரு.ஆர்.வெங்கடரமணன், உதவி செயற் பொறியாளர் (ஓய்வு) உள்பட மற்றும் சில பொறியாளர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணைக்குட்பட்டும் ஒவ்வொருவரிடமும் உறுதி மொழிப் பத்திரம் பெற்றுக்கொண்டு முழு ஓய்வூதியப் பயன்கள் வழங்க மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

36 வருடங்கள் 4 மாதங்கள் 17 நாட்கள் தகுதிப் பணிக்காலம் புரிந்த திரு. ஆர்.வெங்கடரமணன், உதவி செயற்பொறியாளர், அவர்கள் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு–2) அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட முழு ஓய்வூதிய பயன்கள் வழங்கப்படவேண்டும்.

எனவே, திரு.ஆர்.வெங்கடரமணன், ஓய்வுபெற்ற உதவி செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை, அவர்களிடம் உறுதி மொழிப் பத்திரம் பெற்றுக்கொண்டு, தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்களாக வயது முதிர்வு ஓய்வூதியமாக ஏற்கனவே வழங்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியமான ரூ.3760/–லிருந்து ஓய்வூதியம் ரூ.5013/– ஆக அதிகரித்து வழங்கவும் பணிக்கொடை தொகை ரூ.2,56,394/–ல் 25 விழுக்காடு பிடித்தம் ரூ.64,099/– மற்றும் தற்காலிக பணிக்கொடை ரூ.1,97,258/– மற்றும் மிகை ஊதியம் ரூ.4,383/– ஆக மொத்தம் ரூ.2,65,740/–ல் பணிக்கொடைத் தொகை ரூ.2,56,394/– சரிசெய்யப்படவும், மீதத் தொகை (ரூ.2,65,740/– ரூ.2,56,394/–) ரூ.9346/–னை தனியருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய நிலுவைத் தொகையில் பிடித்தம் செய்யவும் மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.1671/ஐ தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,63,224/– (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தி மூவாயிரத்து இருநூற்று இருபத்தி நான்கு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால், அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.5013/– லிருந்து ரூ.3342/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.சாந்தா ரமணன், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.5013/ஐ 06.08.2011 முடியவும், அதன் பின்னர் 07.08.2011 முதல் ரூ.3000/– வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ2/ 4727/2008**
**ஆணையாளர் அவர்களின் 16.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :359/2008 பொருள் எண்.70

**பணியமைப்பு – முழு ஓய்வூதியம் வழங்குதல்**

திருமதி.கே.ஈ. கடும்பாடி, கணக்கு அலுவலர் அவர்கள் 31.08.2005 பிற்பகல் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையில், மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க தளர்வாணை பெறுவதற்கு உட்பட்டு அன்னாரை வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதி அளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மன்ற தீர்மானம் எண்.07/2006, நாள். 2.2.2006ன்படி அன்னாரை மேற்கண்ட நிபந்தனைகுட்பட்டு ஓய்வு பெற அனுமதித்தமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளித்துள்ளது.

திருமதி.கே.ஈ. கடும்பாடி, கணக்கு அலுவலர் அவர்கள் 04.11.1982ல் பொதுத்துறை மூலம் உதவியாளராக பதவி உயர்வு பெற்ற போது வழங்கப்பட்ட ஆணையில் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என்று எந்தவிதமான நிபந்தனையும் தெரிவிக்காமல் முற்றிலும் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 16.02.1996ல் பிரிவு மேலாளராகவும், 31.07.1997ல் கண்காணிப்பாளராகவும் பதவி உயர்வு அளிக்கப்பட்ட போதும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனை எதுவும் விதிக்கப்படாத நிலையில் அத்தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து அரசின் தளர்வாணை பெற்று ஓய்வு பெற அன்னாரை வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதி அளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில் திருமதி.கே.ஈ. கடும்பாடி, கணக்கு அலுவலர் (ஓய்வு) அவர்கள் 04.11.1982 உதவியாளராக பதவி உயர்வு பெற்ற போது மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெறுவது கட்டாயமாக்கப்படவில்லை. மேலும், மன்றத்தீர்மான எண்.376/2001 நாள் 20.07.2001ன்படி, 1981ல் பிரிவு மேலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள துறைத்தேர்வுகள் கணக்கில்கொள்ளாமல் 2000ம் ஆண்டு வரை முற்றிலும் பணிமூப்பின் அடிப்படையிலேயே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பணி விதிகள் இல்லாததாலும், 2000ம் ஆண்டு வரை பிரிவு மேலாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களில் பல நபர்கள் ஓய்வு பெற்றுள்ளதாலும் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியப்பயன்கள் வழங்க தணிக்கை ஆட்சேபனை தெரிவித்துள்ளதாலும், 2000ம் ஆண்டு வரை துணை விதிகள் பின்பற்றாமல் முற்றிலும் பணி மூப்பு அடிப்படையில் பிரிவு மேலாளர் பதவி வழங்கப்பட்டவர்களுக்கு பிரிவு மேலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர்களுக்கு துறைத்தேர்வுகள் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கலாம் எனவும், 2000ம் ஆண்டு முதல் பிரிவு மேலாளர் பதவிக்கு துறை விதிகளில் குறிப்பிட்டுள்ள சார் நிலை பணியாளர்களுக்கான கணக்கு தேர்வு பாகம்–1 மற்றும் பாகம்–2 ஆகிய துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்று நிர்வாக நலன் கருதி எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், முடிவெடுக்கப்பட்ட நாளிலிருந்து பதவி உயர்வு வழங்கப்பட்ட நபர்களுக்கும் மற்றும் பதவி உயர்வுக்காக காத்திருப்போர்களுக்கும் மேற்படி துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் 04.11.1982ல் உதவியாளர் பதவி உயர்வு பெற்றமையால் உதவியாளர் பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கவும் மேற்குறிப்பிட்ட மன்றத்தீர்மானம் பொருந்தும். எனவே, அன்னாருக்கு வழங்கப்பட்ட வயது முதிர்வு ஓய்வுக்கான ஆணையிலிருந்து “மாவட்ட நடைமுறை நூல் தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெறுவதற்குட்பட்டும்“ என்ற வாசகத்தை நீக்கி மன்றத்தீர்மானம் பெறப்படவேண்டியுள்ளது.

இந்நிலையில், முழு ஓய்வூதியப்பயன்கள் அளிக்கவேண்டி தனியரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அதனடிப்படையில், திரு.கே.ஈ. கடும்பாடி அவர்களது கோரிக்கையினை தகுதி மற்றும் விதிகளின்படி பரிசீலிக்க உயர்நீதிமன்றத்தால் சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**ம.க.கு.ந.க.எண்.அ2/ 4727/2008**

இது குறித்து தெரிவிப்பது யாதெனில் சென்னை மாநகராட்சி பணிவிதிகள் மற்றும் துணை விதிகளின்படி உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு கீழ்காணும் தகுதிகளின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் பட்டப்படிப்பு.

2. சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு பாகம்–I மற்றும் II அல்லது அதற்கு நிகரான அரசால் பரிந்துரைக்கப்பட்ட தேர்வு தேர்ச்சி.

3. கண்காணிப்பாளர் பதவியில் மூன்றாண்டுகளுக்கு குறைவில்லாமல் பணி செய்திருத்தல்.

உதவி கணக்கு அலுவலர் பதவியானது வகுப்பு–IIல் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான மேற்படி தகுதிகளில் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு தேர்ச்சி பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

திருமதி.கே.ஈ. கடும்பாடி அவர்கள் சென்னை பல்கலைக்கழகத்தில் பி.ஏ. பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். சார்நிலை அலுவலர்களுக்கான தேர்வு பாகம்–I மற்றும் II தேர்ச்சி பெற்றுள்ளார். கண்காணிப்பாளர் பதவியில் 01.08.1997 முதல் 13.01.2003 வரை தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்துள்ளார். எனவே, இவர் உதவி கணக்கு அலுவலர் (கணக்கு அலுவலர்) பதவி உயர்வுக்கு தகுதி மற்றும் துணை விதிகளின்படி தகுதியுடையவறாகிறார். மேலும், அரசாணை எண்.525, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29.12.2006ல் அன்னாரது உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு உறுதியாக்கம் அளித்து அரசாணையிட்டுள்ளது. இதனை தொடர்ந்து அன்னாருக்கு அப்பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராகவும் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் முறையே பொ.து.ந.க.எண்.இ1/18434/2001 நாள் 11.05.2007 மற்றும் ம.க.கு.ந.க.எண்.அ2/1170/2007 நாள் 31.06.2007 நாளில் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு தேர்ச்சியானது உதவியாளர் பதவி உயர்வுக்குத்தான் அறிவுறுத்தப்பட்டுள்ளது. உதவியாளர் பதவியானது வகுப்பு 3ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. வகுப்பு 3 மற்றும் 4ம் பணியாளர் நியமனம் செய்யும் அதிகாரம் நியமனக்குழுவிற்கு உள்ளது. அப்பதவி உயர்வு சென்னை மாநகராட்சி, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று பொதுத்துறை மூலமாக பதவி உயர்வு ஆணை வழங்கப்பட்டு வருகிறது. வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களின் பணி விதிகள் மன்றத்தின் ஒப்புதல் மட்டுமே பெறப்பட்டு நடைமுறையில் உள்ளது. எனவே, அன்னாருக்கு வழங்கப்பட்ட வயது முதிர்வு ஓய்வுக்கான ஆணையிலிருந்து "மாவட்ட நடைமுறை நூல் தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெறுவதற்குட்பட்டும்" என்ற வாசகத்தை நீக்கி முழு ஓய்வூதியம் வழங்க நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/7293/2008**
**ஆணையாளர் அவர்களின் 21.05.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :360/2008 பொருள் எண்.71

**ஓய்வூதியம்**

திரு.பி.சண்முகராஜ், உதவி கோட்ட பொறியாளர், மின்துறை, அவர்கள் கடந்த 30.04.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.428/எ4/2008, நாள்.03.03.2008ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.8475/— 01.05.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.5479/—ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.3,36,288/—ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3,01,936/—ஐ நேர்செய்து மீதம் ரூ.34,352/—ல் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.8588/— போக மீதம் ரூ.25,764/— வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.3,54,594/—ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,29,200/— ஐ நேர்செய்து மீத தொகையான ரூ.1,25,394/—ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.எஸ்.தனம், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.5085/— வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 03.03.2008 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.05.2006 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18 மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/7464/2008**
**ஆணையாளர் அவர்களின் 27.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :361/2008 பொருள் எண்.72

**ஓய்வூதியம்**

திரு.அ. ரஹிம்பேக், உதவி வருவாய் அலுவலர் வருவாய் துறை அவர்கள் கடந்த 30.06.2006 பி.ப முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை கடிதம் ஓ.மு.எண்.எ4/3676/2006, நாள்.09.08.2006ல் சில குறைகளை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இக்குறைகளை நீக்கம் செய்ய காலதமாதம் ஆகும் என்பதால் தனியரின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு 16.10.2007 நாளிட்ட ஆணையரது செயல்முறை ஆணையின்படி தனியருக்கு தற்காலிக ஓய்வூதியம் ரூ.5258/— மட்டும் தீர்வு செய்யப்பட்டது. தற்போது தணிக்கைத்துறையால் 17.03.2008 நாளிட்ட கடிதத்தின்படி உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் தணிக்கைச் சான்று நி.மு.எண்.1198/எ4/2007, நாள்.06.06.2007ன்படி கீழ்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் பயன்களில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியப் பயன்களை நேர்செய்து தனியருக்கு வழங்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| ஓய்வூதியம் | ரூ.6586/— |
| இறப்பு மற்றும் பணிக்கொடை | ரூ.2,70,289/— |
| தொகுப்பு தொகை | ரூ.2,75,516/— |
| மாத தொகுப்பு தொகை | ரூ.2195/— |
| குறைக்கப்பட்ட ஓய்வூதியம் | ரூ.4391/— |
| ஓய்வூதியரின் மனைவி திருமதி. ஜரினாரஷீம், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் | ரூ.6586/— 15.06.2013 வரை<br>ரூ.4219/— 16.06.2013 முதல் |

31 வருடங்கள், 02 மாதங்கள், 24 நாட்கள் தகுதிப் பணிக்காலம் புரிந்த இவர் சென்னை மாநகராட்சி வகுப்பு 2 நிலை அலுவலர் என்பதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 30.06.2006 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.அ.ரஹிம்பேக், உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை அவர்களுக்கு 01.07.2006 முதல் வயது முதிர்வு ஓய்வூதியம் ரூ.6586/— ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியம் தொகை ரூ.5258/—ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.2,70,289/— இதில் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.67,572/—யை பிடித்தம் செய்து மீதம் தொகையான ரூ.2,02,717/— வழங்கவும், தனியர் மீதான தணிக்கைத் தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு பிடித்தம் செய்யப்பட்ட தொகை மீள வழங்கவும், அன்னாரின் ஓய்வூதியத்தில் ரூ.2195/யை தொகுப்பு செய்வதால் தொகுப்புத் தொகை ரூ.2,75,516/—ஐ வழங்கவும், குடும்ப ஓய்வூதியமாக அன்னாரின் மனைவி திருமதி.ஜரினாரஷீம், அவர்களுக்கு ரூ.6586/— 15.06.2013/— வரை ரூ.4219/— 16.06.2013 முதல் வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18 மன்றச் செயலாளர்

**<u>30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :362/2008 பொருள் எண்.73

**<u>ஓய்வூதியம்</u>**

சென்னை மாநகராட்சி, மின்துறையில் உதவி கோட்ட மின் பொறியாளராக பணிபுரிந்து 31.03.2008 பி.ப அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.கே. நாகநாதன், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடித எண்.334/எ4/2008, நாள்.12.03.2008ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.04.2008 முதல் மாதம் | ரூ.8888/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.3,50,000/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2962/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.5926/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.3,71,791/– |
| ஓய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி. ஆர்.ஜெயா, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.8888/– 01.03.2015 வரை<br>ரூ.5333/– 02.03.2015 முதல் |

தனியர் 34 ஆண்டுகள் 09 மாதங்கள் 13 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிகைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ.87,500/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கைத்தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கவும்,

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி மேற்கண்ட ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இப்பொருளின் பத்தி எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள பதவியின் பெயரை உதவி கோட்ட மின் பொறியாளர் என்பதற்கு பதிலாக கோட்ட மின் பொறியாளர் என்ற திருத்தத்துடன் இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/16286/2008**
**ஆணையாளர் அவர்களின் 23.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :363/2008 பொருள் எண்.74

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமம் துறையில் கணக்கு அலுவலராக பணிபுரிந்து 31.01.2008 பி.ப அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.எஸ். வெங்கட்ராமன், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடித எண்.4730/எ4/2008, நாள்.10.01.2008ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.02.2008 முதல் மாதம் | ரூ.6225/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.2,89,658/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2075/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.4150/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,60,454/– |
| ஓய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி. வெ.அஞ்சனா தேவி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.6225/– 21.01.2015 வரை<br>ரூ.3735/– 22.01.2015 முதல் |

தனியர் 32 ஆண்டுகள் 10 மாதங்கள் 19 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிகைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ.72,415/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கைத்தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு தனியருக்கு மீள வழங்கவும்,

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 31.01.2008 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற கணக்கு அலுவலர் திரு.எஸ்.வெங்கட்ராமன், அவர்களுக்கு உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி பணிக்கொடையில் 25 விழுக்காடு பிடித்தம் போக இதர ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

ம.அ4.ந.க.எண்.அ3/8302/07
ஆணையாளர் அவர்களின் 20.06.2008 நாளிட்ட குறிப்பு

30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :364/2008 பொருள் எண்.75

## ஒய்வூதியம்

திருமதி.கே.காஞ்சனலட்சுமி, முதுநிலை பூச்சியியல் வல்லுநர், மண்டலம்–4, அவர்கள் இரண்டாம் நிலை அலுவலராக இருப்பதால், மாமன்றத்தின் பின்னேற்புக்கு உட்பட்டு, ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று 31.01.2007 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு செல்ல பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இவர் மண்டலம்–8ல் பணிபுரிந்த காலத்திற்கும், மண்டலம்–4ல் பணிபுரிந்த காலத்தில் 2000–2001 மற்றும் 2001–2002ம் நிதியாண்டிலும், அன்னாரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகள் இருப்பதால், அத்தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்யக்கோரி தனியருக்கு குறிப்பாணை வழங்கப்பட்டது. அத்தணிக்கைத்தடைகளுக்கு தான் ஏற்கெனவே விளக்கம் சமர்ப்பித்துள்ளதாகவும், அத்தணிக்கைத் தடைகள்தான் ஓய்வு பெற்ற பிறகும் நீட்டித்தால், அதற்குண்டான தொகையை தன்னுடைய ஓய்வூதிய பணிக்கொடையில் பிடித்தம் செய்து கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

இவர் மீது தணிக்கைத்தடைகள் இருப்பதால் முழு ஓய்வூதியம் பெற்றுத்தர இயலவில்லை, அதனால் தற்காலிக ஓய்வூதிய பணிக்கொடை ரூ.2,62,500/– தற்காலிக ஓய்வூதியம் ரூ.6047/–ம் பெற்றுத்தர 18.07.2007 அன்று கணக்கு அலுவலர்–4, அவர்களின் கருத்துரை பெற்று ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டி கோப்பு அனுப்பப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்புக்கு உட்பட்டு 31.01.2007 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து பணியிலிருந்து விடுவித்ததற்கு, மாமன்றத்தின் பின்னேற்பு ஆணை பெற்ற பின்னர் தற்காலிக ஓய்வூதியம் பெற்றுத்தர தனியே குறிப்பு அனுப்புமாறு கணக்கு அலுவலர் (ஓய்வூதியம்) அவர்கள் 08.08.2007 நாளிட்ட குறிப்பில் தெரிவித்துள்ளதால், 29.02.2008 அன்று மாமன்றத்தின் பின்னேற்பு ஆணை பெற்று ஓய்வு பெற்ற அலுவலருக்கு தற்காலிக ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை பெற்றுத்தர மீண்டும் ஆணையாளருக்கு குறிப்பு அனுப்பப்பட்டது.

ஆனால் 20.04.2008 நாளிட்ட குறிப்பில் ஓய்வு பெற்ற தனியர் அவர்கள் இரண்டாம் நிலை அலுவலராக இருப்பதால், தற்காலிக ஓய்வூதியம் மற்றும் தற்காலிக ஓய்வூதிய பணிக்கொடை பெற்றுத்தர மாமன்றத்தின் பின்னேற்பு பெற வேண்டும் என்று உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்கள் தெரிவித்துள்ளார்.

எனவே, 31.01.2007 அன்று ஓய்வு பெற்ற முதுநிலை பூச்சியியல் வல்லுநர், திருமதி.கே.காஞ்சனலட்சுமி, அவர்கள் இரண்டாம்நிலை அலுவலராக இருப்பதால், தற்காலிக ஓய்வூதிய பணிக்கொடை ரூ.2,62,500/–ம் 01.02.2007 முதல் தற்காலிக ஓய்வூதியம் ரூ.6047/–ம் பெற்றுத்தர நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**<u>பொ.து.ந.க.எண்.பி13/16447/08</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 11.06.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :365/2008 பொருள் எண்.76

**<u>ஓய்வூதியம்</u>**

திருமதி.எம்.வி.உமாராணி, துணை தகவல் தொடர்பு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கள் கடந்த 30.11.1997 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.1057/எ4/2008, நாள்.23.04.2008ல் தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.5015/– 01.12.1997 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.4745/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.1,70,009/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,42,337/–ஐ நேர்செய்து மீதம் தொகை ரூ.27,672/–ல் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.6918/–போக மீதம் ரூ.20754/–வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.2,09,744/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,98,447/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.11,297/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது கணவர் திரு.பி.ராமதுரை, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.3060/– வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 23.04.2008 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.12.1997 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**ம.அ4.ந.க.எண்.அ7/5782/2003**
**ஆணையாளர் அவர்களின் 20.05.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :366/2008 பொருள் எண். 77

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்த அனுமதி**

திரு.எம்.நடராஜன், துப்புரவு பணியாளர், இ.எம்.பி.எண்.529712, கோட்டம்–62, பகுதி–11, 06.08.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை இப்பணியாளர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்திற்காக விதிகள் 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுக் குறிப்பாணை தனியருக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பணியாளர் இக்குற்றச்சாட்டுக் குறிப்பாணையை பெற்றுக்கொண்டு தமது 10.11.2003 நாளிட்ட கடிதத்தில் தனியர் பணிக்கு வராத காலமான 06.08.2003 முதல் 05.11.2003 வரை சம்பளமில்லா விடுப்பு வழங்குமாறும், தனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் பணிக்கு வர இயலவில்லை எனவே தன்னை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தனியர் சமர்ப்பித்த விடுப்பு கடிதத்துடன் உள்ள மருத்துவ சான்றிதழின் பேரில் 92 நாட்கள் விடுப்பு கோரியதால் இது குறித்து மருத்துவ குழுவின் பரிந்துரை வேண்டி மருத்துவ சான்றிதழுடன் கீழ்ப்பாக்கம் பொது மருத்துவமனைக்கு கடிதம் அனுப்பப்பட்டு அறிக்கை அனுப்ப கோரப்பட்டது. இது குறித்து முதல்வர், கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சென்னை–10, அவர்கள் தமது 12.09.2005 நாளிட்ட கடிதத்தில் எப்பொருள் குறித்து மருத்துவ குழுவின் அறிக்கை தேவைப்படுகிறது. என தெரிவிக்க கோரப்படுகிறது. என தெரிவித்துள்ளார்கள்.

மேற்காணும் சூழ்நிலைகளுக்கிடையே இப்பணியாளர் மீதுள்ள ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து இப்பணியாளர் மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டு தனியர் 29.06.2006 அன்று பணியில் சேர்ந்துள்ளார். இப்பணியாளர் வயது முதிர்வு காரணமாக 30.06.2006 அன்று ஓய்வு பெற வேண்டுமாதலால் ஆணையாளர் அவர்கட்கு குறிப்பு சமர்ப்பித்து இத்தனியர் மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித குந்தகமின்றி நிலுவையில் வைத்து தனியரை 30.06.2006 பிற்பகல் முதல் ஓய்வு பெற அனுமதிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் பேரில் ஆணையாளரின் 30.06.2006 நாளிட்ட ஆணையின் பேரில் பணியாளர் 30.06.2006 அன்று பிற்பகல் பணியில் இருந்து வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டும், அன்னார் மீது உள்ள குற்றச்சாட்டுகள் கைவிடவும் ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திரு.எம்.நடராஜன், துப்புரவு பணியாளர், கோட்டம்–62, பகுதி–11, மண்டலம்–4, அவர்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 06.08.2003 முதல் 28.06.2006 வரை உள்ள காலம் ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2) தளர்வு செய்ய அரசின் தளர்வாணை பெற அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம..4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**ம.அ4.ந.க.எண்.அ5/189/06**
**ஆணையாளர் அவர்களின் 20.05.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :367/2008 பொருள் எண். 78

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்த அனுமதி**

திரு.நடராஜன், துப்புரவு பணியாளர், கோட்டம்–58, பகுதி–12, மண்டலம்–4, அன்னார் 30.06.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். அன்னாருக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதில் தனியர் 10.10.1992 முதல் 07.06.1994 வரை தொடர்ச்சியாக ஊதியமில்லா விடுப்பு துய்த்துள்ளதால் அரசின் தளர்வாணை பெற்று வரன்முறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் தற்காலிக ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பொருள் சம்மந்தமாக தெரிவிப்பது யாதெனில் தனியர் 21.03.1985 முதல் நிரந்தர துப்புரவு பணியாளராக பணி நியமனம் செய்யப்பட்டார். 30.06.2006 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். அன்னார் 10.10.1992 முதல் 07.06.1994 வரை ஊதியமில்லா விடுப்பு துய்த்துள்ளார். இப்பணியாளரின் பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்திட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு கடிதம் அனுப்பி அரசின் தளர்வாணை பெற்று வரன்முறைப்படுத்திய பிறகு தனியருக்கு முழு அளவிலான ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்கப்படவேண்டும்.

இந்நேர்வில் அரசின் தளர்வாணை பெற காலதாமதம் ஏற்படும் என்பதால் அன்னாரின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு தனியருக்கு ஆணையாளரின் ஆணை பெற்று குறைந்தபட்ச தற்காலிக ஓய்வூதியம் ரூ.1275/– மற்றும் பணிக்கொடை ரூ.22,712/– வழங்கப்பட்டது.

தனியர் 10.10.1992 முதல் 07.06.1994 வரை தொடர்ச்சியாக ஊதியமில்லா விடுப்பு மருத்துவ சான்றின் பேரில் வழங்கப்பட்டுள்ளது. என்பதற்கு தகுந்த ஆதாரம் ஏதும் பகுதி அலுவலகத்திலும், மண்டலத்திலும் கிடைக்கப்பெறவில்லை.

எனவே, பணிப்பதிவேட்டில் இருக்கும் பதிவின் அடிப்படையில் இத்தனியர் 10.10.1992 முதல் 07.06.1994 வரை ஊதியமில்லா விடுப்பு துய்த்துள்ளதற்கு அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, திரு. நடராஜன், துப்புரவு பணியாளர், கோட்டம்–58, பகுதி–12, மண்டலம்–4, 30.06.2006 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெற்றவருக்கு முழு அளவிலான ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்க நடவடிக்கை எடுப்பதற்கு அன்னார் 10.10.1992 முதல் 07.06.1994 வரை ஊதியமில்லா விடுப்பு துய்த்துள்ளார். மருத்துவ குழுமத்தின் அறிக்கையின் பேரில் 08.06.1994 அன்று மீண்டும் பணியில் சேர்ந்தார்.

எனவே, 10.10.1992 முதல் 07.06.1994 வரை ஊதியமில்லா விடுப்பு துய்த்துள்ளதற்கு அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து வரன்முறைப்படுத்த அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**ம.அ8.ந.க.எண்./0769/2008**
**ஆணையாளர் அவர்களின் 07.05.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :368/2008 பொருள் எண்.79

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்த அனுமதி**

திரு.ஜி.செல்வபதி மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர் கோட்டம்–117, பகுதி–23, மண்டலம்–8, என்பவர் 03.03.2005 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து இவர் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 9(2)ன்படி கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

1. இவர் 03.03.2005 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிமுறைக்கு புறம்பானது.
2. இவர் 03.03.2005 முதல் பணிக்கு வராததால் மலேரியா தூர்வாரும் பணிக்கும் பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தியது.
3. இவர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருப்பது இவருக்கு பணியின் மேலுள்ள அக்கறையின்மையை காட்டுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக்கொண்ட தனியர் தனது 13.07.2005 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டதால் அலுவலகத்திற்கு தகவல் ஏதும் தெரிவிக்க முடியவில்லை என்றும் தம்மை இம்முறை மன்னித்து மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளும்படியும் இனிவரும் காலங்களில் இது போன்று தவறுகள் நடக்காவண்ணம் நடந்து கொள்வதாகவும் விளக்கம் அளித்துள்ளார். ஆணையாளர் அவர்களின் ஆணைப்படி தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையினை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் அமர்த்த ஆணை வழங்கப்பட்டது. தனியர் 11.05.2006 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்தார்.

எனவே, பணியாளர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குறித்து விசாரணை செய்ய விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு 04.06.2006 மற்றும் 19.06.2006 அன்று விசாரணை மேற்கொண்டு தமது விசாரணை அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது நடைபெற்ற உள் விசாரணைகளில் நேரில் ஆஜராகி தனக்கு ஆதரவாக யாதொரு சான்று ஆவணமும் முன்னிலைப்படுத்தி தன் மீதுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்து கூற முற்படவில்லை.

மேலும் தனியர் தனக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு அவர் சமர்ப்பித்த விளக்கக் கடிதத்தில் தனக்கு 03.03.2005 முதல் உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டதால் தான் அலுவலகத்திற்கு தகவல் அளிக்க இயலவில்லை என்றும் இம்முறை மன்னித்து மீண்டும் பணி வழங்க வேண்டும் என்றும் இனிவரும் காலங்களில் இது போன்று தவறுகள் நேராவண்ணம் நடந்து கொள்வேன் என்றும் கூறியுள்ளார். இதன் மூலம் தனியர் தன் மீதான குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொள்வதாக தோன்றுகிறது. எனவும், இறுதியாக குற்றம் சாட்டப்பட்ட நபர் தொடர்ந்து பணியாற்றி வருவதாலும், அவர் மீதான மூன்று குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படுவதாக விசாரணை அறிக்கை சமர்பித்துள்ளார்.

மேற்படி விசாரணை அறிக்கை தனியருக்கு கூடுதல் விளக்கம் பெற வேண்டி 28.06.2006 அன்று சார்பு செய்யப்பட்டு பெறப்பட்ட 28.06.2006 நாளிட்ட கூடுதல் விளக்கத்தில் விசாரணை அறிக்கை மற்றும் குறிப்பாணையும் பெற்றுக்கொண்டேன் என்றும் அதிலுள்ள விவரங்களையும் அறிந்து கொண்டேன் எனவும், அதன் மீது எவ்விதமான விளக்கமும் தர இயலவில்லை என்றும், தன் மீதுள்ள ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து தன்னை 30.06.2006 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்கும்படி கேட்டுள்ளார்.

எனவே, திரு.ஜி.செல்வபதி மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர் கோட்டம்–117, பகுதி–23, மண்டலம்–8, அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அதற்கு பணியாளர் அளித்த விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை அதற்கு தனியரின் கூடுதல் விளக்கம் ஆகிய தொடர்புடைய ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் கடுமையான தண்டனைக்குரியதாக இருந்தாலும் தனியரின் நீண்ட காலப்பணியினை கருத்தில் கொண்டு கருணையுடன் அணுகி தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டும் தனியரை 30.06.2006 முதல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டவராக கருதி ஆணை வழங்கப்பட்டது. மேலும் தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 03.03.2005 முதல் 10.05.2006 வரை உள்ள காலம் ஓராண்டிற்கு மேல் உள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்த்தி அரசாணை பெற்ற பின்னர் பணிக்கு வராத காலத்தினை வரன்முறைப்படுத்த அரசுக்கு முன் மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.8
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்

## 30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :369/2008 பொருள் எண்.80

### பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்த அனுமதி

திரு.எம்.சீனிவாசலு, துப்புரவு பணியாளர், கோட்டம்–72, பகுதி–14, அவர்கள் 27.01.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை. காரணம் கோரி உதவி செயற்பொறியாளர், பகுதி–14, அவர்களால் குறிப்பாணை வழங்கப்பட்டது. இதற்கு தனியரிடமிருந்து விளக்கம் பெறப்படவில்லை. எனவே, 06.06.2002 நாளிட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணை சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| <u>குற்றச்சாட்டு 1 :</u> | முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும். |
| <u>குற்றச்சாட்டு 2:</u> | மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு விளக்கமளிக்காது உதாசீனப்படுத்தியுள்ளீர். |
| <u>குற்றச்சாட்டு 3 :</u> | துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர். |

மேற்கண்ட குற்றச்சாட்டு குற்றக்குறிப்பாணை தனியருக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட்டு விளக்கம் கேட்கப்பட்டது. அதனை 20.06.2002 அன்று பெற்றுக் கொண்ட பணியாளர் விளக்கம் ஏதுமளிக்கவில்லை.

தனியர் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையினை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு விசாரணை மேற்கொள்ள விசாரணை அலுவலராக திரு.எஸ்.இளஞ்செழியன், உதவி செயற்பொறியாளர், கோட்டம்–64, பகுதி–13, அவர்கள் நியமிக்கப்பட்டார். அவர் 09.09.2002ம் நாள் தனியரை விசாரணை மேற்கொண்டு விசாரணை அறிக்கையினை 09.09.2002ம் நாளிட்டு சமர்ப்பித்தார். அவற்றில் பணியாளர் மீது சுமத்தப்பட்ட 3 குற்றச்சாட்டுகளின் 2 குற்றச்சாட்டு நிருபணமாகியுள்ளது என தெரிவித்துள்ளார்.

விசாரணை அலுவலரின் அறிக்கையின் பேரில் தனியரின் கூடுதல் விளக்கம் கோரப்பட்டது. இது தொடர்பான குறிப்பாணையை 21.10.2002 அன்று பெற்றுக் கொண்ட பணியாளர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்ததால் தன்னால் பணிக்கு வர இயலவில்லை என்றும் தனக்கு எழுத படிக்க தெரியாததால் தன்னால் பணிக்கு வர இயலவில்லை. என்றும் தன்னை மன்னித்து மீண்டும் பணியில் சேர அனுமதி அளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதாகவும் இனிவரும் காலங்களில் மேற்கண்ட தவறை செய்யமாட்டேன் என்றும் கூறியுள்ளார்.

தனியர் அளித்த விளக்கத்தின் அடிப்படையில் அன்னாரை பணியில் சேர அனுமதிக்கப்பட்டு 20.02.2003 முதல் அவர் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் விசாரணையின் போது தனியர் அளித்த விளக்கம், விசாரணை அலுவலர் அறிக்கை, அதற்கு தனியரின் கூடுதல் விளக்கம் ஆகியவை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன.

தனியர் தான் காசநோயினால் பாதிக்கப்பட்டதால் அலுவலகத்திற்கு வரவில்லை என்றும் எழுதப்படிக்க தெரியாததால் அலுவலகத்திற்கு தெரிவிக்க இயலவில்லை என்றும் அவரால் தெரிவிக்கப்பட்டுள்ள விளக்கம் திருப்தியளிப்பதாகவும் ஏற்றுக் கொள்ளகூடியதாகவும் இல்லை. எழுத படிக்க தெரியவில்லையென்றாலும் வேறொரு நபர் மூலம் விடுப்பு கடிதம் எழுதி அலுவலகத்திற்கு அனுப்பிவைத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் இருந்தது இவரது உதாசீனத்தைக் காட்டுகின்றது. ஆகவே, தனியர் மீது சுமத்தப்பட்ட 3 குற்றச்சாட்டுகளும் நிருபிக்கப்படுகின்றன. நிருபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் மிகவும் கடுமையானவை.

ஆகவே, தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து நிருபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக ஊதிய உயர்வை மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து உத்திரவிடப்பட்டது.

மேலும் பணிக்கு வராத 27.01.2002 முதல் 19.02.2003 வரை உள்ள காலம் ஓராண்டிற்கு மேலுள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து வரன்முறைப்படுத்த தனியே நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணை வழங்கப்பட்டது.

**ம.அ5.ந.க.எண்.சி2/3799/02**

தனியர் பணியில் சேர்ந்த நாள் 06.01.1998ஆகும். அ.வி.18(1)ன்படி ஐந்து ஆண்டுகள் பணிமுடியாத ஒரு பணியாளருக்கு மருத்துவ சான்றிதழ் அடிப்படையில் (மற்றும்) கல்வி விடுப்பு அல்லாத பிற விடுப்புகள் தொடர்ந்து 06 மாதங்களுக்கு மேல் வழங்கக்கூடாது என்பதால் இவரை பொறுத்தமட்டில் 27.01.2002 முதல் பணிக்கு வராததால் அ.வி.18(1)ஐ தளர்வு செய்யப்படவேண்டும்.

ஆணையர் அவர்களின் 25.10.2007 நாளிட்ட ஆணையின்படி, தனியர் பணியில் சேர்ந்து 5 ஆண்டு முடிவடையாத நிலையில் அடிப்படை விதி 18(2)ஐ தளர்த்த உத்தரவிடப்பட்ட செயல்முறை ஆணைக்கு பகுதி மாற்றமாக அடிப்படை விதி 18(1)ஐ தளர்த்தி வரன்முறைப்படுத்தப்படும் என திருத்திய ஆணை வழங்கப்பட்டது.

மன்றத்தீர்மான எண்.334/03, நாள்.20.06.2003ல் திரு.எம்.சீனிவாசலு, துப்புரவு பணியாளர், கோட்டம்–72, மண்டலம்–5, என்பவர் 27.01.2002 முதல் 19.02.2003 வரை பணியிக்கு வராதது குறித்து வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(3)ஐ தளர்த்தி அரசின் தளர்வாணை பெற அனுமதிக்கப்பட்ட மன்றத் தீர்மானத்தை ரத்து செய்து முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் 27.01.2002 முதல் 19.02.2003 வரை ஓராண்டினை கடந்துள்ளதால் வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(1)ஐ தளர்வு செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

ம.அ7.ந.க.எண்.அ5/2588/2007
ஆணையாளர் அவர்களின் 03.06.2008 நாளிட்ட குறிப்பு

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :370/2008 பொருள் எண். 81

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்த அனுமதி**

திருமதி. எங்கம்மா, நிரந்தர துப்புரவு பணியாளர், பணி எண்.727826, கோட்டம்–101, பகுதி–19, மண்டலம்–7, அவர்கள் கடந்த 16.02.2003 முதல் எந்தவித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை. ஆகையால் இவர் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நேரிலும் தபால் மூலமாகவும், குறிப்பாணைகள் அனுப்பியதில் வீட்டில் யாரும் இல்லை என்று தபால் திரும்ப வந்தது. அதன் பின்னர் தனியர் நேரில் வந்து குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டார்.

தனியர் கடந்த 16.02.2003 முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமையால் சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் படி கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

1. தாங்கள் முன்னறிவிப்பின்றி 16.02.2003 முதல் பணிக்கு வராதது மற்றும் பணியின் மீது அக்கறையின்மை.
2. சென்னை மாநகராட்சி பணிக்கு குந்தகம் விளைவித்தது.
3. மேல் அலுவலர்களின் ஆணையை உதாசீனப்படுத்தியது.
4. இதுபோன்ற செயல்களில் அடிக்கடி ஈடுபடுவது.

மேற்கண்ட குறிப்பாணையை பெற்றுக்கொண்ட தனியர் அவர்களின் தன்விளக்க கடிதத்தில் தனக்கு திடீர் என்று உடல்நிலை பாதிக்கப்பட்டு சொந்த ஊரான ஆந்திர மாநிலம் சென்றதாகவும் அங்கு சென்ற பிறகு மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு நாட்டு மருந்து சாப்பிட்டதாகவும் தெரிவித்துள்ளார். இனிமேல் இது போல் தவறுகள் நடக்கா வண்ணம் பார்த்துக் கொள்வேன் என்றும் இந்த ஒருமுறை தன்னை மன்னித்து மீண்டும் பணியில் சேர்த்து கொள்ளுமாறு கோரியதின் அடிப்படையில் தனியரை மீண்டும் பணியில் சேர்க்க இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் ஆணைவேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் 23.06.2004 நாளிட்ட ஆணையின்படி, தனியர் முன்னறிவிப்பின்றி 16.02.2003 முதல் பணிக்கு வராத குற்றத்திற்காக சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணைவிதி 9(2)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து எவ்வித குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டார்.

தனியர் 16.07.2004 முதல் பணியில் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டார். தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்குவராத காலம் 16.02.2003 முதல் 15.07.2004 வரை 516 நாட்கள் ஆகும்.

தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவர விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு நேர்முக விசாரணை நடைபெற்றது.

**தனியரின் விளக்கம்**

1. நான் 16.02.2003 முதல் உடல்நலம் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டதால் பணிக்குவர இயலவில்லை. மேலும் இது போன்று ஒருபோதும் நான் என் பணியில் தவறு இழைத்தது கிடையாது. ஐயா அவர்கள் தயவு கூர்ந்து இந்த ஒரு முறை மன்னித்து பணிக்கு எடுத்து கொள்ளுமாறு கோரியுள்ளார்.
2. சென்னை மாநகராட்சி, பணிக்கு ஒரு போதும் குந்தகம் விளைவிக்க எண்ணியது இல்லை. மஞ்சள்காமாலை நோயினால் பாதிக்கப்பட்டதால் தான் பணிக்கு வர இயலாமல் போய்விட்டது. நான் பணி செய்த காலங்களில் ஒழுங்கான முறையில் பணி செய்துள்ளேன் என தெரிவித்துள்ளார்.
3. மேல்அலுவலர்களின் ஆணையை உதாசீனப்படுத்த எண்ணியது இல்லை. மஞ்சள்காமாலை நோய்க்கு நாட்டு மருந்து சாப்பிட ஊருக்கு சென்றுவிட்டதால் அலுவலக குறிப்பாணைக்கு குறித்த நேரத்தில் பதில் அளிக்க முடியவில்லை. விவரம் அறிந்த உடனே நான் அலுவலகத்திற்கு சென்று குறிப்பாணையை பெற்றுக் கொண்டேன். நான் இதுநாள் வரையில் மேல் அலுவலர்களின் ஆணையை மதித்து நடந்து வருகிறேன்.

**ம.அ7.ந.க.எண்.அ5/2588/2007**

4. நான் இது போன்று அடிக்கடி பணிக்குவராமல் இருந்தது கிடையாது. இதுவே முதல் தடவை மஞ்சள் காமாலை நோயினால், மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டு நடக்ககூட முடியாமல் இருந்ததால் தான் பணிக்கு வர இயலவில்லை. இதுபோன்று இனிவரும் காலங்களில் நடக்கா வண்ணம் நடந்து கொள்ளுகிறேன் என்று உறுதியளிக்கிறேன்.

**விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கை**

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தனக்கு உடல் நலம் சரியில்லை என்றும் தன்னை கவனிப்பதற்கு யாரும் இல்லைஎன்றும் மஞ்சள் காமாலை காரணமாக சிகிச்சை மேற்கொண்டு அதனால் மேலும் பலவீனமடைந்து அன்றாடவேலை செய்ய முடியாமல் ஆந்திராவிற்கு சென்று நாட்டு வைத்தியம் செய்து உடம்பு குணமானபின் 16.07.2004 முதல் பணிக்கு ஆஜராகி வருவதாகவும் தெரிவித்தார். இம்முறை மன்னிக்கும்படி கோரினார்.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக 12.05.2006 அன்று நடைபெற்ற உள்விசாரணையின் போது குற்றச்சாட்டுகளை ஒப்பு கொள்ளுவதாக குற்றச்சாட்டு நபர் தெரிவித்தார். மேலும் 02.06.2006 அன்று கடைசியாக நடைபெற்ற உள்விசாரணையில் போது குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டு தன்னை மன்னிக்குமாறு மன்னிப்பு கோரினார். ஆகவே அவர் மீது நிர்வாகம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு எண்கள் 1,2,3, மற்றும் 4 ஆகியவை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகிறது என தெரிவித்துள்ளார்.

விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கையின் நகல் தனியருக்கு சார்பு செய்யப்பட்டு விளக்கம் பெறப்பட்டது. தனியரின் நாள் குறிப்பிடாத கடிதத்தில் தன்னுடைய தவறுகளை மன்னிக்கும் படியும் இனிமேலும் இதுபோல் நடந்து கொள்ளமாட்டேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமையால் அன்னார் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு ஆணையாளரின் 03.04.2007 நாளிட்ட இறுதி ஆணை பெறப்பட்டது. தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதகாலம் 16.02.2003 முதல் 15.07.2004 வரை ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)யை தளர்வு செய்ய அரசுக்கு முன் மொழிவுகள் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அனுப்பி அரசாணை பெற்று வரண்முறைப்படுத்தவும், தனியரின் ஆண்டு ஊதிய உயர்வு மூன்று ஆண்டுகள் திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்யவும் உத்தரவு பெறப்பட்டது.

இவ்வாணையின் அடிப்படையில் திருமதி. எங்கம்மா, துப்புரவு பணியாளர், கோட்டம்–101, பகுதி–19, மண்டலம்–7, அவர்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் 16.02.2003 முதல் 15.07.2004 வரை ஓராண்டை கடந்து இருப்பதால் அடிப்படை விதி 18(2)ணை தளர்வு செய்ய அரசின் தளர்வாணை பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ2/40940/2005**
**ஆணையாளர் அவர்களின் 07.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :371/2008 பொருள் எண்.82

**பணியமைப்பு**

மன்றத் தீர்மான எண்.193/2006, நாள்.30.05.2006ல், 2005–2006ம் ஆண்டிற்கான உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு 7 நபர்கள் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கியது.

இத்தெரிவுப்பட்டியலில் திரு.ஜி.புருஷோத்தம் என்பவரது பெயர் வரிசை எண்.2ல் இடம் பெற்றது. இவர் மீது விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்ககத்தில் நிலுவையில் இருக்கும் விசாரணையின் நிலை குறித்து அறிக்கை பெற்று இவர் மீது குற்றச்சாட்டு ஏதும் பதியப்படாமல் இருக்கும் பட்சத்தில் இவருக்கு உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தெரிவுப்பட்டியலுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கியது.

06.06.2006 தேதியிட்ட விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்குநரது கடித எண்.டிஈ4/06/எல்பி/ சிஎஸ்யூ–IIIல் திரு. ஜி. புருஷோத்தம் என்பவர் மீது விசாரணை உள்ளதால் இவருக்கு தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கலாம் என்றும் இவர் குற்றமற்றவர் எனத் தெரியவரின் இவரது பதவி உயர்வுக்கான பதவியில் முன்தேதியிட்டு பணிவரன்முறைப்படுத்தலாம் என்று அறிக்கை அளித்தது.

மேற்படி விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்குநரது கடிதத்தின் அடிப்படையில் திரு.ஜி.புருஷோத்தம் என்பவருக்கு 16.06.2006 தேதியிட்ட செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/40940/05ன்படி விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்ககத்தில் நிலுவையிலுள்ள விசாரணையின் இறுதி முடிவில் குற்றமற்றவர் எனத் தெரியவரின் இவரது பதவி உயர்வுக்கான பதவியில் முன்தேதியிட்டும், அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும் இவரது பணிவரன் முறைப்படுத்தப்படும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு தற்காலிகமாக உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மன்ற தீர்மான எண்.373/2006, நாள்.31.08.2006ல் 4வது மண்டலத்தில் வரிமதிப்பீட்டாளராக பணிபுரிந்த திரு.எஸ்.சம்பத்குமார் என்பவர் மீது துறை சம்பந்தமாக குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டதால் இவரது பெயரினை 2005–2006ம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் இவரது பெயர் பணி மூப்பின்படி வ.எண்.2ல் திருத்தியமைக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டதால் திரு.ஜி.புருஷோத்தம் என்பவரது பெயர் தெரிவுப்பட்டியலில் வ.எண்.3ல் இடம்பெற்றது.

அரசாணை(டி) எண்.203, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.15.05.2008ல் திரு.ஜி.புருஷோத்தம் முன்பு வரிமதிப்பீட்டாளர், மண்டலம்–4, தற்போது உதவி வருவாய்ா அலுவலர் மற்றும் திரு.கே.தங்கபழம், உதவி வருவாய் அலுவலர் மண்டலம்–4, ஆகியோர் சென்னை–49, வில்லிவாக்கம், செங்குன்றம் சாலை (வடக்கு) கதவு எண்.28/153க்கான சொத்திற்கு வரிமதிப்பீடு செய்வதற்காக லஞ்சம் கேட்டதாக திரு.ப்பி. ஜேம்ஸ் என்பவர் அளித்த புகாரினை உறுதிபடுத்த இயலாததால் இவர்கள் மீதான சாட்டுரையினை (Allegation) கைவிடலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

திரு.ஜி.புருஷோத்தம், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்.8, (முன்பு வரிமதிப்பீட்டாளர், மண்டலம்–4) என்பவர் வயது முதிர்வு அடிப்படையில் 31.05.2008 அன்று ஓய்வு பெற்றார். இவருக்கு நிபந்தனைகளுடன் உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதால், இவரது பதவி உயர்வுக்கு அரசின் உறுதியாக்கம் பெறவேண்டும். அரசின் உறுதியாக்கம் பெறாததால் இவருக்கு உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்படாமல் உள்ளது. இவர் மீதுள்ள புகாரிணை உறுதிபடுத்த இயலாததால் இவர் மீதான சாட்டுரையினை (Allegation) கைவிடலாம் என்று அரசு ஆணையிட்டுள்ள நிலையில் இவருக்கு 16.06.2006 தேதியிட்ட செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/40940/05ல் உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டதை இறுதி செய்து, இவர் அப்பதவியில் சேர்ந்த நாள். 21.06.2006 முதல் அரசின் உறுதியாக்கம் பெற மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**<u>சு.து.ந.க.எண்.சி1/4849/2005</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 01.07.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :372/2008 பொருள் எண்.83

**<u>பணிவரன்முறைப்படுத்துதல்</u>**

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பெறப்பட்ட பட்டியலில் இருந்து தேர்வு செய்யப்பட்ட டாக்டர்.ஆர்.மோதிலால் என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.எ4/73544/79, நாள்.24.03.1980ன்படி சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் 05.04.1980 முதல் மருத்துவ அலுவலராக தற்காலிக பணி நியமனம் செய்யப்பட்டார். இவரின் பணி நியமனத்திற்கு அரசின் உறுதியாக்கம் வேண்டி அரசிற்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டன.

அரசாணை (ப) எண்.617 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை, நாள்.20.12.2007ன் வாயிலாக தனியரின் பணி நியமனத்திற்கு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளது. தனியர் வகிக்கும் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்ததப்பட்டுள்ளதால் மன்றத்தின் அனுமதி பெற்றே பணிகள் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, டாக்டர் டி.ஆர்.மோதிலால் என்பவர் சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் 05.04.1980ல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதால் 05.04.1980 முதல் இவரது பணியினை வரன்முறைப்படுத்திட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**<u>வ.து.ந.க.எண்.அ1/6661/2008</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 03.07.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :373/2008 பொருள் எண்.84

**<u>பணியமைப்பு</u>**

மன்றத் தீர்மான எண்.312/07, நாள்.22.06.2007ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான இறுதி தெரிவு பட்டியலிலிருந்து திரு.டி.டபிள்யு. ஜெயக்குமார் தனசிங், அவர்கள் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு கூடுதல் வருவாய் அலுவலராக ரூ.12000–375–16500 என்ற சம்பள விகிதத்தில் திரு.எஸ்.சந்திரசேகரன், கூடுதல் வருவாய் அலுவலர், அவர்கள் 31.12.2007ல் வயது முதிர்வு ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட்டு 07.01.2008 நாளிட்ட ஆணையரின் செயல்முறை ஆணைப்படி கூடுதல் வருவாய் அலுவலராக பணிநியமனம் செய்யப்பட்டார். இவர் 08.01.2008 முற்பகல் முதல் கூடுதல் வருவாய் அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

அரசாணை எண்.230, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 30.05.2008ல் உதவி வருவாய் அலுவலர் திரு.டி.டபிள்யு. ஜெயக்குமார் தனசிங் என்பவருக்கு கூடுதல் வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கியதற்கு அரசு உறுதியாக்கம் வழங்கி உள்ளது. இவ்வரசாணையினை தொடர்ந்து தனியரது பணி கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். கூடுதல் வருவாய் அலுவலர் பதவி வகுப்பு 1 (பி)ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் பணிவரன்முறைப்படுத்த மன்றத்தின் ஒப்புதல் பெற்று பணிவரன் முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, திரு.டி.டபிள்யு.ஜெயக்குமார் தனசிங், உதவி வருவாய் அலுவலர், என்பவரின் பணிகளை கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் பொறுப்பேற்றுக் கொண்ட நாள். 08.01.2008 முற்பகல் முதல் பணிவரன் முறைப்படுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

## 30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :374/2008 பொருள் எண்.85

### பணியமைப்பு– தகுதிகாண் பருவம்

டாக்டர் திரு.டி.வி.ரமேஷ், அவர்கள் மருத்துவ அலுவலராக சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/26342/1978, நாள்.24.05.1979ன்படி 01.06.1979 முதல் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டார். தனியரது தற்காலிக பணி நியமனம் இவர் மருத்துவ அலுவலராக பொறுப்பேற்ற நாளான 01.06.1979 முதல் அரசாணை நிலை எண்.106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை, நாள்.06.08.2007ன் வாயிலாக அரசின் உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மன்றத் தீர்மான எண்.527/2007, நாள்.29.10.2007ன்படி தனியர் சென்னை மாநகராட்சி, ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/5991/2003, நாள்.19.11.2007ன்படி அவருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 01.06.1979 முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தனியரின் தற்காலிக பணி நியமனத்திற்கு அரசின் உறுதியாக்கம் வழங்கப்பட்டதை தொடர்ந்து இவர் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட வேண்டும்.

தனியர் மருத்துவ அலுவலர் பதவியில் இரண்டு ஆண்டு பணி முடித்த விவரமும், அவருக்கு தகுதிகாண் பருவம் அறிவிக்கப்பட வேண்டிய நாளும் பின்வருமாறு:–

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | முதன் முதலில் பணி நியமனம் ஆன நாள் | இரண்டு ஆண்டு பணி முடித்த நாள் |
|---|---|---|---|
| 01 | திரு.டி.வி.ரமேஷ்<br>மருத்துவ அலுவலர் | 01.06.1979 | 31.05.1981 |

| துய்த்த விடுப்பு விவரம் | விசாரணை அல்லது ஒழுங்கு நடவடிக்கை விவரம் | தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட வேண்டிய நாள் | குறிப்புரை |
|---|---|---|---|
| ஏதுமில்லை | ஏதுமில்லை | 01.06.1981 | |

கணக்கு அலுவலர்–6, அவர்கள் தனது 12.05.2008 தேதிய குறிப்புரையில், தனியருக்கு 01.06.1981 முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்க துறை, மற்றும் நிர்வாக ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு–2ன் கீழ் வருகிறது. இப்பதவியில் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்க அரசாணை எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்.08.09.1982ன்படி மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

எனவே, திரு.டி.வி.ரமேஷ், மருத்துவ அலுவலர், ஐஸ்அவுஸ், தோல் மருந்தகம், மண்டலம்–6, அவர்களை 01.06.1981 அன்று தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/697/2001**
**ஆணையாளர் அவர்களின் 25.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :375/2008 பொருள் எண்.86

**தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க அனுமதி**

வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பெயர் பட்டியலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர். திருமதி.ஆர்.எஸ்.லட்சுமி, அவர்கள் உதவி அறுவை மருத்துவராக முந்தைய மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலத்துறையின் சிறப்பு அதிகாரி மன்றத்தின் ஒப்புதலுக்குட்பட்டும் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும் தற்காலிகமாக டாக்டர் எஸ்.ஆர்.பவளமல்லிகை, உதவி அறுவை மருத்துவர் விடுப்பில் சென்ற காலிப்பணியிடத்தில் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு நாள்.02.03.1985ன்படி பணியமர்த்தப்பட்டு 08.03.1985லிருந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

டாக்டர். திருமதி.ஆர்.எஸ்.லட்சுமி, அவர்களை உதவி அறுவை மருத்துவராக நியமித்து 02.03.1985 நாளிட்ட ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட செயல்முறை ஆணைக்கு மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்டது. மன்றத்தீர்மான எண்.204/2007, நாள்.28.05.2007.

தனியர் உதவி அறுவை மருத்துவ அலுவலராக 08.03.1985 முதல் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டதற்கு அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டது. அரசாணை (ப) எண்.578, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை நாள்.23.11.2007

தற்போது டாக்டர். திருமதி.ஆர்.எஸ்.லட்சுமி, அவர்கள் உதவி அறுவை மருத்துவ அலுவலராக 08.03.1985ல் பணி நியமனம் செய்ததற்கு பணிவரன்முறைப்படுத்தி தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டும்.

அரசாணை எண்.161–ன்படி 28.08.1998ற்கு முன் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டவர்களுக்கு மருத்துவ தொகுப்பு தேர்ச்சி மற்றும் செயல் அலுவலருக்கான தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் மேற்கூறப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெறப்படவேண்டும். டாக்டர். திருமதி.ஆர்.எஸ்.லட்சுமி, அவர்கள் செயல் அலுவலருக்கான தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

தனியர் 19.03.1987ல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க கணக்கு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களின் கருத்திசை பெறப்பட்டது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய தேதி | தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டிய தேதி |
|---|---|---|---|
| 01 | டாக்டர். திருமதி.ஆர்.எஸ்.லட்சுமி, உதவி அறுவை மருத்துவர் | 08.03.1985 | 19.03.1987 |

எனவே, டாக்டர். திருமதி.ஆர்.எஸ்.லட்சுமி, உதவி அறுவை மருத்துவர் அவர்கள் 08.03.1985 முதல் மருத்துவர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தி, 19.03.1987 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி5/1740/2008**
**ஆணையாளர் அவர்களின் 25.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :376/2008 பொருள் எண்.87

**தேர்வுநிலை வழங்க அனுமதி**

டாக்டர்.ஏ.சுகன்யாதேவி, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை அவர்கள் 15.12.1997 அன்று சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்தார். இவரது பணிநியமனத்திற்கு அரசின் உறுதியாக்கம் வழங்கியதை தொடர்ந்து செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/11424/96, நாள்.23.12.2001ன்படி இவரது பணிகள் மருத்துவ அலுவலர் பணியில் 15.12.1997 முதல் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. 25.12.1999 முதல் தகுதிகாண் பருவம் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இவர் மருத்துவ அலுவலர் பதவியில் 14.12.2007 பிற்பகல் அன்று 10 ஆண்டு பணி முடித்துள்ளார். இதனால் 15.12.2007 அன்று தேர்வு நிலைக்கு செல்ல தகுதி பெற்றுள்ளார்.

12.05.2008 நாளிட்ட கணக்கு அலுவலர் (சுகாதாரம்) அவர்களின் குறிப்புரையில் தனியர் 15.12.2007 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை வழங்கி 9100–275–14050 என்ற தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியம் 11,025/–என நிர்ணயம் செய்யலாம் என கருத்து தெரிவித்துள்ளார். மேலும் இம்மருத்துவ அலுவலருக்கு தேர்வு நிலை வழங்க ஊதிய நிர்ணயம் செய்யும் பொருட்டு செயல்முறை ஆணை எண்.பொ.து.ந.க.எண்.சி3/471/99, நாள்.13.01.1999ன்படி மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் எனவும் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவ அலுவலர் மீது துறை சார்ந்த மற்றும் விழிப்புக்குழு சார்ந்த குற்றச்சாட்டுகள் மற்றும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை. தண்டனை ஏதும் இல்லை. இவர் வகிக்கும் பதவி சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ன் கீழ் வருகிறது. இதனால் மன்றத்தின் அனுமதி பெற்று தேர்வு நிலை வழங்கப்படவேண்டும்.

எனவே, டாக்டர்.ஏ.சுகன்யா தேவி, மருத்துவ அலுவலர், அவர்கள் இப்பதவியில் 10 ஆண்டுகள் பணிமுடித்தமையால் 15.12.2007 முதல் அன்னாருக்கு தேர்வு நிலை வழங்கி தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.9100–275–14050ல் ரூ.11025/– என அடிப்படை ஊதிய நிர்ணயம் செய்ய நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**பே.சா.து.ந.க.எண்.பி5/3465/2007**
**ஆணையாளர் அவர்களின் 23.05.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :377/2008 பொருள் எண்.88

**தேர்வு நிலை ஊதியம் வழங்க அனுமதி**

திரு.பி.நந்தகுமார், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை, அவர்கள் தனது 16.11.2007 நாளிட்ட கடிதத்தில், தனக்கு உதவி செயற்பொறியாளர், பதவியில் 10 ஆண்டுகள் பணிகாலம் முடிந்தவுடன் 01.06.2003 முதல் தேர்வு நிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் வழங்கி, அவ்வூதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் 01.06.2003 முதல் செய்யப்பட்டது என்றும், தற்போது அரசு ஆணை (நிலை) எண்.210 ப.ம.நி.சீ(எஸ்) துறை, நாள்.11.03.1987ன்படி தேர்வு நிலை உதவி பொறியாளர் பதவியில் பணியாற்றிய காலத்தை சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் பணிகாலத்தோடு சேர்த்து 10 ஆண்டுகள் கணக்கீட்டு 02.07.1999 முதல் தேர்வு நிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதத்தில் தேர்வு நிலை ஊதியத்தை மறு நிர்ணயம் செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது சம்மந்தமாக, சமர்ப்பித்துக்கொள்வது யாதெனில் தனியர் உதவி பொறியாளராக 02.07.1979 முதல் சென்னை மாநகராட்சி பணியில் நியமனம் செய்யப்பட்டார். இவருக்கு உதவி பொறியாளர் பதவியில் 10 ஆண்டுகள் பணி முடிந்தவுடன் 02.07.1989 முதல் தேர்வு நிலை உதவி பொறியாளர் ஊதிய விகிதம் ரூ.2200–75–2800–100–4000யை வழங்கப்பட்டு இவ்வூதிய விகிதத்தில் ஊதியமும் நிர்ணயம் செய்யப்பட்டது. பிறகு தனியர் உதவி செயற்பொறியாளராக சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/14931/1993, நாள்.31.05.1993ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக ரூ.2200–75–2800–100–4000 என்ற ஊதிய விகிதத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. இவர் 01.06.1993 முதல் உதவி செயற்பொறியாளராக பணியில் சேர்ந்தார். தனியரின் தற்காலிக உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை அரசாணை (நிலை) எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை, நாள்.31.03.2001ல் 01.06.1993 முதல் உறுதியாக்கம் செய்து ஆணையிட்டது. இவ்வரசாணையின் அடிப்படையில் தனியரின் தற்காலிக பதவி உயர்வினை 01.06.1993 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் வரன்முறை செய்து சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/13610/1998, நாள்.17.08.2002 மூலம் ஆணை வழங்கப்பட்டது. ஆகையால், தனியர் 10 வருடங்கள் உதவி செயற்பொறியாளர், பதவியில் பணியாற்றிய பிறகு 01.06.2003 முதல் மன்றத் தீர்மான எண்.405/2004, நாள்.29.10.2004 மற்றும் 46/2005, நாள்.14.03.2005ன்படி தனியருக்கு தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.9100–275–14050யை வழங்கியும், அவ்வூதிய விகிதத்தில் ரூ.11300/–ஐ 01.06.2003 முதல் ஊதியம் நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

தற்போது அரசாணை (நிலை) எண்.210, ப.ம.நி.சீ.துறை, நாள்.11.03.1987 மற்றும் 28.09.1999 நாளிட்ட அரசு கடிதத்தில் தேர்வு நிலை கீழ் நிலை பதவியின் ஊதிய விகிதமும் (Selection Grade Scale of pay of Substantive Post) உயர் பதவியின் சாதாரண நிலையின் ஊதிய விகிதமும் (Ordinary Grade Scale of pay of Officiating Post) ஒரே விகித நிலையில் (Identical Scale of Pay) இருந்தால் தேர்வு நிலை கீழ் நிலை பதவியில் பணியாற்றிய காலத்தை உயர் பதவியில் பணியாற்றிய காலத்தோடு சேர்த்து 10 ஆண்டுகள் கணக்கிட்டு உயர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதம் தனியரின் பணிக்காலத்தில் ஒரு முறை வழங்கலாம் என அரசு ஆணை வழங்கியுள்ளது. இவ்வரசாணை மற்றும் அரசு கடிதத்தின்படி ஐந்தாவது ஊதியக்குழு மற்றும் தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதம் 1998ன்படி தேர்வுநிலை உதவி பொறியாளர் ஊதிய விகிதமும், சாதாரண நிலை உதவி செயற் பொறியாளர் ஊதிய விகிதமும் (அதாவது) ரூ.2200–75–2800–100–4000 மற்றும் ரூ.8000–275–13500 என்ற ஒரே விகித நிலையில் இருப்பதால் தனியர் கீழ்நிலை பதவியான தேர்வுநிலை உதவி பொறியாளர் பதவியில் 02.07.1989 முதல் 31.05.1993 வரை பணியாற்றிய 3 வருடம் 10 மாதம் 30 நாட்களை உயர் பதவியான சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் பதவியில் 6 வருடம் 1 மாதம் 1 நாட்களுடன் சேர்த்து 10 வருடங்கள் கணக்கிட்டு 02.07.1999 முதல் தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதம் வழங்க வேண்டும். மேற்கண்ட காலத்தில் தனியர் எந்த விதமான சம்பள மில்லாத விடுப்பும் துய்க்க வில்லை. ஆகையால், இவருக்கு 01.06.2003க்கு பதிலாக 02.07.1999 முதல் உதவி செயற் பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதம் அரசாணையின்படி 9100–275–14050யை வழங்க வேண்டும்.

மேலும், தனியர் சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர், பதவி ஊதிய விகிதம் ரூ.8000–275–13500ல் ரூ.10200/–ஐ அடிப்படை ஊதியமாக 02.07.1999 அன்று பெற்றுள்ளார். இவருக்கு நடைமுறையில் உள்ள அரசாணைகளின் படி சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதத்தில் ஒரு ஊதிய உயர்வு அளித்து இவருடைய அடிப்படை ஊதியத்தை ரூ.10475/– என தேர்வு

நிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.9100–275–14050ல் 02.07.1999 முதல் ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும்.

மேலும் கணக்கு அலுவலர் (பணிகள்) அவர்கள் 05.05.2008 நாளிட்ட குறிப்பில் ஏற்கனவே பெறப்பட்ட மன்ற தீர்மானங்களை ரத்து செய்து திரு.பி.நந்தகுமார், அவர்களுக்கு உதவி செயற்பொறியாளர், பதவியில் தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.9100–275–14050ல் ரூ.10475/–யை அடிப்படை ஊதியமாக 02.07.1999 முதல் மன்றத்தின் அனுமதியுடன் வழங்கலாம் எனக்கருத்துரை வழங்கியுள்ளார்.

மேலும், உதவி செயற்பொறியாளர் பதவி சென்னை மாநகராட்சி பொறியாளர் துணை விதிகளின்படி இரண்டாம் நிலையின் கீழ்வருவதால் திரு.பி.நந்தகுமார், அவர்களுக்கு மன்றத்தின் (நியமனக்குழு மூலமாக) ஒப்புதலுடன் தேர்வுநிலை உதவி செயற் பொறியாளர் ஊதிய விகிதம் வழங்க வேண்டும்.

எனவே, திரு.பி.நந்தகுமார், செயற் பொறியாளர், பேருந்து சாலைகள் துறை, அவர்களுக்கு உதவி செயற்பொறியாளர், பதவியில் உதவி செயற் பொறியாளரான தேர்வுநிலை பதவி ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ல் 01.06.2003 முதல் புக அனுமதித்து ரூ.11300/– என ஊதிய நிர்ணயம் செய்ய மன்றத்தின் 29.10.2004 மற்றும் 14.03.2005 நாளிட்ட தீர்மான எண்கள்.405/2004 மற்றும் 46/2005ல் ஒப்புதல் பெறப்பட்ட தீர்மானங்களை ரத்து செய்து, அரசாணை (நிலை) எண்.210, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள்.11.03.1987 மற்றும் அரசு கடித எண்.168, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எஸ்) துறை, நாள். 28.09.1999ல் வழங்கியுள்ள ஆணையின்படி தனியருக்கு தேர்வு நிலை உதவி பொறியாளர் பதவியில் பணியாற்றிய காலத்துடன் சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர், பதவியில் பணியாற்றிய காலத்தை சேர்த்து 02.07.1999 முதல் உதவி செயற் பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.9100–275–14050ஐ வழங்கவும், அவ்வூதிய விகிதத்தில் ரூ.10475/– என்று ஊதியத்தை மறு நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**ம.அ3.ந.க. எண். சு1/134/2008**
**ஆணையாளர் அவர்களின் 11.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :378/2008 பொருள் எண். 89

**சிறப்பு நிலை ஊதியம் வழங்க அனுமதி**

டாக்டர்.ஆர்.இந்திராணி, மருத்துவ அலுவலர் மண்டலம்–3, அவர்கள் 16.04.1988 முதல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டார். அன்னார் அப்பதவியில் 20 ஆண்டு கால பணி நிறைவு செய்து உள்ளார். அன்னார் தற்சமயம் இப்பதவியில் தேர்வு நிலை கால ஏற்றமுறை ஊதிய விகிதம் ரூ.9100–275–14050ல் அடிப்படை ஊதியமாக ரூ.12400/– பெற்று வருகிறார். அன்னார் சிறப்பு காலமுறை ஏற்ற ஊதிய விகிதம் ரூ.10000–325–15200ல் அனுமதித்து ஊதியம் நிர்ணயம் செய்ய தகுதியுள்ளவராகிறார். அன்னாருக்கு 16.04.1998 முதல் தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக தெரிவிப்பது யாதெனில் அன்னார் மீது துறை ரீதியான விசாரணைகளோ குற்றச்சாட்டுகளோ மற்றும் விழிப்புத்துறை மாநில ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையிலோ விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை. சம்பளமில்லா விடுப்பு ஏதும் எடுக்கவில்லை.

அன்னாருக்கு அரசு ஆணை எண்.2280 சுகாதாரம் மற்றும் இளநிலை மருத்துவம் ஹோமியோபதி குடும்ப நலம் நாள்.25.11.1988யில் மருத்துவ அலுவலராக பதவியில் சேர்ந்த நாளான 16.04.1988 முதல் அரசின் உறுதி ஆக்கம் பெறப்பட்டுள்ளது.

அன்னாரை மருத்துவ அலுவலர் பதவியில் 16.04.2008 முதல் சிறப்பு நிலை ஊதிய விகித கால ஏற்ற முறை ரூ.10000–325–15200ல் அனுமதித்து அடிப்படை ஊதியம் ரூ.12600+75 தனிஊதியம் என நிர்ணயம் செய்து மன்றத்தின் அனுமதி பெற்று வழங்க வேண்டியுள்ளது.

எனவே, டாக்டர்.ஆர்.இந்திராணி, மருத்துவ அலுவலர் பதவியில் 16.04.2008 முதல் சிறப்பு நிலை ஊதிய விகித கால ஏற்ற முறை ரூ.10000–325–15200ல் அனுமதித்து அடிப்படை ஊதியம் ரூ.12600+75 த.ஊதியம் என நிர்ணயம் செய்து ஊதியம் வழங்கிட மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்.4/1203/2008**
**ஆணையாளர் அவர்களின் 04.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :379/2008 பொருள் எண்.90

**வெளி நாடு செல்ல தடையின்மை சான்று வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறை, சைதாப்பேட்டை மண்டல அலுவலராக பணி செய்து வரும் டாக்டர்.திருமதி.பானுமதி ஈஸ்வரன், அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசிக்கும் உடல் நலம் பாதிக்கப்பட்ட தன் மகனை காண வேண்டியுள்ளதால் 19.05.2008 முதல் ஈட்டிய விடுப்பில் 60 நாட்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்குமாறு 04.04.2008 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டு விண்ணப்பித்துள்ளார்.

தனியர், சென்னை மாநகராட்சியில், 02.06.1979ல் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு பணி செய்து வருகிறார். பின்பு 16.12.2004 முதல் மண்டல அலுவலராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தி தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி விழிப்புத் துறையிலிருந்தும் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர், பாதுகாப்பு பிரிவு குற்றப்புலனாய்வு அலுவலகத்திலிருந்தும் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் தனது 04.04.2008 நாளிட்ட கடிதத்தில், தனது பயணச் செலவு முழுவதும் தனது கணவர் ஏற்பதாக தெரிவித்து அதற்கான ஒப்புதல் கடிதம் பெற்று சமர்ப்பித்துள்ளார்.

இவர் பதவி வகுப்பு–2ன் கீழ்வருவதால் அயல்நாடு பயணத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். தற்போது மன்றத்தின் ஒப்புதல் பெற போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அயல்நாடு பயணம் மேற்கொள்ள ஆணையரின் 14.05.2008 தேதியிட்டு பின்வரும் நிபந்தனைக்குட்பட்டும் அனுமதி வழங்கப்பட்டது.

**நிபந்தனைகள் பின்வருமாறு:–**

01. வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும் போது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்து கொள்ளக்கூடாது.
02. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இதுபோன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
03. வெளிநாடு செல்லும் பயணச் செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
04. அவர் வெளிநாட்டில் இருக்கும் போது சென்னை மாநகராட்சி பணியைத் துறக்க விண்ணப்பிக்க கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.
05. இவர் வெளிநாடு செல்ல 19.05.2008 முதல் 17.07.2008 வரை 60 நாட்கள் மட்டும் ஈட்டிய விடுப்பு அனுமதிக்கப்படுகிறது.
06. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையர் அவர்களின் முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

மேற்கண்டுள்ள நிபந்தனைகளுடன் இவ்வலுவலருக்கு வழங்கப்பட்ட தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளில் இருந்து 6 மாதங்களுக்கு அவரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு செல்ல மட்டுமே பொருந்தும் என தெரிவித்து டாக்டர்.திருமதி.பானுமதி ஈஸ்வரன், மண்டல அலவலர் அவர்கள் உடல் நலம் சரியில்லாத தன் மகனை காண்பதற்கு அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு பயணம் செய்வதற்கு தடையின்மை சான்றிதழ் வழங்கியதற்கும் மற்றும் 19.05.2008 முதல் 17.07.2008 வரை 60 நாட்கள் ஈட்டிய விடுப்பில் செல்ல ஆணை வழங்கியதற்கும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்.4/1268/2008**
**ஆணையாளர் அவர்களின் 06.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :380/2008 பொருள் எண்.91

**வெளி நாடு செல்ல தடையின்மை சான்று வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறை, சைதாப்பேட்டை மண்டலத்தில் மருத்துவ அலுவலராக பணி செய்து வரும் டாக்டர்.திருமதி. வி.பூங்கோதை அவர்கள் சிங்கப்பூர் நாட்டில் சுற்றுலா மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 19.05.2008 முதல் 10 நாட்கள் ஈட்டிய விடுப்பில் சிங்கப்பூர் நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்குமாறு 11.04.2008 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டு விண்ணப்பித்துள்ளார்.

தனியர், சென்னை மாநகராட்சியில், 16.05.1986ல் மருத்துவ அலுவலராக பணி அமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தி தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி விழிப்புத் துறையிலிருந்தும் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர், பாதுகாப்பு பிரிவு குற்றப்புலனாய்வு அலுவலகத்திலிருந்தும் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் தனது 11.04.2008 நாளிட்ட கடிதத்தில், தனது பயணச் செலவு முழுவதும் தனது கணவர் ஏற்பதாக தெரிவித்து அதற்கான ஒப்புதல் கடிதம் பெற்று சமர்ப்பித்துள்ளார்.

தனியர் சிங்கப்பூர் நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள 19.09.2007ல் கடவுச்சீட்டு பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மன்ற தீர்மான எண். 450/2007, நாள்.31.01.2007.

இவர் பதவி வகுப்பு–2ன் கீழ்வருவதால் அயல்நாடு பயணத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு அரசாணை எண்.259 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்.17.12.2007ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், பின்வரும் நிபந்தனைக்குட்பட்டும், தனியர் சிங்கப்பூர் நாட்டிற்கு பயணம் செய்ய 16.05.2008 தேதியிட்டு ஆணை வழங்கப்பட்டது.

**நிபந்தனைகள் பின்வருமாறு:–**

01. வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும் போது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்து கொள்ளக்கூடாது.
02. வெளிநாடு செல்லும் பயணச் செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
03. அவர் வெளிநாட்டில் இருக்கும் போது சென்னை மாநகராட்சி பணியைத் துறக்க விண்ணப்பிக்க கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.
04. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இதுபோன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
05. தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து தனியர் தெரிவித்துள்ள நாட்டிற்கு பயணம் செல்ல 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
06. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையர் அவர்களின் முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

இவ்வலுவலருக்கு வழங்கப்பட்ட தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளில் இருந்து 6 மாதங்களுக்கு அவரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் சிங்கப்பூர் நாட்டிற்கு செல்ல மட்டுமே பொருந்தும் என தெரிவித்து டாக்டர்.திருமதி. வி. பூங்கோதை, மருத்துவ அலுவலர் அவர்கள் சிங்கப்பூர் நாட்டிற்கு பயணம் செய்வதற்கு தடையின்மை சான்றிதழ் வழங்கியதற்கும் மற்றும் 19.05.2008 முதல் 28.05.2008 வரை 10 நாட்கள் ஈட்டிய விடுப்பில் செல்ல அனுமதி வழங்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/1109/2008
ஆணையாளர் அவர்களின் 30.06.2008 நாளிட்ட குறிப்பு

## 30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :381/2008 பொருள் எண்.92

### வெளிநாடு செல்ல தடையின்மை சான்று வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில், மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர் திருமதி.கே.திவ்யசுந்தரி, அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசிக்கும் தன்னுடைய மகனை காண்பதற்காக செல்ல வேண்டியுள்ளதால் 06.06.2008 முதல் 34 நாட்கள் ஈட்டிய விடுப்பில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்குமாறு 23.03.2008 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டு விண்ணப்பித்துள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில், 14.11.1975ல் மருத்துவ அலுவலராக பணி அமர்த்தப்பட்டார். தற்போது தனியர் அவர்கள் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக பதவி உயர்வு பெற்று 18.09.2007 முதல் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 14.11.1975 முதல் பணிவரன்முறைப்படுத்தியும் 13.01.1978 முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி விழிப்புத் துறையிலிருந்தும் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர், பாதுகாப்பு பிரிவு குற்றப்புலனாய்வு அலுவலகத்திலிருந்தும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் 23.03.2008 நாளிட்ட கடிதத்தில் தனது பயணச் செலவு முழுவதும் தனது கணவர் ஏற்பதாக தெரிவித்து அதற்கான ஒப்புதல் கடிதம் பெற்று சமர்ப்பித்துள்ளார்.

தனியர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள 23.07.2001ல் கடவுச்சீட்டு பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மன்ற தீர்மான எண்.259/2001 நாள்.28.06.2001.

இவர் வகிக்கும் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் அயல்நாடு பயணம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெற வேண்டும். சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு அரசாணை எண்.259 பணியாளர் மற்றும் நிர்வாக சீர் திருத்ததுறை நாள்.17.12.2007ல் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

01. வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்து கொள்ளக்கூடாது.

02. வெளிநாடு செல்லும் பயணச் செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.

03. இவர் வெளிநாட்டில் இருக்கும் போது சென்னை மாநகராட்சி பணியைத் துறக்க விண்ணபிக்க கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.

04. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இதுபோன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.

05. தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து தனியர் அவர்கள் தெரிவித்துள்ள நாட்டிற்கு பயணம் செல்ல 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

06. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையர் அவர்களின் முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாட்டு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

மேற்கண்டுள்ள நிபந்தனைகளுடன் இவ்வலுவலருக்கு வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளில் இருந்து 6 மாதங்களுக்கு அவரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு செல்ல மட்டுமே பொருந்தும் என தெரிவித்து டாக்டர் திருமதி.கே.திவ்யசுந்தரி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்கள் அமெரிக்க நாட்டிற்கு பயணம் செல்வதற்கு தடையின்மை சான்றிதழ் மற்றும் 06.06.2008 முதல் 09.07.2008 வரை 34 வாட்கள் ஈட்டிய விடுப்பில் செல்ல காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு 16.05.2008 தேதியிட்டு அனுமதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு தடையின்மை சான்று வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி1/682/2008**
**ஆணையாளர் அவர்களின் 01.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :382/2008 பொருள் எண்.93

**பணியமைப்பு – மருத்துவ மேற்படிப்பு பின்னேற்பு அனுமதி**

டாக்டர் சுகுணபூஷணகுமாரி, மருத்துவ அலுவலர், மண்டலம்–5, சென்னை மாநகராட்சி அவர்கள் 2008–09ம் ஆண்டின் சென்னை மருத்துவ கல்லூரியில் மருத்துவ மேற்படிப்பு பயில நுழைவுத் தேர்வு எழுத விண்ணப்பித்து அவரது விண்ணப்பம் 06.02.2008 நாளிட்ட பரிந்துரையுடன் மருத்துவ கல்வி இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தனியர் சென்னை மருத்துவ கல்லூரியில் 2008–09ம் ஆண்டு முதல் 2 ஆண்டுகள் பொது சுகாதாரத்தில் பட்டய மேற்படிப்பு (D.P.H) பயில்வதற்கான 05.06.2008 நாளிட்ட இட ஒதுக்கீட்டு ஆணையினை தேர்வாணைக்குழு மருத்துவக் கல்வி இயக்குநரகத்திலிருந்து பெற்று தன்னை மேற்படிப்பு பயில சென்னை மாநகராட்சியிலிருந்து விடுவிக்குமாறு 05.06.2008 தேதியிட்ட கடிதம் மூலம் கோரினார்.

மேலும், தனியர் மேற்படிப்பு முடிந்து மீண்டும் சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து ஓய்வு பெறும் வரை பணியாற்றுவேன் என்ற உறுதி மொழியினை அளித்துள்ளார்.

இது குறித்து தெரிவிப்பதாவது, மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ஐ சார்ந்ததால் தனியரை மேற்படிப்பு பயில விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் போதிய கால அவகாசம் இல்லாததால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும் தனியரை இவ்வலுவலக ஆணை சு.து.ந.க.எண்.சி1/682/2008, நாள்.05.06.2008ன்படி மேற்படிப்பு பயில 06.06.2008 அன்று பிற்பகல் முதல் விடுவிக்கப்பட்டார்.

1. தனியர் மருத்துவ மேற்படிப்பு முடித்து சென்னை மாநகராட்சியில் மீண்டும் பணியில் சேர்ந்து குறைந்தது 15 ஆண்டுகள் அல்லது அவர் வயது முதிர்வு ஓய்வு பெறும் வரை பணிபுரிந்திட வேண்டும்.
2. அரசாணை எண்.31 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.02.2005ன்படி தனியர் மேற்படிப்பு பயில செல்லும் காலம் ஊதியம் தவிர்த்து தகுதிகாண் பருவம், ஊதிய உயர்வு, ஓய்வூதியம் போன்றவைகளுக்கு மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்
3. தனியர் மேல் படிப்பு பயிலுவதற்கு ஆகும் எந்த செலவினங்களையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
4. தனியர் மேற்படிப்பு பயிலும் காலத்தில் பணி துறப்பு கோரி விண்ணப்பிக்கக் கூடாது. மீறி விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
5. தனியர் இப்படிப்பை காரணம் காட்டி பதவி உயர்வு ஏதும் கோரக்கூடாது.
6. தனியர் மேற்படிப்பை முடித்து தேர்வு பெறாவிட்டால் ஊதிய உயர்வு நிறுத்தப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை சென்னை மருத்துவ கல்லூரியில் 2008–09ம் ஆண்டு முதல் இரண்டாண்டுகள் பொது சுகாதாரத்தில் பட்டய படிப்பு (D.P.H) பயில சென்னை மாநகராட்சி பணியிலிருந்து 06.06.2008 அன்று பிற்பகல் முதல் விடுவித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி1/5859/2001**
**ஆணையாளர் அவர்களின் 04.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :383/2008 பொருள் எண்.94

**தொகுப்பூதிய மருத்துவ அலுவலரை காலமுறை ஊதியத்தில் பணி நியமனம்**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ.10,000/– என்ற தொகுப்பூதிய அடிப்படையில் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்ட டாக்டர் எஸ்.பாஸ்கர் என்பவர் 03.06.2005 முதல் தொகுப்பூதிய அடிப்படையில் மருத்துவ அலுவலராக தொடர்ந்து பணிபுரிந்து வந்தார்.

சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 48 மருத்துவ அலுவலர்களை காலமுறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய சென்னை மாநகராட்சி நியமனக்குழுவின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு நியமனம் செய்து கொள்ள ஆணைகள் வெளியிடலாம் என்று அரசு கடித எண்.38929/ மா.நா.3/2005 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.05.04.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சுகாதாரத்துறையில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் மாதம் ரூ.10,000/–க்கு மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வரும் டாக்டர்.எஸ்.பாஸ்கர் என்பவரை மருத்துவ அலுவலர் பதவிக்கான காலமுறை ஊதிய விகிதமான ரூ.8000–275–13500 மற்றும் இதர படிகளுடன் காலியாக உள்ள ஒரு மருத்துவ அலுவலர் பணியிடத்தில் தற்காலிகமாக பணிநியமனம் செய்யவும், இது குறித்து அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பி அரசாணை பெறவும் மன்றத் தீர்மான எண். 369/2007, நாள்.30.07.2007ன் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அரசிற்கு 29.08.2007 நாளிட்ட செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

அரசாணை (ப) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.14.03.2008ல் சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறையில் தொகுப்பூதியத்தில் மாதம் ரூ.10,000/–க்கு மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வரும் டாக்டர்.எஸ்.பாஸ்கர், என்பவரை மருத்துவ அலுவலர் பதவிக்கான காலமுறை ஊதிய விகிதமான ரூ.8000–275–13500ல் சுகாதாரத் துறையில் காலியாக உள்ள ஒரு மருத்துவ அலுவலர் பணியிடத்தில் பணி நியமனம் செய்ய சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டது. மேலும் அரசாணை (ப) எண்.320 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.16.07.2007ல் டாக்டர் எஸ்.பாஸ்கர், என்பவரை வயது வரம்பு கடந்த நிலையில் மாதம் ரூ.10,000/– என்ற தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்ததற்கு அவர் பொருட்டு வயது வரம்பினை தளர்த்தியும் அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணையினை தொடர்ந்து டாக்டர்.எஸ்.பாஸ்கர், என்பவரை மாதாந்திரம் ரூ.10,000/– தொகுப்பூதியத்திலிருந்து மருத்துவ அலுவலர் பதவிக்கான காலமுறை ஊதிய விகிதமான ரூ.8000–275–13500ல் காலியாக இருந்த ஒரு மருத்துவ அலுவலர் பணியிடத்தில் பணி நியமனம் செய்தமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.டி1/048 /2008**

**ஆணையாளர் அவர்களின் 02.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :384/2008 பொருள் எண்.95

**சமுதாய கல்லூரிகள் ஒருங்கிணைப்பாளர் தற்காலிக பணி நீட்டிப்பு**

கல்வித்துறையின் கீழ் இயங்கும் நான்கு சமுதாயக் கல்லூரிகள், தெற்கு, வடக்கு, கிழக்கு மற்றும் மத்திமம் 1999 முதல் இயங்கி வருகிறது. இந்த நான்கு சமுதாயக் கல்லூரிகளும் செவ்வனே செயல்படுவதற்கும், கல்லூரிகளுக்கான வளர்ச்சி பணிகள், பல வசதிகள் செய்வதற்கும் ஒரு மேற்பார்வையாளர் அவசியம் தேவைப்படுகிறது. அதனால் இப்பணியிடம் நியமிப்பதற்கு அரசின் அனுமதி கோரியதில் 1999 – 2000 ஆண்டிற்கு மட்டும் அரசின் பின்னேற்பு வழங்கப்பட்டது. இப்பதவிக்கான புதிய நியமனம் செய்வதற்கான ஆணை எதும் குறிப்பிடப்படவில்லை. அதன் பிறகு 2001 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைப்பாளர் பதவியில் யாரும் நியமிக்கப்படாமல், கல்வி அலுவலரின் மேற்பார்வையின் கீழ் செயல்பட்டு வந்தது. .

சமுதாயக் கல்லூரிகளுக்கான வளர்ச்சி பணிகள் அதிகமாக இருப்பதனால் செவ்வனே செயல்படுத்துவதற்கு மிகவும் அவசியமாக ஒரு ஒருங்கிணைப்பாளர் தேவைப்படுவதால் மன்றத்தீர்மானம் 448/2007 நாள் 31.08.2007ன் படி தலைமை ஆசிரியர், செல்வி N. குப்புராஜ் சென்னை மாநகராட்சி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராட்லர் தெரு அவர்களை, முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதிய முறையில் 01.06.2007 முதல் ஒரு ஆண்டு நியமனம் செய்யப்பட்டார்.

மேலும், தெற்கு வளாகத்தில் சென்ற கல்வி ஆண்டு முதல் தொடங்கப் பெற்ற 3 குறுகிய கால பயிற்சிகளை இக்கல்வி ஆண்டிலும் தொடர்ந்து நடத்தவும், வடக்கு வளாகத்தில் இக்கல்வி ஆண்டில் புதியதாக நான்கு குறுகிய கால பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவும் உள்ளன. இதற்கான பணிகளை மேற்பார்வையிட, ஒருங்கிணைப்பாளர் பணியிடம் அவசியம் தேவைப்படுகிறது.

ஒருங்கிணைப்பாளர் பணிக்காலம் 31.05.2008 அன்று முடிவடையும் நிலையில் இவரது பணியை 01.06.2008 முதல் மேலும் ஒரு ஆண்டு முற்றிலும் தற்காலிகமாக பணி நீட்டிப்பு செய்ய ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

அதன்படி,

அ) செல்வி N. குப்புராஜ், அவர்களை ஒருங்கிணைப்பாளராக 01.06.2008 முதல் மீண்டும் ஒரு வருடம் முற்றிலும் தற்காலிகமாக பணி நியமனம் செய்வதற்கும்,

ஆ) செல்வி N. குப்புராஜ், அவர்களுக்கு ரூ.9500/– மாத தொகுப்பூதியமாக வழங்கவும்,

இ) இந்த செலவினத்தை “ Corporation Budget Education Department (E) Operating expenses Head account Code 184 – Quality improvement in Education “ இந்த தலைப்பின் கீழ் செலவு செய்வதற்கும்,

நிலைக்குழுக்கள் கல்வி , வரிவிதிப்பு மற்றும் நிதி மற்றும் நியமனக் குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

07.07.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.62, நாள்: 7.7.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

15.07.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.115/2008 , நாள்: 15.07.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

" இந்த ஒருங்கிணைப்பாளர் பதவியின் தொடர் தேவையை கருத்தில் கொண்டு இப்பதவியை நிரந்தர பதவியாக ஏற்படுத்துவது குறித்து பரிசீலனை செய்து தக்க முன்மொழிவு வைக்குமாறு அறிவுறுத்தி இதற்கு நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**<u>க.து.ந.க.எண்.ஐ.டி.ஐ/022/2008</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 06.05.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :385/2008 பொருள் எண்.96

**<u>சென்னை மாநகராட்சி, கல்வித்துறை, தொழிற் பயிற்சி நிலையம் அரசாணை 292ன்படி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்வு செய்யப்பட்ட தொழிற் பயிற்சி நிலைய இளநிலை பயிற்சி அலுவலர் (குழாய் பொருத்துநர் – செய்முறை) திரு. S. சீனிவாசன் அவர்களுக்கு மேலும் ஓராண்டு பணி நீட்டிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி.</u>**

அரசாணை எண் 292ன்படி, தொழிற் பயிற்சி நிலையத்திற்கு பணியாளர்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் சமுதாய இட ஒதுக்கீடு சுழற்சி முறையில் ஒப்பந்த அடிப்படையில் அடிப்படை ஊதியத்தை குறைந்த பட்ச சம்பளமாக தொகுப்பூதியத்தில் பணியமர்த்த கூறப்பட்டுள்ளது. மன்றத் தீர்மானங்களின்படி கீழ்கண்ட பணியாளர் ஒப்பந்த முறையில் பணியமர்வு செய்யப்பட்டு பணி செய்து வருகிறார்.

| வ. எண் | பெயர் | பதவி | மாதாந்திர தொகுப்பு ஊதியம் | பணி சேர்ந்தநாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு. S. சீனிவாசன் | இளநிலை பயிற்சி அலுவலர் **<u>(குழாய் பொருத்துநர் – செய்முறை)</u>** | ரூ.5000/– | 22.06.2007 |

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் ( Copa ) பாடப் பிரிவில் பயிற்சியில் அரசு விதிகளின்படி பயிற்சி மாணவ மாணவியர் சேர்க்கை நடைபெற்று கடந்த 03.08.2007 அன்று வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் அவர்களால் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் பாடப் பிரிவு தொடங்கி வைக்கப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

மத்திய அரசின் DGE&T /6/22/6/2006 –TC நாள் 28.03.2008ல், தொழிற் பயிற்சி நிலைய ஆறு பாடப் பிரிவில் குழாய் பொருத்துநர் பாடப் பிரிவுக்கு 19 பயிற்சி மாணவர்கள் சேர்க்கும் பொருட்டு NCVT அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதர நான்கு பாடப் பிரிவிற்கு (பொருத்துநர், மெக்கானிக் மோட்டார் வாகனம், எலெக்ட்ரீசியன், எலெக்ட்ரானிக் மெக்கானிக்) தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் இயந்திர பொறியியல் துறை மற்றும் மின்சாரத்துறை மூலம் கொள்முதல் செய்யப்பட்டு முதல் கட்டம் மற்றும் இறுதி கட்ட ஆய்விற்கு உட்படுத்தி மத்திய அரசின் அனுமதி பெற தயார் நிலையில் உள்ளது.

கல்வி நிலைய பணியிடம் ஓர் தொடர் நிகழ்வு என்பதாலும் தொடர்ந்து மாணவ மாணவியர்களுக்கு கல்வி கற்பிக்க ஆசிரியர் பணியிடம் அவசியமாகின்றது மேலும் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் தொடர்ந்து சிறப்பான முறையில் இயங்க மேற்கண்ட இவரின் பணியிடம் மிகவும் அவசியமாகிறது.
இந்நிலையில்,

அ) மேற்கண்ட தொழிற் பயிற்சி நிலைய ஆசிரியர் திரு. S. சீனிவாசன் குழாய் பொருத்துநர் பாட பிரிவு அவர்களுக்கு 22.06.2008 இருந்து மேலும் ஓராண்டிற்கு ஏற்கனவே செய்த ஒப்பந்த முறையில் பணி நீட்டிப்பு செய்யவும்,

ஆ) மேற்படி தொழிற் பயிற்சி நிலைய ஆசிரியர்க்கு மாதாந்திர தொகுப்பூதிய செலவீனம் கல்வித்துறை தொழிற் பயிற்சி நிலையம் (24) 116 நிரந்தர மற்ற பணியாளர்கள் ஊதியம் என்ற தலைப்பின் கீழ் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கவும், மன்றத்தின் அனுமதி பெறுவதற்கும்,

**க.து.ந.க.எண்.ஜ.டி.ஜ/022/2008**

நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ 09.06.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண். 50/08 நாள் 09.06.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ 12.6.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண்.90/2008 நாள் 12.6.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

" தொழிற்பயிற்சி நிலையத்தின் இந்த ஆசிரியர் பதவியின் தொடர் தேவையை கருத்தில் கொண்டு இப்பதவியை நிரந்தர பதவியாக ஏற்படுத்துவது குறித்து பரிசீலனை செய்து தக்க முன்மொழிவு வைக்குமாறு அறிவுறுத்தி இதற்கு நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி1/00354/2008**
**ஆணையாளர் அவர்களின் 27.05.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :386/2008 பொருள் எண்.97

**பணியமைப்பு – மருத்துவ அலுவலர் பணிநியமனம் பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறையில் மருத்துவ அலுவலர் பதவிக்கான ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் 94. இதில் 34 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக இருந்தது. இப்பணியிடங்களை நிரப்ப அரசாணை எண்.57, நாள்.13.02.2007ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளதை தொடர்ந்து 20 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்பட்டது. மேலும் தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள டாக்டர்.எஸ்.பாஸ்கர், என்பவருக்கு நிரந்தர பணி நியமன ஆணை வழங்க அரசாணைப் பெறப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ளது. இதை தவிர 13 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக இருந்தது.

சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி இப்பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.8000–275–13,500 அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்தில் MBBS பட்டம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் தமிழ்நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

சென்னை மாநகராட்சி, சட்ட விதி 1919 துணை விதி 85 (3)ன்படி இப்பதவியினை அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மன்றம் நியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது.

சுகாதாரத்துறையில் காலியாக இருந்த 13 மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்ப மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நபர் பட்டியல் கோரப்பட்டு ஒரு காலிப்பணியிடத்திற்கு ஒரு நபர் என்ற விகிதாசார அடிப்படையில் இன சுழற்சி மற்றும் பதிவு மூப்பு முறையில் 13 நபர்கள் கொண்ட பட்டியல் பெறப்பட்டது. அப்பட்டியலில் கண்டுள்ள 13 நபர்களுக்கும் Phonogram மற்றும் கடிதம் மூலம் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 15.02.2008 அன்று காலை 10.00 மணிக்கு ஆஜராகும்படி அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டது. ஆனால் கீழ்கண்ட 3 நபர்கள் மட்டுமே அன்றைய தினம் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரானார்கள்.

| வ. எண் | வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பதிவு எண் | பெயர் மற்றும் விலாசம் | பிறந்த தேதி மற்றும் வயது | இனசுழற்சி |
|---|---|---|---|---|
| 1 | 2001 M 10612 S.F 13.08.2001 | J. விஜயகுமார் நெ.1 கோவிந்தன் தெரு, அய்யாவு நாயுடு காலனி, அமைந்தகரை, சென்னை–29 | 15.04.1976 32 Years | MBC Non Priority |
| 2 | 2002 F 06918 S.F 20.05.2002 | V.ஸ்ரீதேவி 54/2 பீப் ரோடு, கலாச்சேத்ரா காலனி, பெசன்ட் நகர், சென்னை–90 | 26.12.1978 30 Years | MBC Non Priority (Women) |
| 3 | 2001 M 12435 S.F 28.08.2001 | J.முகம்மது இஸ்மாயில் 7/26 ‘F’டைப் சிட்கோ நகர் வில்லிவாக்கம், சென்னை–49 | 08.12.1974 33 Years | General Turn Non Priority |

மேற்கண்ட 3 நபர்களில் வரிசை எண்.1ல் கண்டுள்ள டாக்டர் J. விஜயகுமார் என்பவர் தான் அண்ணாமலை பல்கலை கழகத்தில் மேற்படிப்பு பயிலுவதாகவும், இந்த மேற்படிப்பு ஏப்ரல் 2008ல் முடிவடையவதாகவும் மே2008ற்கு முன்பாக பணியில் சேருவதாக தெரிவித்தார். மேலும்இவர் சான்றிதழ் சரிபார்ப்பின் போது அசல் சான்றிதழ் எதையும் சமர்ப்பிக்காததால் இவரை விடுவித்து மற்ற இருவரான டாக்டர் ஸ்ரீதேவி மற்றும் டாக்டர்.முகம்மது இஸ்மாயில் ஆகியோரை மருத்துவ சேவையின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும் மருத்தவ அலுவலர்களாக பணி நியமனம் செய்து தற்காலிக பணி நியமன உத்திரவு வழங்கப்பட்டது. டாக்டர். J.முகம்மது இஸ்மாயில் என்பவர் 26.03.2008ல் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்துள்ளார்.

**சு.து.ந.க.எண்.சி1/00354/2008**

மற்றொரு நபரான டாக்டர். V.ஸ்ரீதேவி என்பவருக்கு பணிநியமன உத்திரவு வழங்கப்பட்டு இது நாள் வரையில் பணியில் சேரவில்லை. எனினும் இவருக்கு பதிவு அஞ்சல் ஒப்புகை மூலம் பணிநியமன ஆணை அனுப்பப்பட்டு தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்பட்ட பட்டியலின்படி 26.03.2008 அன்று பணியில் சேர்ந்துள்ள டாக்டர்.முகம்மது இஸ்மாயில் என்பவரை சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85 (3) (பி)ன்படி அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மருத்துவ அலுவலர் பதவிக்கான காலமுறை ஊதியம் ரூ.8000–275–13,500ல் மருத்துவ அலுவலராக பணிநியமனம் செய்யப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/1067/2005**
**ஆணையாளர் அவர்களின் 05.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :387/2008 பொருள் எண்.98

மருத்துவ அலுவலர் அயற்பணி பின்னேற்பு அனுமதி

டாக்டர் திருமதி.எம்.மோகனலட்சுமி, மருத்துவ அலுவலர், அவர்கள் மருத்துவ கல்வி இயக்குநகரத்திலிருந்து அயற்பணியாக சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக 01.06.2005 முதல் 3 வருடங்கள் பணி செய்வதற்கு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ஆணையர் அவர்கள் அனுமதி வழங்கினார்கள்.

தனியர் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக 01.06.2005 முதல் 31.05.2008 வரை அயற்பணி அடிப்படையில் பணி செய்வதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டது. (மன்ற தீர்மான எண்.199/2007, நாள்.28.05.2007)

தனியர் அயற்பணி மூலம் சென்னை மாநகராட்சியில் 3 வருடங்கள் 01.06.2005 முதல் 31.05.2008 வரை பணி செய்வதற்கு அரசின் அனுமதி வேண்டி அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தனியர் 01.06.2008 முதல் ஓர் ஆண்டு காலத்திற்கு அயற்பணி அடிப்படை மூலம் சென்னை மாநகராட்சியில் பணி செய்வதற்கு அனுமதி தருமாறு கடிதம் மூலம் கோரியுள்ளார்.

டாக்டர்.திருமதி.எம்.மோகனலட்சுமி, மருத்துவ அலுவலர், டி.ஜி.ஓ. படித்துள்ளதாலும், சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை, மருத்துவமனையில் நடைபெறும் சிசேரியன் பிரசவம் மற்றும் குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சை போன்ற பணிகளை செய்வதற்கு அவருடைய சேவை மிகவும் தேவைப்படுவதை கருத்தில் கொண்டு 01.06.2008 முதல் ஓர் ஆண்டு காலத்திற்கு அயற்பணி அடிப்படையில் பணிசெய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், உரிய செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(தி.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/690/2008**
**ஆணையாளர் அவர்களின் 05.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :388/2008 பொருள் எண்.99

**மருத்துவ அலுவலர் பணி நியமனம்**

கூடுதல் ஆணையர்(சு) அவர்களின் உத்தரவு இணங்க சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்ப சென்னை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலத்தின் மூலம் பெயர் பட்டியல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சென்னை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் உதவி இயக்குநர் அவர்கள் 85 நபர்கள் அடங்கிய மருத்துவர் பெயர் பட்டியல் இத்துறைக்கு வழங்கினார்கள்..

டாக்டர் திருமதி.எஸ்.சாந்திமீனா அவர்கள் தனது கடிதத்தில் மருத்துவ பட்டம் பெற்றதற்கு அசல் சான்றிதழ் தற்பொழுதுதான் பெற்றதாக தெரிவித்து தனக்கு மருத்துவ அலுவலராக பதவி நியமனம் வழங்குமாறு சமர்ப்பித்துள்ளார்கள். தனியர் அவர்களின் வேலை வாய்ப்பு பதிவு எண்.2002 எப்00268 நாள்.07.01.2002 பி.சி. (General) ஆகும். தனியர் அவர்கள் 17.12.2007 அன்று மாவட்ட குடும்ப நலத்துறையில் நடந்த மருத்துவ அலுவலர்களுக்கான நேர்காணலில் கலந்து கொண்டார்கள். அந்த நேரத்தில் தனியர் மருத்துவ பட்டம் பயின்றதற்கு அசல் சான்றிதழ் கொடுக்காமல் நகல் சான்றிதழ் சமர்ப்பித்ததால் அவருக்கு பணி நியமன ஆணை வழங்க முடியவில்லை ஒருவார காலத்திற்குள் அசல் சான்றிதழ் சமர்ப்பிக்குமாறு கடிதம் மூலம் தகவல் அனுப்பப்பட்டது.

சென்னை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக துணை இயக்குநர் அவர்கள் டாக்டர் திருமதி.பிரியதர்சினி என்பவரின் பெயர் மருத்துவர் பெயர் பட்டியல் 01.11.07 அன்று அனுப்பப்பட்டது என தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்கள். இந்த பட்டியல் 6 மாத காலம் செல்லுபடியாகும்.

டாக்டர் திருமதி.டி.பிரியதர்சினி அவர்கள் மருத்துவ அலுவலர் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற நேர்காணல் நடந்த சமயத்தில் தான் கர்ப்பமாக இருந்ததன் காரணத்தினால் நேர்காணலில் கலந்து கொள்ள முடியவில்லை என்றும் அத்துடன் தற்போது 2 மாத கைக்குழந்தை உள்ளதாக தெரிவித்துள்ளார்கள். தனக்கு மருத்துவ அலுவலர் பணி நியமன ஆணை வழங்குமாறு கடிதம் கொடுத்துள்ளார்கள். வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 2001–ல் பதிவு செய்துள்ளார்கள். (Employment No.F2001 09116, நாள்.31.07.01) வேலை வாய்ப்பு பட்டியல் 6 மாத காலம் செல்லுபடியாகும் என்ற காரணத்தினால் டாக்டர் திருமதி.பிரியதர்ஷினி அவர்கள் நேர்காணலில் கலந்து கொள்வதற்கு தகவல் அனுப்பப்பட்டது.

மாவட்ட குடும்ப நலத்துறையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்கள் நிரப்புவதற்கு சென்னை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் இதுவரை 4 கட்டங்களாக பெயர் பட்டியல் பெறப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. ஏற்கனவே மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பெயர் பட்டியல் பெறப்பட்டு 1:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. மார்ச் 2008 முதல் ஒரு பணியிடத்திற்கு 1:5 என்ற விகிதசார அடிப்படையில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பெயர் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| (–) மருத்துவ அலுவலர் மொத்த காலிப்பணியிடங்கள் | 43 |
| பணியமர்வு செய்யப்பட்ட மருத்துவர்கள் | 17 |
| | 26 |
| (–) 27.02.08 அன்று நடைபெற்ற நேர்காணலில் கலந்து கொண்டவர்களின் பணி நியமன ஆணை வழங்கப்ப பட்ட மருத்துவர்கள் | 9 |
| தற்போது பணி நியமனம் செயப்பட வேண்டிய மருத்துவ பணியிடம் | 17 |

தற்போது காலியாக உள்ள 17 மருத்துவர் பணியிடங்கள் நிரப்ப வேண்டியுள்ளதால் சென்னை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பெறப்பட்ட மருத்துவர் பெயர் பட்டியலில் உள்ள 85 நபர்கள் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலத்தின் மூத்த மருத்துவர்களான டாக்டர் திருமதி.டி.பிரியதர்சினி மற்றும் டாக்டர் திருமதி.சாந்தி மீனா உள்பட 87 மருத்துவர்களுக்கு 10.04.08 அன்று நடைபெறவுள்ள நேர்காணலில் கலந்து கொள்வதற்கு (Phonogram மூலம் தகவல் அனுப்பப்பட்டது.

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/690/2008**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்பொழுது மருத்துவ அலுவலர் பதவிக்கான 17 பணியிடங்கள் காலியாக உள்ளது.

இப்பதவியினை வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி (அரசாணை எண்.161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.28.08.98) நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும் அதன் விவரம் பின்வருமாறு.

| வகுப்பு | பதவியின் பெயர் | காலமுறை ஊதிய விகிதம் | நியமன முறை வயது வரம்பு | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 2 | மருத்துவ அலுவலர் உதவி அறுவை மருத்துவர் | ரூ.8000–275–13500 | நேரடி நியமனம் வயது 35க்குட் பட்டவராக இருக்க வேண்டும் | பல்கலை கழக மான்யக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சையில் பட்டய (MBBS) மகப்பேற்றில் பட்ட மேற்படிப்பு (அ) பட்டையம் விரும்ப தக்கது. |

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சி சட்டவிதி 1919–85 (3) (b) –ன் படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணி நியமனம் செய்ய மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

அரசாணை எண்.98, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்.17.07.06–ன் படி பணி நியமனத்திற்கு வயது வரம்பினை மேலும் 5 ஆண்டு காலத்திற்கு நீட்டித்து அரசு தளர்வாணை வழங்கியுள்ளது.

**10.04.08 அன்று நேர்காணலில் கலந்து கொண்ட மருத்துவர்களின் விவரம்**

| வ. எண். | மருத்துவர் பெயர் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண்.<br><br>திருமதி. | இனம். | படிப்பு | தாய்மொழி தமிழ்/ தமிழ் மொழி கல்வி தேர்ச்சி | தற் போது வயது |
|---|---|---|---|---|---|
| 01 | டாக்டர் D.பிரியதர்சினி<br>2001F09116 SF31.7.01 | SC | MBBS | தமிழ் | 32 |
| 02 | டாக்டர்.லைலாஜா ஜி.எஸ்.பிளவர்<br>2002F0565SF22.4.02 | BC | MBBS | மலையாளம் | 45 |
| 03 | டாக்டர் S.சசிரேகா<br>2002F08050 SF 13.6.02 | BC | MBBS | தமிழ் | 39 |
| 04 | டாக்டர் V.G.ஷோபனாதங்கம்<br>2002F11380 SF 6.8.02 | BC | MBBS Dip. Radiology | தமிழ் | 29 |
| 05 | டாக்டர் நித்யாகோவிந்தராஜன்<br>2002 F18840 SF 12.12.02 | BC | MBBS DGO | தமிழ் | 39 |
| 06 | டாக்டர் K.பிரியா<br>2003 F03940 SF 30.4.03 | BC | MBBS Dip. MCH | தமிழ் | 30 |
| 07 | டாக்டர் திருமதி.R.அனுராதா<br>2004 F06394 SF 1.6.04 | BC | MBBS | தமிழ் | 27 |
| 08 | R.ஆர்த்தி<br>2003F02168 SF 7.3.03 | BC | MBBS | தமிழ் | 28 |
| 09 | டாக்டர் A.தனலட்சுமி<br>2002F06991 SF 21.5.02 | MBC | MBBS | ஹிந்தி | 28 |
| 10 | டாக்டர் R.ராஜலட்சுமி<br>2003 F00812 SF 24.1.03 | MBC | MBBS OG MS | தமிழ் | 30 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | டாக்டர் கவிதாராஜாராம் 2003F02543 SF 21.3.03 | MBC | MBBS | தமிழ் | 27 |
| 12 | டாக்டர் V.அகிலாதேவி 2003F02643 SF 24.3.03 | MBC | MBBS | தமிழ் | 29 |
| 13 | டாக்டர் I.சுபஸ்ரீ 2003F17849 SF 4.12.03 | MBC | MBBS DGO | தமிழ் | 27 |
| 14 | டாக்டர் R.ஹெப்ஸிபாமேரி கிரேஸ் 2004 F03046 SF 15.3.04 | MBC | MBBS | தமிழ் | 33 |
| 15 | டாக்டர் C.சுதாபுவனேஸ்வரி 2004F16574 SF 27.9.04 | MBC | MBBS | தமிழ் | 28 |
| 16 | டாக்டர் B.R..கோமதி 2004F 18657 SF 18.10.04 | MBC | MBBS | தமிழ் | 28 |
| 17 | டாக்டர் S.காவியா 2004F23080 SF 31.12.04 | MBC | MBBS | தமிழ் | 28 |
| 18 | டாக்டர் சாந்திமீனா 2002 F00268 SF 7.1.02 | General Old BC | MBBS | தமிழ் | 41 |
| 19 | டாக்டர் K.விஜயலட்சுமி 2002F 07303 SF 17.5.02 | General FC | MBBS | தமிழ் | 32 |
| 20 | டாக்டர் J.ஹரிப்பிரியா 2002F 07661 SF 3.6.02 | General SC | MBBS | தமிழ் | 30 |
| 21 | டாக்டர் P.கலைச்செல்வி 2002F 09925 SF 17.2.02 | General SC | MBBS | தமிழ் | 33 |
| 22 | டாக்டர் S.ஸ்ரீதேவி 2003F00452 SF 13.1.03 | General SC | MBBS | தமிழ் | 31 |
| 23 | டாக்டர் வித்யாசாயா 2003F 02290 SF 13.3.03 | General FC | MBBS DGO | தமிழ் | 28 |
| 24 | டாக்டர் P.குந்தவி 2003F 12412 SF 6.10.03 | General FC | MBBS | French | 28 |
| 25 | டாக்டர் V.பிரபா 2003F 15464 SF 28.10.03 | General FC | MBBS | ஹிந்தி | 29 |
| 26 | டாக்டர் B.T..அம்புஜவல்லி 2003F 16075 SF 3.11.03 | General SC | MBBS | தமிழ் | 27 |
| 27 | டாக்டர் S.சிவபிரியா 2003F 17908 SF 5.12.03 | General SC | MBBS | தமிழ் | 34 |
| 28 | டாக்டர் ராதாகிருஷ்ணன் சாய்லட்சுமி 2003F 17948 SF 5.12.03 | General SC | MBBS | தமிழ் | 27 |
| 29 | டாக்டர் G.சிந்துபார்கவி 2004F 05323 SF 12.5.04 | General SC | MBBS | தமிழ் | 27 |
| 30 | டாக்டர் K.உஷா 2004F 08324 SF 7.7.04 | General SC | MBBS | தமிழ் | 37 |

**10.04.08** அன்று நடைபெற்ற மருத்துவ அலுவலர்களுக்கான நேர்காணலில் கலந்து கொண்ட மேற்கூறப்பட்ட மருத்துவர்களில் கீழ்கண்ட வகையில் இனம் வாரியாக பணி நியமனம் செய்யப்பட வேண்டும். அதன் விவரம் பின்வருமாறு.

| **வ.எண்.** | **இனம்** | **நேர்காணலில் கலந்து கொண்டவர்கள்** | **தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது** |
|---|---|---|---|
| **01** | ஆதிதிராவிடர் (S.C.) | **1** | **1** |
| **02** | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (B.C.) | **7** | **6** |

| | | | |
|---|---|---|---|
| 03 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (M.B.C.) | 9 | 4 |
| 04 | பொது (General) | 13 | 6 |

இனம் (1) ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு (SC) ஒரு மருத்துவ அலுவலர் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். ஒரே ஒரு மருத்துவர் டாக்டர் திருமதி.D.பிரியதர்ஷினி அவர்கள் மட்டுமே கலந்து கொண்டுள்ளதால் அவர்களை மருத்துவ அலுவலர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இனம் (2) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (BC) 6 மருத்துவ அலுவலர் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். நேர்காணலில் 7 மருத்துவர்கள் கலந்து கொண்டுள்ளனர் நேர்காணலில் கலந்து கொண்ட அனைத்து மருத்துவர்களில் டாக்டர் திருமதி.டி.லைலாஜா ஜி.எஸ்.பிளவர், 2)எஸ்.சசிரேகா, 3) வி.ஜி.ஷோபனாதங்கம், 4)நித்யாகோவிந்தராஜன், 5)கே.பிரியா, 6)ஆர்.ஆர்த்தி உட்பட ஆகியோர்கள் 6 மருத்துவ அலுவலர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. திருமதி.ஆர்.அனுராதா தற்போது பட்டப்படிப்பு படித்து வருவதாலும் 2010–ல் படிப்பு முடிவடையும் என்பதால் அன்னாரை தேர்ந்தெடுக்க முடியவில்லை.

இனம் (3) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (MBC) 4 மருத்துவ அலுவலர் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். நேர்காணலில் 9 மருத்துவர்கள் கலந்து கொண்டுள்ளனர் வரிசை எண்.1ல் உள்ள ஏ.தனலட்சுமி அவர்கள் இந்தியில் படித்திருந்தாலும் அவர் மூத்தவராக இருப்பதால் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ் தேர்ச்சி பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையிலும், வரிசை எண்.10–ல் உள்ள டாக்டர் திருமதி. ஆர். ராஜலட்சுமி அவர்கள் O.G.MS. படித்துள்ளதாலும், வரிசை எண்.11–ல் உள்ள கவிதாராஜாராம் Diplomo Clinical படிப்பு படித்துள்ளதால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்துறையில் டி.ஜி.ஒ. படித்தவர்கள் ஒருசிலர் மட்டும் இருப்பதினால், சிசேரியன் போன்ற சிக்கலான பிரசவங்களை மேற்கொள்ள தேவைப்படுவதை கருத்தில் கொண்டு வரிசை எண்.12ல் உள்ள டாக்டர் அகிலாதேவி அவர்களை தவிர்த்து, வரிசை எண்.13–ல் உள்ள டாக்டர் திருமதி.ஐ.சுபஸ்ரீ, DGO., படித்துள்ள காரணத்தினால் அவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஆகவே வரிசை எண்.1ல் உள்ள ஏ.தனலட்சுமி, வரிசை எண்.10ல் உள்ள டாக்டர் ஆர்.ராஜலட்சுமி, வரிசை எண்.11ல் உள்ள டாக்டர் கவிதா ராஜாராம் மற்றும் வரிசை எண்.13ல் உள்ள டாக்டர் ஐ.சுபஸ்ரீ ஆகிய 4 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இனம் 4–ல் பொது பிரிவில் (General) 6 மருத்துவ அலுவலர் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். நேர்காணலில் 13 மருத்துவர்கள் கலந்து கொண்டனர். வரிசை எண்.18–ல் உள்ள சாந்திமீனா அவர்கள் ஏற்கனவே நேர்காணலில் கலந்து கொண்டு Original Certificate சமர்ப்பிக்கப்படாததால் பணி நியமன ஆணை வழங்கப்படவில்லை தற்போது அசல் சான்றிதழ் சமர்ப்பித்துள்ளதால் அவரை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வரிசை எண்.23–ல் உள்ள வித்யாசாயா அவர்கள் DGO படித்துள்ளதாலும் வரிசை எண்.19, 20, 21 மற்றும் 22–ல் உள்ள முறையே கே.விஜயலட்சுமி, ஜெ.ஹரிப்பிரியா, பி.கலைச்செல்வி, ஸ்ரீதேவி ஆகியோர் உள்பட 6 மருத்துவ அலுவலர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இன சுழற்சி அடிப்படையில் கீழ்கண்ட வகையில் மருத்துவ அலுவலர் பணி நியமன ஆணை வழங்கப்படவுள்ள நபர்களின் விவரம்

| வ. எண். | மருத்துவர் பெயர் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண். திருமதி / செல்வி. | இனம் | படிப்பு | தாய்மொழி தமிழ்/ தமிழ் மொழி கல்வி தேர்ச்சி | தற் போது வயது | தேர்ந் தெடுக்கப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | டாக்டர் D.பிரியதர்சினி 2001F09116 SF 31.7.01 | SC | MBBS | தமிழ் | 32 | ஆம் |
| 02 | டாக்டர் A.தனலட்சுமி 2002F06991 SF 21.5.02 | MBC | MBBS | இந்தி | 29 | ஆம் |
| 03 | டாக்டர் லைலாஜா ஜி.எஸ்.பிளவர் 2002F 0565 SF 22.4.02 | BC | MBBS | மலையாளம் | 45 | ஆம் |
| 04 | டாக்டர் சாந்திமீனா 2002F 00268 SF 7.1.02 | General BC | MBBS | தமிழ் | 41 | ஆம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05 | டாக்டர் S.சசிரேகா 2002F08050SF13.6.02 | BC | MBBS | தமிழ் | 39 | ஆம் |
| 06 | டாக்டர் K.விஜயலட்சுமி 2002F 07303 SF 17.5.02 | General FC | MBBS | தமிழ் | 32 | ஆம் |
| 07 | டாக்டர் R.ராஜலஷ்மி 2003F 00812 SF 24.1.03 | MBC | MBBS OG MS | தமிழ் | 30 | ஆம் |
| 08 | டாக்டர் V.G.ஷோபனா தங்கம் 2002F11380SF 6.8.02 | BC | MBBS Dip.Radiology | தமிழ் | 29 | |
| 09 | டாக்டர் J.ஹரிப்பிரியா 2002F 07661 SF 3.6.02 | General SC | MBBS | தமிழ் | 30 | ஆம் |
| 10 | டாக்டர் கவிதாராஜாராம் 2003F02543 SF 21.3.03 | MBC | MBBS | தமிழ் | 27 | ஆம் |
| 11 | டாக்டர் நித்யா கோவிந்தராஜன் 2002 F18840 SF 12.12.02 | BC | MBBS DGO | தமிழ் | 39 | ஆம் |
| 12 | டாக்டர் P.கலைச்செல்வி 2002F 09925 SF 17.7.02 | General SC | MBBS | தமிழ் | 33 | ஆம் |
| 13 | டாக்டர் K.பிரியா 2003 F03940 SF 30.4.03 | BC | MBBS Dip. MCH | தமிழ் | 30 | ஆம் |
| 14 | டாக்டர் S.ஸ்ரீதேவி 2003F00452 SF 13.1.03 | General SC | MBBS | தமிழ் | 31 | ஆம் |
| 15 | டாக்டர் I.சுபஸ்ரீ 2003F17849 SF 4.12.03 | MBC | MBBS DGO | தமிழ் | 27 | ஆம் |
| 16 | டாக்டர் வித்யா சாயா 2003 F 02290 SF 13.3.03 | General FC | MBBS, DGO | தமிழ் | 28 | ஆம் |
| 17 | டாக்டர் R ஆர்த்தி 2003F02168 SF 7.3.03 | BC | MBBS | தமிழ் | 28 | ஆம் |

மேற்படி பட்டியலில் வரிசை எண்.3,4,5 மற்றும் 11 முறையே லைலாஜா ஜி.எஸ்.பிளவர், சாந்திமீனா, எஸ்.சசிரேகா மற்றும் நித்யாகோவிந்தராஜன் ஆகிய 4 நபர்கள் வரையறுக்கப் பட்ட பணி விதிகளின்படி 35 வயதை கடந்துள்ள போதிலும் தமிழ்நாடு அரசு மாநில மற்றும் சார்நிலை பணியாளர் பொது விதி 12(d) (ii) ன் படி இவர்களுக்கு வயது வரம்பு பொருந்தாது. இவ்விதியின் கீழ் பணியமர்த்தி அரசின் வயது வரம்பிற்கு தளர்வாணை பெறலாம்.

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்போது காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பதவிக்கான காலியிடங்களில் மேற்படி திருத்தப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 17 நபர்களுக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக மருத்துவ அலுவலராக ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதம் மற்ற இதர படிகளுடன் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்ச்சி மற்றும் மருத்துவ தொகுப்பில் தேர்ச்சி பெறப்பட வேண்டும் என்றும் வரிசை எண்.2ல் உள்ள டாக்டர் ஏ.தனலட்சுமி மற்றும் வரிசை எண்.3–ல் உள்ள டாக்டர் திருமதி.லைலாஜா ஜி.எஸ்.பிளவர் ஆகிய இரு மருத்துவ அலுவலர் அவர்கள் தமிழ்மொழி தேர்ச்சி பெறாததால் அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தேர்ச்சி பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு காலியாகவுள்ள மருத்துவ அலுவலர் பணியிடத்தில் பணி நியமனம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ2/8286/08**
**ஆணையாளர் அவர்களின் 03.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :389/2008 பொருள் எண்.100

**பணியமைப்பு – கூடுதல் வருவாய் அலுவலர் தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சி வருவாய்த்துறையில் கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடம் இரண்டாகும். இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளாகும்.

2008–2009ம் ஆண்டு கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டில் 01.04.2008 என்ற மைய நாளாகக்கொண்டு தயாரிக்கப்படவேண்டியுள்ளது. சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகளின்படி கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான நியமன முறை மற்றும் தகுதிகள் பின்வருமாறு :

| Class/ Category and Name of the post / Scale of pay | | Method of Appointment | Qualification |
|---|---|---|---|
| **1.** | **CLASS-I-B**<br>Additional Revenue Officer<br>Rs.12000-375-16500 | By promotion from Assistant Revenue Officer | (i) A Graduate of a Recognised University.<br>(ii) A pass in the Account Test for Subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by the Government as equivalent thereto<br>(iii) A pass in the Revenue Test Parts I to III prescribed for the Tamil Nadu Revenue Subordinate Service or any other Revenue Test prescribed by the Government as equivalent thereto; and.<br>(iv) A minimum experience of three years as Assistant Revenue Officer. |

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் கூடுதல் வருவாய் அலுவலர் பதவி வகுப்பு–1(பி)ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 பிரிவு 85 (3) (பி)ன்படி இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு இப்பதவியினை நிரப்பும் அதிகாரம் ஆகியவற்றை மன்றம் பெற்றுள்ளது.

கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களின் விவரம் பின்வருமாறு :–

| வ.எண். | கூடுதல் வருவாய் அலுவலரின் பெயர் திருவாளர்கள் | கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களுக்கான விவரம் |
|---|---|---|
| 1 | எம். நாமதேவ் | வருவாய் அலுவலராக 03.05.2008 அன்று பதவி உயர்வு பெற்றதால் காலிப்பணியிடம் ஏற்பட்டுள்ளது. |
| 2 | டி.டபிள்யூ.ஜெயகுமார்தனசிங் | 31.08.2008 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெறவுள்ளதால் காலிப்பணியிடம் ஏற்படவுள்ளது. |

கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கு பின்வரும் அலுவலர்களின் பெயர்களை பரிசீலிக்க வருவாய் துறை குறிப்பு அனுப்பியுள்ளது.

1) திரு.பி. ராமநாதன், உதவி வருவாய் அலுவலர்,
2) திரு.பி. கருணாகரன், உதவி வருவாய் அலுவலர்,
3) திரு.கே. தங்கபழம், உதவி வருவாய் அலுவலர்,
4) திரு.எம்.சி. கோபால் ரத்தினம், உதவி வருவாய் அலுவலர்,

மேற்படி அலுவலர்கள் குறித்த விவரம் பின்வருமாறு :–

**பொ.து.ந.க.எண்.ஈ2/8286/08**

| வ.எண். | பெயர் மற்றும் பதவி | குறிப்புரை |
|---|---|---|
| 1 | திரு.பி. ராமநாதன்,<br>உதவி வருவாய் அலுவலர் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின்படி கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும், இவர் மீது துறை சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததாலும் இவரது பெயரினை கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |
| 2 | திரு.பி. கருணாகரன்,<br>உதவி வருவாய் அலுவலர் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின்படி, கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளார்.<br><br>சென்னை சத்தியம் திரையரங்கம் வளாகத்தில் உள்ள திரையரங்குகளுக்கு வரிமதிப்பீடு செய்யப்பட்டதில் காணப்பட்ட குறைபாடுகள் குறித்து இவர் மீதும் மற்றும் மூன்று அலுவலர்கள் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள அரசாணை (2டி) எண்.12, ந.நி.ம.கு.வ., துறை நாள் 02.01.2008ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.<br><br>அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் திரு.ப்பி. ஜெயராஜ், உதவி வருவாய் அலுவலர் 31.12.2007 அன்று வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஒய்வுபெற்றுவிட்டதால், அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசின் ஆணை கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.<br><br>இதுகுறித்து அரசாணை பெறப்பட்டபின்னர், சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீது கூட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.<br><br>அரசு கடித எண்.18824/எஸ்/2005–2, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள் 07.10.2005ன்படி, தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படும்வேளையில், அலுவலர் மீது துறைசார்ந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பினும், கடுங்குற்றச்சாட்டின்கீழ் குற்றச்சாட்டுகள் ஏதும் சுமத்தப்படாத நிலையிலிருப்பின், அதை அலுவலருக்கு எதிராக கருத வேண்டியதில்லை.<br><br>கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்காக பரிந்துரைக்கப்பட்டிருக்கும் இவர்மீது இதுகாறும் கடுங்குற்றச்சாட்டின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாத காரணத்தினால், இவரது பெயரினை கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |
| 3 | திரு.கே. தங்கப்பழம் | இவர் 25.04.2008 தேதியிட்ட கடிதத்தில், தனது உடல் நிலை காரணமாக மற்றும் 30.09.2008 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளதாலும் கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கு விருப்பமில்லை என்று தெரிவித்துள்ளார்.<br>எனினும், இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி ஊட்ட பதவியான உதவி வருவாய் அலுவலர் பதவியில் மூன்று ஆண்டுகள் பணி நிறைவு செய்யாததால், விதிகளின்படி இவரது பெயரினை கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கு பரிசீலினை செய்ய இயலாது. |
| 4 | திரு.எம்.சி.<br>கோபால் ரத்தினம்,<br>உதவி வருவாய் அலுவலர் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி ஊட்ட பதவியான உதவி வருவாய் அலுவலர் பதவியில் மூன்று ஆண்டுகள் பணி நிறைவு செய்யாததால், விதிகளின்படி இவரது பெயரினை கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கு பரிசீலினை செய்ய இயலாது. |

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

(அ) 01.04.2008ஐ மைய நாளாகக்கொண்டு கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கு, கீழ்கண்ட உதவி வருவாய் அலுவலர்கள் பெயர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

1) திரு.பி. ராமநாதன்,

2) திரு.பி. கருணாகரன்,

(ஆ) 2008ம் ஆண்டு ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களை மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களைக்கொண்டு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக கூடுதல் வருவாய் அலுவலராக பதவி உயர்வு அளித்து ரூ.12000=375=16500 ( இதர படிகளுடன் ) என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணிநியமனம் செய்திடவும்,

(இ) மேற்படி பணிநியமனம் வழங்கப்பட்ட பின்பு அரசின் உறுதியாக்கம் பெற உரிய செயற்குறிப்புகள் அரசுக்கு அனுப்பவும்,

" இப்பொருள் நியமனக்குழுவில் விரிவாக விவாதிக்கப்பட்டு பட்டியல் ஆண்டில் கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் மேலும் காலிப்பணியிடம் எற்படும் பட்சத்தில் பணிமூப்பில் அடுத்து உள்ள நபர் ஊட்டப்பதவியில் மூன்று ஆண்டு நிறைவு செய்யும் நாளிலிருந்து அரசின் உறுதியாக்கம் பெறப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பட்டியலில் சேர்த்து பதவி உயர்வு வழங்க நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ1/20151/2008**
**ஆணையாளர் அவர்களின் 08.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :390/2008 பொருள் எண்.101

**செயற்பொறியாளர் பதவிக்கான திருத்திய தெரிவுப்பட்டியல்**

25.04.2007 நாளிட்ட மன்றத் தீர்மானம் எண்.133/07ல் 2006–07ம் ஆண்டுக்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் பெறப்பட்டு தெரிவுப்பட்டியலில் முதலில் உள்ள 10 உதவி செயற்பொறியாளர்களுக்கு ரூ.10000–325–15200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும், உதவி செயற்பொறியாளர் பதவியில் பணிமூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றம் வழங்கவிருக்கும் தீர்ப்புக்குட்பட்டும் 10.05.2007 நாளிட்ட ஆணையரின் செயல்முறை ஆணையின் வாயிலாக முறையான காலிபணியிடத்தில் (Regular Vacancies) செயற்பொறியாளர்களாக தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, செயற்பொறியாளர் பதவியிலிருந்து மண்டல அலுவலர்களாக பதவி உயர்வு அளித்ததின் காரணமாக காலிப்பணியிடங்கள் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தெரிவுப்பட்டியலில் அடுத்துள்ள எட்டு உதவி செயற்பொறியாளர்களுக்கு ரூ.10000–325–15200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும், உதவி செயற்பொறியாளர் பதவியில் பணிமூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றம் வழங்கவிருக்கும் தீர்ப்புக்குட்பட்டும் செயற்பொறியாள்காளக தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது.

மேற்சொன்ன எட்டு உதவி செயறபொறியாளர்களது பதவி உயர்வானது, மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்ட நிகழ்வில் அரசின் ஆணையினை எதிர்நோக்கி வழங்கப்பட்டது. மண்டல அலுவலர் பதவி உயர்வினை அரசு ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் மண்டல அலுவலர் பதவி உயர்வு பெற்றவர்களை பதவி இறக்கம் செய்ய நேரிடின், அவர்களை மீண்டும் உதவி செயற்பொறியாளர்களாக பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என்ற நிபந்தனைக்குட்பட்டு செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மேலும், 01.04.2007ஐ மைய நாளாகக் கொண்டு 2007–2008ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலில் இடம் பெற்றிருந்த நான்கு உதவி செயற்பொறியாளர்களுக்கு மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்ட நிகழ்வில் அரசின் ஆணையினை எதிர்நோக்கி வழங்கப்பட்டது. மண்டல அலுவலர் பதவி உயர்வினை அரசு ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில், மண்டல அலுவலர் பதவி உயர்வு பெற்றவர்களை பதவி இறக்கம் செய்ய நேரிடின், அவர்களை மீண்டும் உதவி செயற்பொறியாளர்களாக பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என்ற நிபந்தனைக்குட்பட்டு செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மண்டல அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டதினை அரசு ஏற்றுகொள்ளாத பட்சத்தில் அவர்களின் மண்டல அலுவலர்களான பதவி உயர்வினை 26.05.2008 நாளிட்ட ஆணையரது செயல்முறை ஆணையின் மூலம் ரத்து செய்யப்பட்டது.

மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியல் அரசு ஏற்றுகொள்ளாத பட்சத்தில் 01.04.2006ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுபட்டியலில் இடம் பெற்றிருந்த கடைசி எட்டு உதவி செயற்பொறியாளர்களும் (வரிசை எண்.11 முதல் 18 வரை) மற்றும் 01.04.2007ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவு பட்டியலில் இடம் பெற்றிருந்த நான்கு உதவி செயற் பொறியாளர்களும் பதவி இறக்கம் செய்யப்பட்டனர்.

இதன் விளைவாக (a) 01.04.2006 மையநாள் அன்று 18 நபர்களை கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவு பட்டியலில் இடம் பெற்றிருக்கும் கீழ்காணும் 10 நபர்களை கொண்ட தெரிவுப்பட்டியலாக மாற்றியமைக்கவும்,

<u>பொ.து.ந.க.எண்.ஈ1/20151/2008</u>

01. எ. தர்மன்,
02. கே. திருமங்கையாழ்வார்,
03. எம்.புகழேந்தி,
04. ஜே.பாபு ராஜேந்திரன்
05. எஸ். நக்கீரன்,
06. எஸ். தாமரைச்செல்வன்,
07. டி.பி. சுசிந்திரா,
08. ஆர். பன்னீர்செல்வம்,
09. பி. நந்தகுமார்,
10. பி. குருநாதன்,

மேலும் (b) 01.04.2007ஐ மையநாளாக கொண்டு ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலை ரத்து செய்து, 01.04.2006க்கான தெரிவு பட்டியலில் வரிசை 11 முதல் 14 வரை இடம் பெற்றிருந்த கீழ்காணும் நான்கு உதவி செயற்பொறியாளர்களை 01.04.2007 அன்று உள்ள திருத்திய தெரிவுபட்டியலாக மாற்றி அமைக்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

11. ஜி.மகாராஜன்
12. கே. செல்வராஜ்
13. பி. சுப்பையா
14. எம்.ஆர். சுப்புராம்

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**பொ.சு.ந.க.எண்.ஈ1/50545/2007**
**ஆணையாளர் அவர்களின் 04.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :391/2008 பொருள் எண். 102

**உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சியில் உதவி கோட்ட மின்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பதவி உயர்வு வழங்கும் அதிகாரம் ஆகியன மன்றம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜுன் மாதம் முதல் தேதி ஆகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி உதவி/இளநிலை பொறியாளர் (மின்சாரம்) பதவியாகும்.

உதவி கோட்ட மின்பொறியாளர் பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு.

| Name of the Post | Method of Appointment | Qualification |
|---|---|---|
| Assistant Divisional Engineer (Electrical)<br>ரூ.8000–275 –13500 | By promotion from the category of Junior Engineers (Electrical) and Assistant Engineer (Electrical) in the Corporation Engineering Subordinate Service. | 1.(a) A degree in Electrical Engineering of any University or Institution recognised by the University Grants Commission for purpose of its grant or any other qualification considered equivalent thereto and in the case of promotion service as Asst. Engineer in the Corporation engineering Subordinate Service for a period not less than five year.<br>(b)Diploma in Electrical Engineering of the State Board of Technical Education and Training or any other qualifications considered equivalent thereto and a minimum period of service and experience of 15 years or<br>(c) Subject to the conditions specified below a pass in Sec.A and B of the A.M.I.E.(Ind). Examination with Electrical Engineering (General) and any two of the following subjects under Section B as optional or additional subjects:<br>i Electric supply and power distribution.<br>ii Electical Machinery.<br>iii Electrical Installation.<br>iv Electrical Measurements.<br>v Thermodynamics and Head Engines (Steam and Internal Combustion)<br>vi Hydro Electricity; and<br>vii Hydraulics or Hydraulic Machinery. etc.,<br>2. A pass in the Account Test for Public Works Department Officers and Subordinates. |

கடந்த ஆண்டு 01.06.2006 மைய நாளாகக் கொண்டு மேற்படி பதவிக்கான 8 நபர்கள் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு 8 நபர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/50545/2007**

இந்த ஆண்டு உதவி கோட்ட மின்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க 01.06.2007 நாளானது மைய நாளாக உள்ளதால், 1.6.2007அன்றைய நிலையில் இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க தகுதியான உதவி/இளநிலை(மின்சாரம்) பொறியாளர் விவரங்கள் மற்றும் காலிப்பணியிட விவரங்கள் பெறப்பட்டது . இதன்படி உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள நான்கு காலிப்பணியிடங்கள் மற்றும் ஏற்படவுள்ள ஐந்து உத்தேச காலிப்பணியிடங்களுக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படவேண்டியுள்ளது.

மின்துறை இளநிலை பொறியாளர்களில், பணிமூப்பு அடிப்படையில் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது
திருவாளர்கள்

1. எம். கருப்பையா
2. வி. குமரவேல்
3. எம். புருஷோத்தமன்
4. எஸ். பாலகிருஷ்ணன்
5. என். பாஸ்கரன்
6. என். திருநாவுக்கரசு
7. ஆர். சீனிவாசன்
8. எஸ். ராஜேந்திரன்
9. பி. முருகேசன்

மேற்படி நபர்கள் குறித்து எதிர்மறையான குறிப்புரைகள் ஏதும் இல்லை. சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் பணி விதி 1969ல் வகுக்கப்பட்டுள்ளபடி இவர்கள் பட்டயம் பெற்று 15 ஆண்டுகாலம் பணிபுரிந்துள்ளனர். விதியின்படி, பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

(அ) எனவே பின்வரும் இளநிலை பொறியாளர்கள் பெயர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

1. எம். கருப்பையா
2. வி. குமரவேல்
3. எம். புருஷோத்தமன்
4. எஸ். பாலகிருஷ்ணன்
5. என். பாஸ்கரன்
6. என். திருநாவுக்கரசு
7. ஆர். சீனிவாசன்
8. எஸ். ராஜேந்திரன்
9. பி. முருகேசன்

ஆ) உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களிலும், தெரிவுப்பட்டியல் காலாவதியாகும் ஓராண்டு காலம் வரை (The Panel shall be valid for a period of one year from the date of approval by the competent authority), வயது முதிர்வு மற்றும் பதவி உயர்வு போன்ற பல்வேறு காரணங்களில் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களிலும், தெரிவுப்பட்டியலில் உள்ள தகுதியானவர்களுக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக ரூ.8000–275–13500 என்ற காலஏற்ற முறை ஊதிய விகிதம் நிர்ணயம் செய்து தற்காலிகமாக உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வு அளித்திடவும்,

இ) உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிஉயர்வுக்கு உறுதியாக்கம் செய்வது குறித்து அரசுக்கு தக்க பிரேரணையினை அனுப்பவும் நியமனக் குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்

**பொ.சு.ந.க.எண்.ஈ1/20152/2007**
**ஆணையாளர் அவர்களின் 15.05.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :392/2008 பொருள் எண்.103

**பணியமைப்பு – தலைமை கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியல்**

சென்னை மாநகராட்சியில் தலைமை கணக்கு அலுவலர் பதவி வகுப்பு–1ஏன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியன அரசின்வசம் உள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் தேதி ஆகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி உதவி கணக்கு அலுவலர் பதவியாகும்.

கடந்த நிதியாண்டு மேற்படி பதவியில் நான்கு காலிப்பணியிடங்கள் ஏற்பட்ட காரணத்தினால், 4 உதவி கணக்கு அலுவலர்கள் பெயர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, அரசின் ஒப்புதல் கோரி அரசுக்கு தக்க செயற்குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசாணை எண்.152, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.08.09.2007ல் நான்கு உதவி கணக்கு அலுவலர் பெயர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அயற்பணி அடிப்படையில் ஒரு தலைமை கணக்கு அலுவலர் பணியிடம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த காரணத்தினால், காலியாகவிருந்த மூன்று தலைமை கணக்கு அலுவலர் பதவிகளில் பணி நியமனம் செய்து அரசு உத்தரவிட்டது.

மேற்படி தலைமை கணக்கு அலுவலர் பதவியில் நடப்பு நிதியாண்டில், தலைமை கணக்கு அலுவலராக பணிமாற்றிய திரு.கே.நம்மாள்வார் என்பவர் 31.12.2007 அன்றும், திருமதி.எஸ்.ஜெயகுமாரி, என்பவர் 29.02.2008 அன்றும் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றுவிட்டனர். எனவே, 2007–08ஆம் ஆண்டில் தலைமை கணக்கு அலுவலர் பதவியில் இரண்டு காலிப்பணியிடங்கள் ஏற்பட்டது.

மேற்படி காலிப்பணியிடங்களில் தலைமை கணக்கு அலுவலர் திரு.கே.நம்மாள்வார், என்பவர் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து 31.12.2007 அன்று ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடமானது, அயற்பணி அடிப்படையில் நிரப்பப்பட்டுவிட்டது. எனவே, மீதமுள்ள ஒரு தலைமை கணக்கு அலுவலர் காலிப்பணியிடம் நிரப்பப்படவேண்டியுள்ளது.

தலைமை கணக்கு அலுவலர் பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு:–

| | | |
|---|---|---|
| **Chief Accounts Officer**<br>10000-325-15200 | By promotion from the post of Assistant Accounts Officer<br>or<br>by appointment from Class II of the Madras State Treasury and Accounts Service on deputation<br>or<br>By Appointment from any other State Service on deputation basis. | i) A Graduate of a recognized University.<br>ii) A pass in the Accounts Test for Subordinate Officers parts I and II or any other Accounts Test prescribed by the Government as equivalent thereto; |

உதவி கணக்கு அலுவலர்கள் பணிமூப்பின்படி 01.04.2007 மைய நாளில் தலைமை கணக்கு அலுவலர் பதவிக்கான தகுதிவாய்ந்த உதவி கணக்கு அலுவலரின் பெயர் பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

1) வி. தட்சணாமூர்த்தி, உதவி கணக்கு அலுவலர்,
2) ஜி. பொற்செல்வி, உதவி கணக்கு அலுவலர்,

மேற்படி அலுவலர்கள் மீது எதிர்மறையான குறிப்புகள் ஏதுமில்லை.

**பொ.து.ந.க.எண்.ஈ1/20152/2007**

(அ) எனவே, மேற்குறிப்பிட்ட உதவி கணக்கு அலுவலர்கள் பெயர்களைக் கொண்ட இரண்டு நபர்கள் கொண்ட தலைமை கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்க அரசினைக் கோரவும்,

(ஆ) வரிசை எண்.1ல் உள்ள திரு.வி. தட்சிணாமூர்த்தி என்பவருக்கு தலைமை கணக்கு அலுவலர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தில் தலைமை கணக்கு அலுவலராக பதவி உயர்வு அளிக்கக் கோரி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> " இப்பொருள் நியமனக்குழுவில் விவாதிக்கப்பட்டு அயற்பணியில் இருந்த தலைமை கணக்கு அலுவலரை தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதால் மற்றொரு காலிப்பணியிடம் எழுந்துள்ளதை கருத்தில் கொண்டு பட்டியலில் இரண்டாவதாக உள்ள நபருக்கும் பதவி உயர்வு வழங்க அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு பரிந்துரைத்து இதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்

**சு.து.(ம) ந.க.எண்.எம்1/0120/07**
**ஆணையாளர் அவர்களின் 05.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :393/2008 பொருள் எண்.104

**தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியல்**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை (மலேரியா) பிரிவில் தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடம் ஒன்று ஆகும். இப்பணியிடத்தில் பணி புரிந்த திரு. ஜி. எஸ். இராஜரத்தினம் என்பவர் 30.04.2004 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றதால் இப்பணியிடம் காலியாக உள்ளது

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998ன்படி தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவிக்கான நியமன முறை மற்றும் கல்வி தகுதிகள் பின்வருமாறு:

| Class/Category / Name of the Post./ Scale of Pay | Method of Appointment | Qualification |
|---|---|---|
| I B<br>Chief Vector Control Officer<br>Rs. 10,000 – 325 - 15200 | By promotion from the cadre of Senior Entomologist in Class – II Service | Bachelor's Degree in zoology of a university or Institution recognized by the university Grants Commission or equivalent Qualification in Medical Entomology |

ஆணையரின் 11.07.2007 தேதியிட்ட ஆணையின்படி மேற்படி பதவியினை பதவி உயர்வு மூலம் நிரப்ப ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் தேதியை மைய நாளாக கொண்டு தெரிவுப் பட்டியல் தயாரிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவியானது சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–1 பி–ன் கீழ் வகைபடுத்தப்பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 பிரிவு 85 (3) (பி) அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் பணிநியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது.

மேற்படி பதவிக்கு 2004, 2005 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளுக்குரிய தெரிவுப்பட்டியல் பின்வரும் காரணங்களுக்காக இறுதி செய்யப்படாமல் நிலுவையில் இருந்தது.

1. பணி மூப்பு நிலைக்கொண்ட முதுநிலை பூச்சியியலர் திரு. பி. தன்ராஜ் என்பவரது பெயர் கொண்டு பட்டியல் தயாரிக்கப்பட்ட நிலையில் முதுநிலை பூச்சியியலர் பதவியில் மற்றொரு அலுவலரான திருமதி. காஞ்சனா லட்சுமி என்பவர் முதுநிலை பூச்சியியலர் பணி மூப்பு நிர்ணயம் குறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு (W.A.No.1436/02) தொடர்ந்து அவ்வழக்கின் 06.12.2006 தேதியிட்ட தீர்ப்பில் "to promote the petitioner from the date on which the respondents 3 to 7 were promoted i.e. on 13.03.92 with all consequential benefits" என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இதனை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல் செய்ய சட்டக் குழுமத்தால் தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. திரு. பி. தன்ராஜ் என்பவர் தலைமை பூச்சித் தடுப்பு அலுவலர் பதவி கோரி தொடரப்பட்ட வழக்கில் (W.P.No. 1973 of 2007). அவரது கோரிக்கையினை அவர் வயது முதிர்வு தேதிக்கு முன்பு உரிய ஆணை பிறப்பிக்க தீர்ப்பு வழங்கப்பட்டது. அவ்வாறு தனியரது கோரிக்கை பரிசீலிக்க இயலாது என்று குறிப்பாணை H.D.(M).C.No.M1/1707/93, Dated: 31.03.2007ல் தெரிவிக்கப்பட்டது. (திரு. பி. தன்ராஜ், முதுநிலை பூச்சியியலர் மற்றும் திருமதி. பி. காஞ்சனாலட்சுமி முதுநிலை பூச்சியியலர் இருவரும் 31.01.2007 வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றனர்)

மேற்குறிப்பிட்டுள்ள நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வந்ததால் தலைமை பூச்சித் தடுப்பு அலுவலருக்கான தெரிவு பட்டியல் இறுதி செய்யப்படாமல் நிலுவையில் இருந்தது. எனவே, 01.04.2004, 01.04.2005 மற்றும் 01.04.2006 ஆகிய மைய நாளுக்கான தெரிவுப் பட்டியல் தயாரிக்கப்படவில்லை. இவ்வாண்டுகளுக்கு தெரிவுப் பட்டியல் "இல்லை" என அறிவிக்கலாம்.

**சு.து.(ம) ந.க.எண்.எம்1/0120/07**

வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின் படி தலைமை பூச்சித் தடுப்பு அலுவலர் பதவியினை பதவி உயர்வு மூலம் நிரப்ப ஊட்டப் பதவியில் (முதுநிலை பூச்சியியலர்) பணி மூப்பு நிலைக் கொண்ட அலுவலர்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | முதுநிலை பூச்சியியலர் பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | திரு. எ.சுந்தரேசன், முதுநிலை பூச்சியியலர் | 18.03.1992 | இவர் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி தலைமை பூச்சித் தடுப்பு அலுவலருக்கான முழுத் தகுதிகள் பெற்றுள்ள போதிலும் இவர் மீது ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இவரது ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஒராண்டு நிறுத்தம் செய்து தண்டனை வழங்கப்பட்டதால் இவரது பெயரினை தலைமை பூச்சித் தடுப்பு அலுவலர் பதவி உயர்வுக்கு விதிகளின் படி பரிசீலிக்க இயலாது. மேலும் இவர் 31.07.2007 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றார். |
| 2. | திரு. எஸ். மோகன்தாஸ் | 19.11.1999 | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின் படி தலைமை பூச்சித் தடுப்பு அலுவலர் பதவிக்கு முழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை பரிசீலிக்கலாம். |

மேற்படி பட்டியலில் வரிசை எண். 2ல் கண்டுள்ள திரு. எஸ். மோகன்தாஸ் முதுநிலை பூச்சியியலர் என்பவர் தனக்கு தலைமை பூச்சித் தடுப்பு அலுவலர் பதவி வழங்கக் கோரி நீதி பேராணை மனு எண். 37877/2007ல் வழக்கு தொடர்ந்தார். 11.04.2008 நாளிட்ட உயர்நீதி மன்ற தீர்ப்புரையில் "In the light of the said submission, without expressing anything on merits of the claim of the petitioner, the respondents are directed to consider the claim of the petitioner and pass orders taking note of Section 87 of the Chennai City Municipal Corporation Act, 1919 within a period of three months from the date of receipt of a copy of this order."

திரு. எஸ். மோகன்தாஸ், முதுநிலை பூச்சியியலர் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் இருந்ததால் தலைமை பூச்சித் தடுப்பு அலுவலர் பதவிக்கு 01.04.2007 மைய நாளாக கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப் பட்டியல் இறுதி செய்யப்படாமல் நிலுவையில் இருந்தது.

எனவே, பின்வரும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. 01.04.2007ஐ மைய நாளாக கொண்டு தலைமை பூச்சித் தடுப்பு அலுவலர் பதவிக்கான தெரிவுப் பட்டியலில் ஊட்டப்பதவியில் பணி மூப்பு நிலைக்கொண்ட திரு. எஸ். மோகன்தாஸ், முதுநிலை பூச்சியியலர் என்பவர் வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின் படி முழுத் தகுதிகள் பெற்றுள்ளதால் இவரது பெயரைக் கொண்டு தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,
2. திரு. எஸ். மோகன்தாஸ், முதுநிலை பூச்சியியலர் என்பவரை தலைமை பூச்சித் தடுப்பு அலுவலராக திரு. ஜி. எஸ். இராஜரத்தினம் தலைமை பூச்சித் தடுப்பு அலுவலர் என்பவர் ஓய்வு பெற்ற காலிப் பணியிடத்தில் தற்காலிகமாக அரசின் உறுதியாக்கத்திற்குட்டு ரூ. 10,000 – 325 – 15,200/– என்ற காலமுறை ஊதியத்தில் பணி நியமனம் செய்யவும்,
3. திரு. எஸ். மோகன்தாஸ், முதுநிலை பூச்சியியலர் என்பவருக்கு வழங்கப்படும் பணி நியமனத்திற்கு சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919ன் படி அரசின் உறுதியாக்கம் பெற அரசிற்கு செயற் குறிப்பு அனுப்பவும்,

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**<u>சு.து.ந.க.எண்.சி1/4091/2007</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 05.06.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :394/2008 பொருள் எண்.105

**<u>பணியமைப்பு</u>**

திரு.எம்.பாலகிருஷ்ணன், பொது பகுப்பாய்வாளர், சென்னை மாநகராட்சி, அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2007 அன்று பிற்பகல் பணியில் இருந்து ஓய்வு பெற்றதால் இப்பணியிடம் காலியாக உள்ளது.

உணவு கலப்படத்தை தடுக்கும் பொருட்டு இப்பணியிடத்தை நிரப்புவது மிக மிக அவசியமாக கருதப்படுகிறது. இந்நிலையில் சேலம் உணவு ஆய்வகத்தில் பொது பகுப்பாய்வாளராக பணிபுரியும் திரு.எம்.சுவாமியய்யா, சென்னை மாநகராட்சியில் பொது பகுப்பாய்வாளராக பணிபுரிய இசைவு தெரிவித்துள்ளார். பொது சுகாதாரத்துறை மற்றும் நோய் தடுப்பு இயக்குநர் அவர்கள் 19.02.2006 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சியில் பொது பகுப்பாய்வாளர் பணி நியமனத்திற்கான வரையறுக்கப்பட்ட விதிகள் ஊதிய விகிதம் மற்றும் அயற்பணியில் மேற்கண்ட நபரை சென்னை மாநகராட்சியில் பணிபுரிவதற்காக சென்னை மாநகராட்சியின் இசைவினை கோரியிருந்தார். மேலும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநர் அவர்கள் மேற்கண்ட நபரின் பணிவிரங்களை 19.03.2008 நாளிட்ட கடிதத்தில் அளித்துள்ளார்.

அரசாணை எண்.91, ந.நி.ம.கு.வ.து. நாள்.28.05.1998ல் சென்னை மாநகராட்சியில் பொதுப் பகுப்பாய்வாளர் பணி நியமனத்திற்கு கீழ்க்கண்டவாறு தகுதிகள் மற்றம் பணி நியமன விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

| Sl.No | Category | Method of recruitment |
|---|---|---|
| 1 | Public Anlyst Scale of pay Rs.10000-325-15200 | By direct recruitment or by promotion from the Cadre of Senior Analyst in Class III Service |

**<u>Qualifications</u>**

1) Bachelors Degree in Science with Chemistry, Bio-Chemistry or Food Technology or Micro Biology from the recognized university or Institution or equivalent to qualification recognized & notified by the Central Government.
2) Must be declared qualified for appointment as a Public Analyst by Board appoint and notified by Central Government for such purpose.
3) Must have not less than five years of experience in the Analyst of food.

இப்பதவிக்கு சென்னை மாநகராட்சி சட்டவிதி 1919 துணை விதி 85(3) (பி)ன்படி அரசின் பின்னேற்புக்குட்பட்டு பணி நியமனம் செய்யும் அதிகாரம் மன்றம் பெற்றுள்ளது.

இது குறித்து தெரிவிப்பது , பதவி உயர்வு மூலம் இப்பதவியினை நிரப்பிட ஊட்ட பதவியில் தகுதிவாய்ந்த நபர் எவரும் இல்லை என்பதால் அயற்பணி மூலம் இப்பதவியை நிரப்ப வேண்டியது மிக அவசியமாக கருதப்படுவதால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சேலம் உணவு பகுப்பாய்வகத்தில் பொது பகுப்பாய்வாளராக பணிபுரியும் திரு.எம்.சுவாமியய்யா அவர்களை அயற்பணி அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் பணியமர்த்திட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநர் அவர்களுக்கு இசைவு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிப்பது, சென்னை மாநகராட்சியில் ஓராண்டாக காலியாக இருக்கும் பொது பகுப்பாய்வாளர் பணியிடத்தை அயற்பணி மூலம் நிரப்பிட பணி விதிகளில் இடம் இல்லாத நிலையில் உணவு கலப்படத்தை தடுக்கும் பொருட்டும் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டும் ஒரு சிறப்பு நிகழ்வாக மேற்கண்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணி விதிகளுக்கு விலக்குப் பெற்று அடிப்படை விதி 110–114 ன்படி அயற்பணி மூலம் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்ககத்தால் அளிக்கப்படும் அயற்பணிக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு சேலம் உணவு பகுப்பாய்வகத்தில் பொது பகுப்பாய்வாளராக பணிபுரியும் திரு.எம்.சுவாமியய்யா அவர்களைக் கொண்டு இப்பணியிடத்தை நிரப்பிட அரசின் அனுமதி பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.இ9/5336/04**

**ஆணையாளர் அவர்களின் 26.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :395/2008 பொருள் எண்.106

**பணியமைப்பு**

அரசாணை எண்.666, நிதி நாள்.24.08.92ல் அலுவலக உதவியாளர் பதவி எண்ணிக்கை அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் 15 நபர்களுக்கு ஒருவர் என்கிற விகிதத்தில் நடைமுறைப்படுத்தவும் அதிகமாக உள்ள அலுவலக உதவியாளர்கள் பதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்களால் கண்காணிக்கப்பட்டு வருங்காலத்தில் உருவாக்கப்படும் அலுவலக உதவியாளர் பதவிக்கு அதிகமாக உள்ள அலுவலக உதவியாளர்களைக் கொண்டு நிரப்பும் 15:1 என்கிற விகிதாசாரம் நெறிமுறைகளை கடைபிடிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரசாணை எண் 745. நிதி நாள் 22.09.95ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வது தொடர்பாக அரசு கவனமாக பரிசீலித்ததன் அடிப்படையில் கருணை அடிப்படையிலான பணி நியமனங்களை பொருத்தமட்டில் இறந்துவிட்ட பணியாளர்களின் வாரிசுதாரர்களை, வரும் காலங்களில் காலியாகவுள்ள பணியிடங்களில் அப்பணியிடங்கள் வரையறுக்கப்படாத காலிப்பணியிடங்களாக இல்லாத நிலையில், கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளர்களாக பணிநியமனம் செய்வதற்கு அனுமதியளித்து தீர்மானிக்கிறது. இதற்கான மன்றத் தீர்மான எண் 516/98 நாள் 26.06.98ல் பெறப்பட்டுள்ளது.

நியமனக்குழு தீர்மான எண்.635/2000 நாள்.20.10.2000ல் ஏற்கனவே கருணை அடிப்படையில் தொழிலாளர் பணியமைப்பில் நியமிக்கப்பட்ட காவலர் தொழிலாளி, மற்றும் ஏனைய பதவி வகிப்பவர்களுக்கு அலுவலக உதவியாளர் பணிமாற்றம் தற்போது அளிக்க இயலாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசாணை (நிலை) எண். 193, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.08.10.98ல் சென்னை மாநகராட்சியால் சென்னை மாநகராட்சிக்கு தேவைப்படும் அலுவலக உதவியாளர்களின் எண்ணிக்கை 386 ஆக அரசு நிர்ணயித்துள்ளதை காட்டிலும் மிகுதியாக சுமார் 553 அலுவலக உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.193 ந.நி.ம.கு.வ.துறை, நாள்.08.10.98ல் 15:1 என்ற விகிதாசாரத்தில் கீழ்கண்டவாறு நிர்ணயித்து ஆணையிடப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | ஆணையர் மற்றும் இதர அலுவலர்கள் (ரூ.10,000–15,200 மற்றும் அதற்கு மேல் சம்பள விகிதம்) | | | 82 |
| 2) | இரண்டாம் வகுப்பு அலுவலர்கள் | | 401 | |
| 3) | மூன்றாம் வகுப்பு அலுவலர்கள் | | 3,799 | |
| | | | 4,200 | |
| | அலுவலக உதவியாளர்களின் எண்ணிக்கை | 4200 / 15 | = 280 | 280 |
| 4) | மேயர், துணை மேயர், நிலைக்குழு தலைவர்கள், போன்றோருக்காக மாநகராட்சி மன்றத்துறையில் கூடுதல் பணியிடங்கள் | | | 24 |
| | | | | 386 |

இந்நிலையில் நியமனக்குழு உறுப்பினர்களின் கோரிக்கையின் மீது தீர்மான எண்.369/02 நாள்.20.08.02ல் சென்னை மாநகராட்சியில் அலுவலக உதவியாளர்களின் எண்ணிக்கை 386 ஆக அரசு நிர்ணயித்துள்ளது நிர்ணயித்ததற்கு மிகுதியான 553 அலுவலக உதவியாளர்கள் பணிபுரிவதால் மேலும் கூடுதலானவர்களை அப்பதவியில் பணிநியமனம் செய்வது குறித்து தேவையான விவரங்களை அரசுக்கு தெரிவித்து ஆணை பெற நியமனக்குழு தீர்மானித்து. தற்போதைய விகிதாசாரப்படி 12:1 படி கீழ்கண்டவாறு கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | ஆணையர் மற்றும் இதர அலுவலர்கள் | | | 82 |
| 2) | இரண்டாம் வகுப்பு அலுவலர்கள் | | 401 | |
| 3) | மூன்றாம் வகுப்பு அலுவலர்கள் | | 3799 | |
| | | | 4200 | |
| | | 4200 / 12 | =350 | 350 |
| 4) | மேயர், து.மேயர், நிலைக்குழு தலைவர்கள் போன்ற | | | 24 |
| | | | | 456 |

**பொ.து.ந.க.எண்.இ9/5336/04**

நியமனக்குழு உறுப்பினர் கோரியபடி 95 முதல் 98வரையிலான கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்களில் அலுவலக உதவியாளர் பதவிக்கு தகுதியானவர்கள் இருந்தும் அவர்களை தொழிலார்களாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளதால் அவர்களில் எட்டாம் வகுப்பு கல்வித் தகுதி பெற்றுள்ளவர்களை சென்னை மாநகராட்சியில் அலுவலக உதவியாளர்களாக மிகையாக உள்ள 553 அலுவலக உதவியாளர் பதவியில் உள்ள காலிப்பணியிடங்களில் பணியமர்வு செய்ய அரசின் ஆணை பெற்றுத் தர இவ்வலுவலக கடித எண். பொ.து.ந.க.எண்.இ9/15660/02 நாள்.29,05,03ல் அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது

அரசுக் கடித எண். 42673/மா.ந.3/02–8, ந.நி.ம.கு.வ.துறை, நாள், 10.03.04ல் இப்பொருள் குறித்து பரிசீலினை செய்யும் பொருட்டு அரசு கோரியுள்ள அரசாணைகள், மன்றத் தீர்மான நகல்கள் மற்றும் விவரம் அடங்கிய 95 முதல் 98 வரை மொத்தம் 94 நபர்கள் கொண்ட பட்டியல் ஆண்டுவாரியாக விவரம் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலினையில் உள்ளது.

எனவே அரசாணை எண்.128, நிதி (Zee Bay) துறை, நாள்.21.02.06ல் 12 : 1 என்ற கணக்கின்படி 456 அலுவலக உதவியாளர்கள் சென்னை மாநகராட்சிக்கு நிர்ணயம் செய்யப்பட வேண்டும். ஆனால் தற்போது பணியில் உள்ள அலுவலக உதவியாளர்களின் எண்ணிக்கை 327 பேர். நிர்ணயிக்கப்பட்ட அலுவலக உதவியாளர்களை விட பணிபுரிவோரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

சென்னை மாநகராட்சியில் 1995 முதல் 1998 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட போது அலுவலக உதவியாளருக்கு தகுதியிருந்தும் பிற பதவிகளில் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு அலுவலக உதவியாளராக பதவி மாற்றம் செய்ய பட்டியலில் உள்ள 94 பணியாளர்களின் பணிப்பதிவேட்டை சரிபார்க்க சுற்றறிக்கை சம்மந்தப்பட்ட துறைகள் மண்டலங்களுக்கு அனுப்பப்பட்டு பணிப்பதிவேடும் சரிபார்க்கப்பட்டதில் இப்பட்டியலில் வரிசை எண்.11 ல் உள்ள திருமதி. ஜே. வரலட்சுமி, ஆயா, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிபவர் 8 ஆம் வகுப்பு இடை நிறுத்தம் என்பதால் இவருக்கு அலுவலக உதவியாளர் வழங்க தகுதியில்லை.

மேலும் வரிசை எண்கள் 27, 31, 36 முதல் 43, 45, 46, 49, 51 முதல் 53, 56 முதல் 58 மற்றும் 60 முதல் 68 வரை உள்ள பணியாளர்கள் அலுவலக உதவியாளர் பதவிக்கு மொத்தம் 28 பணியாளர்கள் விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளார்கள்.

வரிசை எண், 59 ல் உள்ள திரு. எஸ். மகேந்திரன், கிளீனர் வடசென்னை பிரதான பணிமனையில் பணிபுரிந்தவர் 01.02.2007ல் காலமாகிவிட்டார்.

எனவே மேற்கண்ட பட்டியலில் உள்ள 94 பணியாளர்களில் தகுதியில்லாதவர் ஒருவரும், விருப்பமின்மை தெரிவித்துள்ளவர்கள் 28 நபர்களும் மற்றும் ஒருவர் இறந்து விட்டதால் மீதமுள்ள 64 பணியாளர்களும் அலுவலக உதவியாளர்களுக்கு இணையான ஊதியம் பெற்றுவருவதால் அதாவது ரூ.2550–55–60–3200 என்ற ஊதிய விகிதத்தில் இருப்பதால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட போது அலுவலக உதவியாளர் பதவிக்கு தகுதியிருந்தும் தொழிலாளர்கள் பணிநியமனம் செய்யப்பட்ட 94 பணியாளர்களில் மேற்கூறிய சுழிக்கப்பட்ட வரிசை எண்கள் நீங்கலாக மொத்தம் 64 பணியாளர்களை அலுவலக உதவியாளராக பதவி மாற்றம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்

**இ.பொ.து.அ.ந.க.எண்.எம்7/4906/2005**
**ஆணையாளர் அவர்களின் 07.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :396/2008 பொருள் எண்.107

**பணியமைப்பு**

சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையின் கீழ் 1963ம் ஆண்டு 67 பணியாளர்களுடன் பல தொழில்நுட்ப பிரிவுகளுடன் துவங்கி, சென்னை மாநகராட்சியின் பல்வேறு அச்சுப் பணிகளை செய்து வந்த நிலையில் நாளடைவில் வயது முதிர்வு ஓய்வு, பணிக்கால இறப்பு மற்றும் தன்விருப்ப ஓய்வு காரணமாக பணியாளர்களின் எண்ணிக்கை 67லிருந்து 32 ஆக குறைந்தது. இவ்வாறு 32 ஆக குறைந்ததில் 14 பேர் தொழில்நுட்ப பிரிவையும் 13 பேர் தொழில்நுட்ப பிரிவின் பணியை சார்ந்த தொழிலாளியாகவும் 4 பேர் காவலர்களாகவும் மற்றும் ஒருவர் துப்புரவு பணியாளராகவும் அச்சகப் பணியை புரிந்து கொண்டிருக்கின்றனர். பல பதவிகளில் (மிஷின் மைண்டர், பைண்டர், லேயர் ஆன் மற்றும் கலர் பிரிண்டர்) பணியாளர்கள் குறைவின் காரணமாக இயந்திரங்களை இயக்குவதில் பல சமயங்களில் பெரிதும் தேக்க நிலை ஏற்பட்டது. தேக்க நிலையை தவிர்க்க அச்சக தொழில்நுட்ப காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டி அவசியம் ஏற்பட்டது.

சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையின் தொழில்நுட்ப காலிப் பணியிடங்கள்யாவும், சிறப்பு அதிகாரி மற்றும் மன்றத் தீர்மான எண்.510/85 நாள் 4.6.1985ன்படி பெறப்பட்ட ஒப்புதலின்படியே இந்நாள் வரை காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் சிறப்பு அதிகாரி மற்றும் மன்றத் தீர்மானம் எண்.1364/88, நாள் 22.12.1988ன்படி தொழில்நுட்ப பதவிகளில் பதவி உயர்வு பெற கல்வித் தகுதி மற்றும் ஐ.டி.ஐ.தொழிற்நுட்ப தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதற்கான அரசாணை பெறப்பட்ட விவரம் ஏதும் நிதி மேலாண்மை குழும சுற்றறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை. சிறப்பு அதிகாரி மற்றும் மன்றத் தீர்மானம் 1364/88 நாள் 22.12.1988ல் தொழில்நுட்ப பதவிகளில் பதவி உயர்வு பெற நிர்ணயித்துள்ள கல்வித்தகுதி மற்றும் ஐ.டி.ஐ.தொழிற்நுட்ப தேர்ச்சி ஆகிய தகுதிகள் இல்லாத அச்சகத்தில் ஏழு ஆண்டுகள் பணி பூர்த்தி செய்த தொழிலாளிகளுக்கு மேற்படி மன்றத் தீர்மானத்தில் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளிலிருந்து விலக்களித்து மன்றத் தீர்மானம் 510/85, நாள் 4.6.1985ன்படி ஏழாண்டுகள் பணிமுடித்த தொழிலாளிகளுக்கு தொழிற்நுட்ப தேர்வு நடத்தி, பதவி உயர்வளிக்க நியமனக்குழு தீர்மான எண்.338/2006, நாள் 14.8.2006 மூலம் அனுமதி பெறப்பட்டது.

நியமனக்குழு தீர்மான எண்.338/2006, நாள் 14.8.2006ன்படி அச்சக தொழிலாளிகளுக்கு காலிப் பணியிட பதவிகளுக்கு தேர்வு நடத்தப்பட்டது. தொழிற்நுட்ப தேர்வில் அந்தந்த பிரிவில் தேர்ச்சி பெற்ற ஒரு கலர் பிரிண்டர் பதவிக்கு ஒரு தொழிலாளியும், இரண்டு மிஷின் மைண்டர் பதவிக்கு இரண்டு தொழிலாளிகளுக்கும், எட்டு பைண்டர் பதவிகளுக்கு ஆறு தொழிலாளிகளுக்கும் இரண்டு லேயர் ஆன் பதவிகளுக்கு இரண்டு தொழிலாளிகளுக்கும் ரூ.3050–75–3950–80–4590 என ஊதிய விகிதத்தில் பதவி உயர்வு அளிக்கவும், நியமனக்குழு தீர்மான எண்.240/2007, நாள் 15.6.2007 மூலம் அனுமதி பெற்று ஆணையர் அவர்களது செயல்முறை ஆணையின்படி மேற்படி 11 தொழிலாளிகளுக்கு பதவி உயர்வளிக்கப்பட்டது.

நியமனக்குழு தீர்மான எண்.240/2007, நாள் 15.6.2007ல் சிறப்பு அதிகாரி (நிலைக்குழு நிதி மற்றும் வரிவிதிப்பு) மற்றும் மன்றத் தீர்மானம் எண்.1364/88, நாள் 22.12.88ல் பெறப்பட்ட ஒப்புதலின்படி தொழிற்நுட்ப தகுதி மற்றும் கல்வித் தகுதி பெறுவதிலிருந்து தற்போது அச்சகத்தில் பணியாற்றும் தொழிலாளிகளுக்கு விலக்களித்து சிறப்பு அதிகாரி (நிலைக்குழு நிதி மற்றும் வரிவிதிப்பு) மற்றும் மன்றத் தீர்மான எண்.510/85 நாள் 4.6.1985ல் பெறப்பட்ட ஒப்புதலின்படியே அச்சக தொழிலாளிகளுக்கு தொழிற்நுட்ப தேர்வு நடத்தி பதவி உயர்வளிக்க பெறப்பட்டுள்ள நியமனக்குழு தீர்மான எண்.338/2006, நாள் 14.8.2006க்கு மன்றத்தின் பின்னேற்பு பெறவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆக, சிறப்பு அதிகாரி (நிலைக்குழு நிதி மற்றும் வரிவிதிப்பு) மற்றும் மன்ற தீர்மானம் எண்.510/85, நாள் 4.6.1985ல் பெறப்பட்ட ஒப்புதலின்படியே அச்சக தொழிலாளிகளுக்கு தொழிற்நுட்ப தேர்வு நடத்தி பதவி உயர்வளிக்க பெறப்பட்டுள்ள நியமனக்குழு தீர்மான எண்.338/2006, நாள் 14.8.2006க்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: .இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**பொ.சு.ந.க.எண்.ஜி4/8715/2008**
**ஆணையாளர் அவர்களின் 06.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :397/2008 பொருள் எண்.108

**சிறுபான்மை இடஒதுக்கீடு அமுலாக்கம்**

தமிழ்நாடு அரசு, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையால் வழங்கப்பட்ட அரசு ஆணை எண்.241 (நிலை) நாள்.29.10.2007ல் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த இசுலாமியர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த கிருஸ்துவர்களுக்கு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு சார்ந்த துறைகளில் தனி ஒதுக்கீடு வழங்கி அரசு ஆணை பிறப்பபித்துள்ளது.

அரசு ஆணையில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

G.O.Ms.No.241 Date: 29.10.2007

1. G.O.Ms.No.85, Personnel and Administrative Reforms (R) Department, dated.06.05.2000
2. G.O.Ms.No.105, Personnel and Administrative Reforms (S) Department, dated.20.06.2000
3. Tamilnadu Ordinace No.4/2007
4. From the Secretary, Tamilnadu Public Service Commission Letter No.4422/RND-D2/07, dated.18.10.2007

**Order:**

1. In the Govdernment Order first read above, orders were issued providing 2 turns for Most Backward Classes and De-notified Communities within every 10 turns. In the Government Order Second read above amendments were issued to General Rules for Tamilnadu State and Subordintate Services that the vacanices arising on and from the 6th May 2000 be filled up as per Schedule III and all selections for appointment be started afresh from serial number one in the said Schedule III with effect on and from the said date.
2. In the Tamilnadu Ordinance No.4/2007 third read above, His Excellencey, the Governor of Tamilnadu has promulgated the Tamilnadu Backward Class Christians and Backward Class Muslims (Reservation of seats in Educational Institutions including private Educational Institutions and of appointments or posts in the services under the State) Ordinace, 2007 providing reservation for appointments or posts in the services under the State for the Backward Class Christains and Backward Class Muslims at three and one-half percent and three and one-half percent, respectively, within the thirty percent reservation for Backward Classes.
3. In pursuance of the above ordinance, the Government direct that the existing 100 point roster prescribed in Schedule-III to the General Rules for Tamilnadu State and Subordinate Services be revised into 200 point roster as in the annexure to this Government order so as to provide reservation for the Backward class Christians and the Backward Class Muslims at three and one-half percent and three and one-half percent respectively, within the thirty percent reservation available for Backward Classes. The Governement also dirct that the above 200 point roster shall be given also 15.09.2007 and the vacancies arising on and from the 15th September 2007 shall be filled up as per the 200 point roster and all selections for appointment shall be started afresh from serial number one of the 200 point roster with effect on and from the said date.

4. Necessary amendments to the Tamilnadu State and Subordinate Services Rules shall be issued separately.

இவ்வரசாணையினை சென்னை மாநகராட்சிலும் அமல்படுத்தி, அரசு உத்திரவில் தெரிவித்தவாறு பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த இசுலாமியர் மற்றும் பிறபடுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த கிறிஸ்துவர்களுக்கு உரிய ஒதுக்கீட்டினை வழங்கிட வேண்டும்.

அரசாணையினை சென்னை மாநகராட்சியில் அமல்படுத்திட மாமன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18 மன்றச் செயலாளர்

**ம.அ10.ந.க.எண்.சி4/474/2006**
**ஆணையாளர் அவர்களின் 25.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :398/2008 பொருள் எண்.109

**பணியமைப்பு– தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி விலக்களிக்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையின், 14.02.2007 நாளிட்ட கடிதத்தில் திரு.வி. கோபால், ஓய்வு பெற்ற துப்புரவு மேஸ்திரி அவர்கள் தமிழ் மொழியில் பயின்ற விவரம் அன்னாரின் பள்ளி தலைமையாசிரியரிடம் பெறப்பட்டு, பணிப்பதிவேட்டில் விவரம் பதியப்பட வேண்டும் எனவும் பதியப்பட்ட பின்பு ஓய்வூதியப் பயன்கள் அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வின் மீது உரிய விளக்கங்கள் பெறும் பொருட்டு, சென்னை மாநகராட்சி, கிருஷ்ணாம்பேட்டை நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. சென்னை மாநகராட்சி, கிருஷ்ணாம்பேட்டை நடுநிலைப்பள்ளி தலைமையாசியிர் அவர்கள் 20.04.2007 நாளிட்ட கடிதத்தில் தனியர் மேற்படி பள்ளியில் மூன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தெலுங்கு மொழியில் பயின்றுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

மேற்படி விவரங்களின் அடிப்படையில் தனியர் சென்னை மாநகராட்சியில் மூன்றாம் நிலை பிரிவைச் சார்ந்த ஊழியர் என்பதால் தமிழ்மொழியில் தேர்ச்சி பெறும் பொருட்டு, தமிழ்நாடு அரசு தேர்வாணைய குழுமத்தால் நடத்தப்படும் தேர்வினை இரண்டு முறை (May - 2003, December – 2003) எழுதியுள்ளார். ஆனால் தேர்ச்சி பெறவில்லை.

மேலும் சமர்ப்பிப்பது யாதெனில் தனியர் சென்னை மாநகராட்சிப் பணியில் 01.05.1972ல் துப்புரவு பணியாளராக (பிரிவு–4) பணியில் சேர்ந்து பின்னர் 28.12.1992ல் துப்புரவு மேஸ்திரியாக (பிரிவு–3) பதவி உயர்வு பெற்று 30.06.2006ல் வயது முதிர்வு ஓய்வு பெற்றுள்ளார். தனியர் அலுவலக பணி அல்லாமல் சென்னை மாநகராட்சியில் இதர செயல்பாட்டு பிரிவில் பணியாற்றுவதால் கோப்புகள் கையாள வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும் பிரிவு மூன்றை சார்ந்த அலுவலர் என்பதால் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாமைக்கு அரசின் தளர்வாணை பெறுவது அவசியமாகிறது.

எனவே, தனியர் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாமைக்கு அரசின் தளர்வாணை பெற்றிடும் பொருட்டு, அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பிட மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.10.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/ 1329/2008**
**ஆணையாளர் அவர்களின் 08.04.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :399/2008 பொருள் எண். 110

**துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு மேஸ்திரிகளுக்கு ஊக்கப்பரிசு மற்றும் பதவி உயர்வு வழங்குதல், மக்கள் நல சங்கங்கள், மன்ற உறுப்பினர்களுக்கு ஊக்கப்பரிசு**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள நகராட்சி (திடக்கழிவுகள் மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000 ன்படி குப்பையை உருவாக்குபவர்கள் தங்கள் இல்லங்களிலேயே தரம் பிரித்து வழங்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே தரம் பிரித்தல் எனும் தாரகமந்திரத்தை இல்லந்தோறும் கொண்டு செல்ல 2008–2009ம் ஆண்டு சென்னை மாநகராட்சி நிதிநிலை தொடக்க உரை அறிவிப்பில் திடக்கழிவு மேலாண்மைத்துறை தொடர்பான பொருட்பாட்டில் குப்பையில்லா சென்னை என்னும் கனவை நனவாக்க இல்லந்தோறும் தரம் பிரித்தல் என்பது தவிர்க்க இயலாத வழியாகும் என்றும் 100 விழுக்காடு தரம் பிரித்தலை, தான் பணிபுரியும் பகுதிதோறும் உள்ள வீடுகளில் தன்னார்வத்துடன் பொதுமக்களை நேரில் சந்தித்து உத்வேகத்துடனும், உற்சாகத்துடனும் தரம் பிரித்தல் தத்துவத்தை அவர்கள் மனம் ஏற்கும்வண்ணம் எடுத்து இயம்பி உள்ளார்ந்த நம்பிக்கையுடன் அவர்கள் 100 விழுக்காடு தரம் பிரித்தலில் ஈடுபட செய்ய வேண்டும் என்பது இலக்கு என்றும் இதனை முதல் முதலில் செய்கின்ற இரண்டு துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் துப்புரவு மேஸ்திரிகளுக்கு தலா ரூ.10,000/– ஊக்கப் பரிசாக வழங்கப்படுவது மட்டுமில்லாமல் இவர்களுக்கு முறையே துப்புரவு மேற்பார்வையாளராகவும், துப்புரவு ஆய்வாளராகவும் முதுநிலையை (Seniority) கணக்கிடாமல் உடனடியாக பதவி உயர்வு வழங்கப்படும் என்றும்,

மாநகராட்சி பணியாளர்கள் நீங்கலாக மக்களே தரம் பிரித்தல் தத்துவத்தை தாங்களே மனமுவந்து உணர்ந்து கொண்டு ஊர் நல சங்கம், மக்கள் நல சங்கம், தன்னார்வ தொண்டு அமைப்புகள் ஆகியவற்றின் மூலம் தரம் பிரித்தலை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான குடியிருப்புகளில் 100 விழுக்காடை நிறைவேற்றி காட்டுவார்களேயானால் அவர்களுக்கு ஊக்கப்பரிசாக முதலிரண்டு நலச்சங்கங்களுக்கு தலா ரூ.5000/–மும், மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரிக்கும் திட்டத்தை நிறைவேற்றும் எல்லா ஊர் நல சங்கங்களுக்கும் தலா ரூ.1,000/– ஊக்கப்பரிசு வழங்கப்படுவதுடன் மேற்கண்ட பொது நலச் சங்கங்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், நினைவு பரிசும் வழங்கப்படும் என்றும்,

சென்னை மாநகராட்சியின் பல்வேறு திட்டப் பணிகளையும் சிறப்புற நிறைவேற்றுவதில் உதவும் மாமன்ற உறுப்பினர்கள் கௌரவப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதே மரபு தற்பொழுது முதன்மை வாய்ந்த தரம் பிரித்தல் திட்டத்தில் தம் பகுதி மக்களை ஊக்குவித்து நூறு சதவிகித தரம் பிரித்தலை ஏற்படுத்தித் தர முன்னின்று பணிபுரிந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்றியுடன் கௌரவிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் குப்பையை தரம் பிரித்தலை தாம் பணி புரியும் பகுதியிலுள்ள வீடுகளில் முதல் முதலில் 100 விழுக்காடு சிறப்பாக செய்கின்ற இரண்டு துப்புரவு ஆய்வாளர்களுக்கு மற்றும் இரண்டு துப்புரவு மேஸ்திரிகளுக்கு தலா ரூ.10,000/– ஊக்கப்பரிசாக வழங்கலாம். மேலும் இவ்வாறு 100 விழுக்காடு சிறப்பாக செயல்படுகின்ற இரண்டு துப்புரவு ஆய்வாளர்களுக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பதவி உயர்வும் மற்றும் இரண்டு துப்புரவு மேஸ்திரிகளுக்கு துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வும் முதுநிலையை (Seniority) கணக்கிடாமல் வழங்கலாம்.

இந்த திட்டத்தை மாநகராட்சி பணியாளர்கள் நீங்கலாக மக்களே தரம் பிரித்தல் தத்துவத்தை தாங்களே மனமுவந்து உணர்ந்து கொண்டு ஊர் நல சங்கம், மக்கள் நல சங்கம், தன்னார்வ தொண்டு அமைப்புகள் ஆகியவற்றின் மூலம் குப்பையை தரம்பிரித்தலை குடியிருப்புகளில் 100 விழுக்காடை நிறைவேற்றி காட்டும் முதல் இரண்டு நல சங்கங்களுக்கு தலா ரூ.5000/– ஊக்கப்பரிசும் வழங்கலாம். மேலும் இந்த திட்டத்தை நிறைவேற்றும் எல்லா ஊர் நல சங்கங்களுக்கும் தலா ரூ.1000/– ஊக்கப்பரிசு வழங்கலாம். மேலும் திட்டத்தை நிறைவேற்றும் மேற்கண்ட பொதுநல சங்கங்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், நினைவு பரிசும் வழங்கலாம்.

இதற்கான நிதியினை சென்னை மாநகராட்சி தனது நிதியிலிருந்து செலவிடலாம். இவ்வாறு வழங்கப்படுகின்ற ஊக்கப்பரிசும், பதவி உயர்வும், பாராட்டு சான்றிதழும் இந்த திட்டத்தின் மூலம் பொதுமக்களிடையே மற்ற இடங்களுக்கு விரைவில் 100 விழுக்காடு ஈடுபட செய்ய உதவியாக இருக்கும். மேலும் இந்த திட்டத்தை தம் பகுதி மக்களை ஊக்குவித்து 100 விழுக்காடு தரம் பிரித்து ஏற்படுத்தி தர முன்னின்று பணிபுரியும் மாமன்ற உறுப்பினர்கள் கௌரவிக்கப்படுவார்கள்

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/ 1329/2008**

இவ்வாறு ஊக்க பரிசும், முதுநிலை இல்லாமல் பதவி உயர்வும், பாராட்டு சான்றும் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கௌரவிக்கப்படுவதாலும் இந்த திட்டம் மிக விரைவில் பொதுமக்கள் முழுமையாக ஈடுபாடு செய்ய வழிவகை செய்ய உதவியாக அமையும்.

மேற்கண்ட கருத்துக்கள் ஏற்கபடின்

1. குப்பையை தரம் பிரித்தலை 100 விழுக்காடு தான் பணிபுரியும் பகுதிகளிலுள்ள வீடுகளில் ஈடுபட செய்கின்ற இரண்டு துப்புரவு ஆய்வாளர்களுக்கும் மற்றும் இரண்டு துப்புரவு மேஸ்திரிகளுக்குத் தலா ரூ.10,000/– ஊக்கப்பரிசாக வழங்கப்படுவது மட்டுமில்லாமல் இவர்களுக்கு முறையே துப்புரவு மேற்பார்வையாளராகவும், துப்புரவு ஆய்வாளராகவும் முதுநிலையை (Seniority) கணக்கிடாமல் உடனடியாக பதவி உயர்வு வழங்குவதற்கும்
2. குப்பையை தரம் பிரித்தலை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான குடியிருப்புகளில் 100 விழுக்காடை நிறைவேற்றும் முதல் இரண்டு நலசங்கங்களுக்கு தலா ரூ.5000/– ஊக்கப்பரிசு வழங்கவும்
3. குப்பையை தரம் பிரித்தலை சென்னை மாநகராட்சிக்கு அடையாளம் காட்டும் வண்ணம் நிறைவேற்றும் எல்லா ஊர் நல சங்கங்களுக்கும் தலா ரூ.1,000/– ஊக்கப்பரிசு வழங்கவும். மேலும் திட்டத்தை நிறைவேற்றும் மேற்கண்ட பொதுநல சங்கங்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், நினைவு பரிசும் வழங்கவும்.
4. மேலும் இந்த திட்டத்தை தம் பகுதி மக்களை ஊக்குவித்து 100 விழுக்காடு தரம் பிரித்து ஏற்படுத்திதர முன்னின்று பணிபுரியும் மாமன்ற உறுப்பினர்களை கௌரவிக்கவும்
5. இதற்கு தேவைப்படும் நிதியினை சென்னை மாநகராட்சி தனது நிதியிலிருந்து செலவிடவும்,

நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டியும், முதுநிலையை கணக்கில் கொள்ளாமல் துப்புரவு மேற்பார்வையாளராகவும் மற்றும் துப்புரவு ஆய்வாளராகவும் பதவி உயர்வு வழங்க அரசின் அனுமதி கோரவும் மாமன்றத்திற்கு அனுமதி வேண்டியும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.113/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.78/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இனம் ஒன்றில் இவர்களுக்கு முறையே துப்புரவு மேற்பார்வையாளராகவும், துப்புரவு ஆய்வாளராகவும் முதுநிலையை கணக்கிடாமல் உடனடியாக பதவி உயர்வு வழங்குவதற்கும் என்பதனை தவிர்த்து இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஜி4/36864/2003**
**ஆணையாளர் அவர்களின் 30.06.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :400/2008 பொருள் எண்.111

**பணியமைப்பு**

சென்னை மாநகராட்சியில் நிர்வாக நலன் கருதி, ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் குறைவுகள் அற்றதும் மற்றும் விரைவானதுமான விசாரணைகள் மேற்கொள்ள ஓய்வு பெற்ற நடுவர்கள் / மூத்த வழக்கறிஞர்கள் ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளை கையாள்வதில் அனுபவம் பெற்ற ஓய்வுபெற்ற சென்னை மாநகராட்சி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கொண்ட விசாரணை அலுவலர் பட்டியல் (தனியர்கள் விருப்பம் தெரிவித்ததன் பேரில்) 29.09.2003 நாளிட்ட மன்றத் தீர்மான எண்.515/03ன்படி நியமனம் செய்யப்பட்டனர். இந்நிகழ்வும் நியமனக்குழுவிற்கு சமர்ப்பித்து 13.01.2004 நாளிட்ட நியமனக்குழுவின் தீர்மானம் எண்.39/2004ன்படி ஒப்புதல் பெறப்பட்டதுஅதன் விவரம் பின்வருமாறு

| வ.எண். | பெயர் | இல்ல முகவரி |
|---|---|---|
| 1. | திரு. ஜெகன்னாதன், ஓய்வுபெற்ற தொழிலாளர் நல அலுவலர், தொழிலாளர் நலத்துறை | 56/24, வள்ளுவர் சாலை, அரும்பாக்கம், சென்னை –600 106. |
| 2. | திரு. கிருஷ்ணன், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அலுவலர், தொழிலாளர் நலத்துறை, | 39/ 2வது தெரு அஞ்சுகம் நகர், காசி தியேட்டர் எதிரில், சென்னை–600 083. |
| 3. | திரு. என். சஞ்சீவி, ஓய்வுபெற்ற துணை ஆணையர், தொழிலாளர் நலத்துறை | 57, பி–பிளாக், அண்ணா நகர் (கிழக்கு), சென்னை–600 102. |
| 4. | திரு. ஆர். தாரகம், ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் | 9பி, அருணோதயா அபார்ட்ஸ்மெண்ட்ஸ், எண். 64, மேட்லி 2வது குறுக்குத் தெரு, போரூர், சென்னை – 600 116. |
| 5. | திரு. எஸ். சண்முகபெருமாள் வழகுரைஞர், உயர்நீதிமன்றம் | 97/2, லதா பிளாட்ஸ், மங்கள நகர், 4வது குறுக்குத் தெரு, சென்னை – 600 116. |
| 6. | திரு. உதயகுமார் வழக்குரைஞர், உயர்நீதிமன்றம் | 1, திருவள்ளுவர் தெரு, புது லட்சுமிபுரம், கொளத்தூர், சென்னை – 600 017. |
| 7. | திரு. எம். வேணுகோபால், வழக்குரைஞர், உயர்நீதிமன்றம் | 28டி, தெற்கு தண்டபாணி தெரு, தி.நகர், சென்னை – 600 017. |
| 8. | திரு. டி. சூரியநாராயணன், வழக்குரைஞர், உயர்நீதிமன்றம். | உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்கம், முதல் மாடி, உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–104. |

மன்றதீர்மானத்தின்படி சென்னை மாநகராட்சி ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் கடந்த நான்கு வருடங்களாக மேலே விவரிக்கப்பட்டுள்ள விசாரணை அலுவலர்கள் மூலமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சென்னை மாநகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு வந்தது.

08.06.2007 நாளிட்ட அரசாணை எண்.288ல் பத்தி 4ல் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

" சென்னை மாநகராடசி, மருத்துவ அலுவலர், திரு.பி. நடராஜன், அவர்களின் மேல் முறையீட்டு மனு. சென்னை மாநகராட்சியின் சம்மந்தப்பட்ட மூல ஆவணங்களுடன் கவனமாக அரசு ஆய்வு செய்தது. இந்நேர்வில், விசாரணை அலுவலராக மாநகராட்சி பணியில் இல்லாத தொழிலாளர் நலத்துறைச் சார்ந்த ஓய்வு பெற்ற துணை ஆணையர் திரு. என். சஞ்சீவி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதனை குற்றச்சாட்டு அலுவலர் தனது மேல் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளார். ஒழுங்கு நடவடிக்கை நிகழ்வுகளில் ஓய்வு பெற்ற பணியாளரை விசாரணை அலுவலராக நியமனம் செய்ய உரிய ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியான ஆணையர் கையொப்பம் இடவில்லை. எனவே விசாரணை அலுவலர் நியமனம் செய்த இடத்திலிருந்து வழு ஏற்பட்டுள்ளதாக கருதி வழு ஏற்பட்ட இடத்திலிருந்து இது வரை நடந்துள்ள ஒழுங்கு நடவடிக்கையினை ரத்து செய்து வழு ஏற்பட்டுள்ள இடத்திலிருந்து மீண்டும் ஒழுங்கு நடவடிக்கையினைத் தொடர அறிவுறுத்தலாம் என முடிவு செய்து. அவ்வாறே சென்னை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அரசு ஆணையிடுகிறது."

எனவே, அரசு உத்திரவின்படி சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மான எண்.515/2003, நாள்: 29–09–2003ல் பெறப்பட்டுள்ள மன்ற அனுமதியின்படி ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் குறைவுகள் அற்றதும் மற்றும் விரிவானதுமான விசாரணை மேற்கொள்ள ஓய்வுபெற்ற நடுவர்கள், மூத்த வழக்கறிஞர்கள், ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளை கையாள்வதில் அனுபவம் பெற்ற ஓய்வு பெற்ற சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் கொண்ட பட்டியல் தயாரிக்கப்பட்டதனை, சென்னை மாநகராட்சி நிர்வாகம் விலக்கிக்கொள்ளலாம்.

இனிவரும் காலங்களில் நான்காம் நிலை பணியாளர்களின் ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளை துறைத்தலைவர் / மண்டல அலுவலர்கள் உரிய விசாரணை அலுவலர் (வகுப்பு 2ஐ சார்ந்த மாநகராட்சி அலுவலர்) ஒருவரை நியமித்து உரிய அறிக்கையினை 60 வேலை நாட்களுக்குள் முடித்து ஆணையரின் ஆணை பெறும்படி அறிவுறுத்திடவும், வகுப்பு 3 நிலையினை சார்ந்த அலுவலர் சம்பந்தமான ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளுக்கு பொதுத்துறையின் அனுமதியோடு உரிய விசாரணை அலுவலர் நியமித்து, உரிய அறிக்கையினை 60 வேலை நாட்களுக்குள் முடித்து ஆணையரின் ஆணை பெறும்படி அறிவுறுத்திடவும், வகுப்பு 1 மற்றும் 2ஐ சார்ந்த அலுவலர்களின் ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளை பொதுதுறையின் மூலமாக ஆணையரின் உரிய ஆணை பெற்று உரிய நடவடிக்கை தொடர்ந்திட அறிவுறுத்தலாம்.

மேற்கண்ட கருத்துருக்களை ஏற்பின் கீழ்கண்ட இனங்களின் மீது மாமன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழு மூலம் வேண்டப்படுகிறது.

1) ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் குறைவுகள் அற்றதும் மற்றும் விரைவானதுமான விசாரணை மேற்கொள்ள ஓய்வு பெற்ற நடுவர்கள், மூத்த வழக்கறிஞர்கள், ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் கையள்வதில் அனுபவம் பெற்ற ஓய்வுபெற்ற சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் கொண்ட பட்டியிலினை மன்ற ஒப்புதலின்படி பெறப்பட்டமையினை உடனடியாக விலக்கிக்கொள்ளவும்.

2) இனிவரும் காலங்களில் நான்காம் நிலை பணியாளர்களின் ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளை துறைத்தலைவர் / மண்டல அலுவலர்கள் உரிய விசாரணை அலுவலர் (வகுப்பு 2ஐ சார்ந்த மாநகராட்சி அலுவலர்) ஒருவரை நியமித்து உரிய அறிக்கையினை 60 வேலை நாட்களுக்குள் முடித்து ஆணையரின் ஆணை பெறும்படி அறிவுறுத்திடவும், வகுப்பு 3 நிலையினை சார்ந்த அலுவலர் சம்பந்தமான ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளுக்கு பொதுத்துறையின் அனுமதியோடு உரிய விசாரணை அலுவலர் நியமித்து, உரிய அறிக்கையினை 60 வேலை நாட்களுக்குள் முடித்து ஆணையரின் ஆணை பெறும்படி அறிவுறுத்திடவும், வகுப்பு 1 மற்றும் 2ஐ சார்ந்த அலுவலர்களின் ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளை பொதுதுறையின் மூலமாக ஆணையரின் உரிய ஆணை பெற்று உரிய நடவடிக்கை தொடர்ந்திடவும்.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்

ம.அ.1.ந.க.எண்.அ6/ 3120 /03
ஆணையாளர் அவர்களின் 10.06.2008 நாளிட்ட குறிப்பு

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :401/2008 பொருள் எண்.112

**பணியமைப்பு – மன்ற தீர்மானம் திரும்ப பெறுதல்**

திரு. வின்சென்ட் பால், ஓட்டுநர், பகுதி –2, மண்டலம் –1 என்பவர் கந்து வட்டி வசூல் செய்ததாக புகார் பெற்றதன் அடிப்படையில், காவல் துறையினரால் கைது செய்யப்பட்டதன் காரணமாக 20.06.2003 முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. தனியர் நீதி மன்றத்தால் குற்றவாளி அல்ல என முடிவு செய்து, தீர்ப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையில் 16.11.2004 முதல் மீண்டும் பணிக்கு அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் துறை ரீதியாக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டதில் ஆணையர் அவர்கள் தனியரை கடுமையாக எச்சரித்தும், மீண்டும் பணிக்கு சேர அனுமதித்தும் தனியர் பணிக்கு வராதகாலம் தகுதியுள்ள விடுப்பாக பாவித்தும், 9.11.2004 நாளது உத்தரவு பிறப்பித்துள்ளார். ஆனால் 24.3.2005 நாளிட்ட ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையில், மேற்படி காலம் ஒராண்டினைக் கடந்துள்ளதால் அடிப்படை விதி18(2) ன்படி அரசின் தளர்வாணை பெற மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசிற்கு தளர்வாணை கோரவும் ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டது. இதனடிப்படையில், அரசின் தளர்வாணை வேண்டி அரசுக்கு அனுப்ப நியமனக்குழு மூலமாக 30.5.2006 நாளது மன்றத் தீர்மானம் பெறப்பட்டது.

திரு. வின்சென்ட் பால், ஓட்டுநரின் தற்காலிக பணி நீக்க காலமான 20.06.2003 முதல் 15.11.2004 வரை வரன்முறைப்படுத்த ஆணையாளர் அவர்களுக்கே அதிகாரம் உள்ளதால் அக்காலத்தை தகுதியுள்ள விடுப்பாக வரன்முறைப்படுத்தவும், இது குறித்து அரசுக்கு செயல் குறிப்பு அனுப்ப அவசியம் எழவில்லை ஆதலால் அரசுக்கு அனுப்ப பெறப்பட்ட மன்றத் தீர்மானத்தை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் ஆணையாளர் அவர்களின் 08.09.2007 நாளிட்ட உத்தரவு பெறப்பட்டது.

எனவே, திரு. வின்செனட் பால், ஓட்டுநர், என்பவரின் தற்காலிக பணி நீக்க காலமான 20.6.2003 முதல் 15.11.2004 வரை அடிப்படை விதி 18(2) ஐ தளர்த்தி அரசாணை பெற அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்பி அரசாணை பெறும் பொருட்டு நியமனக்குழு மூலமாக மன்றத் தீர்மானம் (எண். 165/06, நாள் 30.5.2006) நிறைவேற்றப்பட்டதை ரத்து செய்யும் பொருட்டு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இப்பொருளின் கடைசி பத்தியில் ‘‘ ரத்து செய்ய ‘‘ என்பதற்கு பதிலாக ‘‘ திரும்பப்பெற‘‘ என்ற திருத்தத்துடன் இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**ம.து.ந.க.எண்.ஜி1/946/2008**
**18.07.2008 நாளிட்ட ஆணையாளர் அவர்களின் குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :402/2008 பொருள் எண்.113

தமிழ்நாடு அரசு சட்டம் எண்.35, 36, 37 38/2008, சென்னை மாநகர முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் 1919 பிரிவு 4 மற்றும் 37ல் ஆவணங்களை பாதுகாப்பது தேர்தல் நாளில் பொது விடுமுறை அளிப்பது மற்றும் மாநகராட்சி மேயர் அவர்களின் அதிகார வரம்புகள் சம்மந்தமாக திருத்தங்களும், சில மாற்றங்களையும் செய்து அரசு திருத்திய சட்டமாக வெளியிடப்பட்டுள்ளதாக அரசாணை எண்கள் 116 & 118, நாள்.25.06.2008ல் அரசு தெரிவித்து உள்ளது. இதனுடன் சட்ட திருத்தம் 35/08 மற்றும் 38/2008 நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்ட திருத்தங்களை நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் தகவலுக்கும்/பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.7.08 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.182, நாள்: 25.7.2008–ன்படி இதனை நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பதிவிற்கும், தகவலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18 மன்றச் செயலாளர்

**ம.அ.9.வ.து.ந.க.எண்.ஆர்2/3825/2005**
**18.07.2008 நாளிட்ட ஆணையரின் குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :403/2008 பொருள் எண்.114

**மண்டலம்–9, கோட்டம்–136, சலவைத்துறை 50 ஒய்வு அறைகள் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக**

கோட்டம்–136ல் உள்ள சலவைத் துறையில் மொத்தம் 146 துணி துவைக்கும் கற்களும், 28 ஒய்வு அறைகளும் கட்டப்பட்டு அவைகள் சலவையாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கற்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6/– வீதம் ஒய்வு அறைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/– வீதம் வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. சலவைத் துறையில் சலவையாளர்களுக்கு தண்ணீர் வசதிக்காக ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு மோட்டார் பம்பு செட்டுகள் மற்றும் தண்ணீர் தொட்டிகள் அமைத்து தரப்பட்டுள்ளது. இதற்கான மின்சார செலவு சலவையாளர்களாலேயே கட்டப்பட்டு வருகிறது.

28 ஒய்வு அறைகள் மட்டுமே இருப்பதால், மேலும் ஒய்வு அறைகள் வேண்டும் என சலவையாளர் சங்கம் பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டதனால் கூடுதலாக 50 ஒய்வு அறைகள் கட்டலாமென்று முடிவெடுத்து 50 ஒய்வு அறைகள் கட்டப்பட்டது. அவைகள் முறையாக சலவையாளர் சங்கப்பிரதிநிதிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு முன்பாகவே இந்த 50 ஒய்வு அறைகளும் 1998ஆம் ஆண்டு மழைக் காலத்தில் சலவையாளர்களால் அனுமதியின்றி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்தவர்களை அப்புறப்படுத்தாமலும், முறையாக ஒதுக்கீடு செய்யப்படாமலும் இந்நிகழ்வு ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படாமல் பல ஆண்டுகளாக நிலுவையிலுள்ளது.

தற்சமயம் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் தங்களுக்கே அந்த ஒய்வு அறைகளை ஒதுக்கீடு செய்து தருமாறும், ஒய்வு அறைகளுக்கான மாத வாடகையை மாதாமாதம் தவறாமல் செலுத்திவிடுவதாகவும் கோரிக்கை எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக சைதாப்பேட்டை சலவைத் துறையின் சலவையாளர் சங்கத்திடமிருந்து 50 ஒய்வு அறைகளை ஆக்கிரமித்து உள்ளவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்த 50 நபர்களில் துணி துவைக்கும் கற்களுக்கு உரிமை இருக்கும் மற்றும் இல்லாதவர்கள் விபரம் அவரவர் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண். | அறை எண் | பெயர் | கணவர்/தகப்பனார் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | 29 | செ.சின்னபொன்னு | செல்வம் | கல் இல்லை |
| 2. | 30 | பா.தங்கவேல் | பாவாடை | கல் உள்ளது |
| 3. | 31 | ஏ.ஆரியமாலா | சி.ஏழுமலை | கல் உள்ளது |
| 4. | 32 | எம்.ப.வெங்கடேசன் | எம்.பலராமன் | கல் இல்லை |
| 5. | 33 | கி.சங்கர் | கிருஷ்ணன் | கல் இல்லை |
| 6. | 34 | ஜெ.ஜெயலட்சுமி | ஜெயராமன் | கல் உள்ளது |
| 7. | 35 | உ.லோகநாதன் | உத்தான் | கல் உள்ளது |
| 8. | 36 | சீ.குப்பன் | சீனிவாசன் | கல் சீனிவாசன் பெயரி உள்ளது |
| 9. | 37 | பூ.துரைசாமி | பூங்காவனம் | கல் உள்ளது |
| 10. | 38 | ரா.கலைவாணன் | எஸ்.ராஜி | கல் இல்லை |
| 11. | 39 | உ.மகாலிங்கம் | உடையார் | கல் உள்ளது |
| 12. | 40 | மு.துரை | முருகன் | கல் உள்ளது |
| 13. | 41 | மா.பாண்டியன் | மாரியப்பன் | கல் உள்ளது |
| 14. | 42 | வெ.சந்திரசேகர் | வெங்கடாசலம் | கல் உள்ளது |
| 15. | 43 | பா.ராமலிங்கம் | பாலு | கல் உள்ளது |
| 16. | 44 | வீ.செல்வம் | வீரராகவலு | கல் உள்ளது |
| 17. | 45 | நா.செல்வம் | நாராயணசாமி | கல் உள்ளது |
| 18. | 46 | சி.முருகன் | சிவபெருமாள் | கல் உள்ளது |
| 19. | 47 | ரா.நடராஜன் | சா.ராமலிங்கம் | கல் இல்லை |
| 20. | 48 | க.அம்சா | கலியபெருமாள் | கல் இல்லை |
| 21. | 49 | ஜெயலட்சுமி | துரை | கல் துரை பெயரில் உள்ளது |
| 22. | 50 | கி.ஆதிகேசவன் | கிருஷ்ணன் | கல் உள்ளது |
| 23. | 51 | வெ.தானப்பன் | வெங்கடாசலம் | கல் உள்ளது |
| 24. | 52 | செ.ராமு | செங்கல்வராயன் | கல் இல்லை |
| 25. | 53 | க.குப்பு | கனகசபை | கல் இல்லை |
| 26. | 54 | கு.ரங்கசாமி | குப்புசாமி | கல் உள்ளது |

<u>ம.அ.9.வ.து.ந.க.எண்.ஆர்2/3825/2005</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 27. | 55 | ம.இந்திராணி | மண்ணாங்கட்டி | கல் உள்ளது |
| 28. | 56 | வ.எல்லப்பன் | வரதராஜன் | கல் உள்ளது |
| 29 | 57 | ஜெ.தனசேகரன் | ஜெயராமன் | கல் உள்ளது |
| 30 | 58 | கி.அம்மாவாசை | கிழவன் | கல் உள்ளது |
| 31 | 59 | கருணாநிதி | சிவன் | கல் உள்ளது |
| 32 | 60 | ஆ.காந்தி | ஆறுமுகம் | கல் உள்ளது |
| 33 | 61 | முனியசாமி | குமரய்யா | கல் உள்ளது |
| 34 | 62 | செ.சரசா | செல்வம் | கல் உள்ளது |
| 35 | 63 | உஷா | ராஜேந்திரன் | கல் ராஜேந்திரன் பெயரில் உள்ளது |
| 36 | 64 | ரா.வரதராஜன் | ராஜகோபால் | கல் உள்ளது |
| 37 | 65 | ஜெ.ஜெயக்குமார் | ஜெயராமன் | கல் இல்லை |
| 38 | 66 | கி.ரமேஷ் | கிருஷ்ணன் | கல் இல்லை |
| 39 | 67 | ஜெகநாதன் | தேவராஜ் | கல் தேவராஜ் பெயரில் உள்ளது |
| 40 | 68 | அகமதுபாய் | முகம்மது அலி | கல் முகம்மது அலி பெயரில் உள்ளது |
| 41 | 69 | பூமிநாதன் | பாண்டி | கல் பாண்டி பெயரில் உள்ளது |
| 42 | 70 | வெ.பாலமுருகன் | வெள்ளையன் | கல் இல்லை |
| 43 | 71 | ஜெ.சௌத்திரி | ஜெயராமன் | கல் இல்லை |
| 44 | 72 | பா.புவனேஷ்வரி | பாஷா | கல் பாஷா பெயரில் உள்ளது |
| 45 | 73 | கு.தேவராஜ் | குப்புசாமி | கல் உள்ளது |
| 46 | 74 | து.சண்முகம் | துரைராஜ் | கல் துரைராஜ் பெயரில் உள்ளது |
| 47 | 75 | கு.முருகன் | குமரய்யா | கல் குமரய்யா பெயரில் உள்ளது |
| 48 | 76 | ஏ.குணசேரன் | எல்லப்பன் | கல் இல்லை |
| 49 | 77 | க.பாபு | கணேசன் | கல் இல்லை |
| 50 | 78 | பா.பழனி | வி.பாவாடைராயன் | கல் இல்லை |

ஒய்வு அறை எண்.48–ஐ சுப்பிரமணி என்பவர் உபயோகப்படுத்தி வந்ததாகவும், அவரும் அவர் மனைவியும் இறந்துவிட்டதாகவும், அவர்களுக்கு வாரிசு எவரும் இல்லையென்றும், தற்போது அந்த அறையை அவர்களது தூரத்து உறவினர் திருமதி.அம்சா என்பவர் உபயோகப்படுத்தி வருவதாகவும் அறியப்படுகிறது. மேலும் திருமதி.அம்சாவுக்கு துணி துவைக்கும் கல் இல்லை.

எனவே ஒய்வு அறை எண்.48–ஐ அம்சாவுக்கு பதிலாக எம்.செல்வராஜ், த/பெ.முனுசாமி (கல் எண்.108) அவர்களுக்கு தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் பேரவையின் கோரிக்கையின்படி ஒதுக்கீடு செய்யலாமா என முடிவெடுக்கப்பட வேண்டியுள்ளது.

மேலும், கோட்டம்–136ல் உள்ள சலவைத் துறையில் கட்டப்பட்டு அலுவலக அனுமதியின்றி பல ஆண்டுகளாக உபயோகப்படுத்தப்பட்டுவரும் 50 ஒய்வு அறைகளையும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதியின்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அவரவர்களுக்கே ஒதுக்கீடு செய்ய, 30.6.2008 அன்று காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற 9–வது மண்டல வார்டுக் குழுவின் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 30.6.2008 அன்று மாலை சலவையாளர் காலனியில் சலவைத் துறையிலுள்ள 50 ஒய்வு அறைகளையும் மேலே கண்ட விபரப்படி அவரவர்களுக்கே மன்றத்தின் அனுமதி பெற்று ஒதுக்கீடு செய்யப்படும் என்ற உத்திரவாதக் கடிதம் அனைவருக்கும் அளிக்கப்பட்டது.

தற்போது அலுவலக அனுமதியின்றி 50 ஒய்வு அறைகளையும் உபயோகித்து வருபவர்களில் 26 நபர்களுக்கு அவர்கள் பெயரிலும் 9 நபர்களுக்கு அவர்களது தகப்பனார் அல்லது கணவன்மார்கள் பெயரிலும் துணி துவைக்கும் கற்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 15 நபர்களுக்கு துணி துவைக்கும் கல் உரிமை வழங்கப்படவில்லை.

1. (அ) மேலே உள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துணி துவைக்கும் கற்களுக்கு உரிமம் பெற்றுள்ள 35 நபர்களுக்கு அவரவர் உபயோகித்து வரும் ஒய்வு அறைகளை துணி துவைக்கும் கற்களின் உரிம முதுநிலையைக் கருத்தில் கொள்ளாமல் நேரிடையாக (out of turn) இதர நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்யலாமா,

அல்லது

(ஆ) துணி துவைக்கும் கற்களின் உரிமம் முதுநிலையைக் கருத்தில் கொண்டு வேறு நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாமா,

<u>ம.அ.9.வ.து.ந.க.எண்.ஆர்2/3825/2005</u>

2. (அ) திரு.எம்.செல்வராஜ், த/பெ.முனுசாமி (துணி துவைக்கும் கல் எண்.108) அவர்களுக்கு ஓய்வு அறை எண் 48–ஐ துணி துவைக்கும் கல்லின் உரிம முதுநிலையைக் கருத்தில் கொள்ளாமல் நேரிடையாக (out of turn) இதர நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்யலாமா?

அல்லது

(ஆ) துணி துவைக்கும் கல்லின் உரிமம் முதுநிலையைக் கருத்தில் கொண்டு வேறு நபருக்கு ஒதுக்கீடு செய்யலாமா,

3. (அ) மேலே உள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மீதமுள்ள துணி துவைக்கும் கற்களுக்கு உரிமம் இல்லாத 14 நபர்களுக்கு பல ஆண்டுகளாக அனுமதியின்றி ஓய்வு அறைகளை உபயோகித்து வரும் அவர்களை அந்த ஓய்வு அறைகளிலிருந்து காலி செய் வைப்பதிலுள்ள நடைமுறை பிரச்சனைகளையும், சிக்கல்களையும் கவனத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கே அந்தந்த ஓய்வு அறைகளை ஒதுக்கீடு செய்யலாமா,

அல்லது

(ஆ) துணி துவைக்கும் கற்களுக்கு உரிமம் இல்லாத காரணத்தால் அந்த 14 நபர்களையும் ஓய்வு அறைகளை காலி செய்யச் செய்து துணி துவைக்கும் உரிமம் உள்ள வேறு 14 நபர்களுக்கு உரிமத்தின் முதுநிலை அடிப்படையில் ஓய்வு அறைகள் ஒதுக்கீடு செய்யலாமா,

மற்றும்

4. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படவிருக்கும் அனைவரிடமிருந்தும் ஓய்வு அறைகளுக்கான மாத வாடகை ரூ.50/–ஐ முன் தேதியிட்டு ஏப்ரல் 2006 முதல் இதுநாள்வரை ஒதுக்கீட்டு ஆணை வழங்கும்போது மொத்தமாக வசூலிக்கலாமா என்பதற்கும்

மேலே கண்ட 1அ (அல்லது) 1ஆ, 2அ (அல்லது) 2ஆ, 3அ (அல்லது) 3ஆ, மற்றும் 4 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

"25.7.08 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.183, நாள்: 25.7.2008–ன்படி

(1) (அ) துணி துவைக்கும் கற்களுக்கு உரிமம் பெற்றுள்ள 35 நபர்களுக்கு அவரவர் உபயோகித்து வரும் ஓய்வு அறைகளை துணி துவைக்கும் கற்களின் உரிம முதுநிலையை கருத்திற்கொள்ளாமல் நேரிடையாக (Out of turn) இதர நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்யலாமென்றும்;

(2) (அ) திரு.எம். செல்வராஜ், த/பெ.முனுசாமி (துணி துவைக்கும் கல் எண்.108) அவர்களுக்கு ஓய்வு அறை எண்.48ஐ துணி துவைக்கும் கல்லின் உரிம முதுநிலையைக் கருத்திற் கொள்ளாமல் நேரிடையாக (Outer of turn) இதர நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்யலாமென்றும்;

(3) (அ) பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மீதமுள்ள துணி துவைக்கும் கற்களுக்கு உரிமம் இல்லாத 14 நபர்களுக்கு பல ஆண்டுகளாக அனுமதியின்றி ஓய்வு அறைகளை உபயோகித்து வரும் அவர்களை அந்த ஓய்வு அறைகளிலிருந்து காலி செய்ய வைப்பதிலுள்ள நடைமுறை பிரச்சனைகளையும், சிக்கல்களையும் கவனத்திற் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கே அந்தந்த ஓய்வு அறைகளை ஒதுக்கீடு செய்யலாமென்றும்;

(4) அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட இருக்கும் அனைவரிடமிருந்தும் ஓய்வு அறைகளுக்கான மாத வாடகை ரூ.50/–ஐ முன் தேதியிட்டு ஏப்ரல் 2006 முதல் இதுநாள் வரை ஒதுக்கீட்டு ஆணை வழங்கும் பொழுது மொத்தமாக வசூலிக்கலாமென்றும்;

இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இனம் மூன்றில் கல் உரிமம் இல்லாத 14 நபர்களுக்கு கல் உரிமத்துடன் ஓய்வறை அளிக்க வேண்டும் என்ற திருத்தத்துடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

நி.நி.பி.ந.க.எண்.க(ம)மா–1/2542/2008
ஆணையரின் 17.07.2008 நாளிட்ட குறிப்பு

30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :404/2008 பொருள் எண்.115

**பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள Cities Development Initiative in Asia (CDIA), என்கிற நிறுவனம் மூலம் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் கொசு உற்பத்தியினை தடுப்பதற்கும் மற்றும் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் குப்பையில்லா நகரமாக உருவாக்குவதற்கும் தொழில் நுட்பத்துடன் கூடிய உதவித் தொகை தோராயமாக ரூ.1.90 கோடி ($495940) பெறுவது.**

பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள **Cities Development Initiative in Asia (CDIA),** என்கிற நிறுவனம், இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டிலுள்ள சென்னை மாநகராட்சியினை தேர்ந்தெடுத்து, அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் கொசு உற்பத்தியினை தடுப்பதற்கும் மற்றும் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் குப்பையில்லா நகரமாக உருவாக்குவதற்கும் திட்ட வரைவு தயாரிப்பதற்கான முன்னோட்ட பணிகள் மேற்கொள்ளுவதற்கான உதவித் தொகை தோராயமாக ரூ.1.90 கோடி ($495940) மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஒப்புதலுடன் சென்னை மாநகராட்சிக்கு வழங்க முன்வந்துள்ளது. இத்திட்டத்திற்கான நிர்வாகச் செலவு தோராயமாக ரூ.19.00 லட்சம் சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், மேற்கண்ட உதவித் தொகையினை சென்னை மாநகராட்சிக்கு வழங்க, **Cities Development Initiative in Asia (CDIA),** பிலிப்பைன்ஸ் நிறுவனத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட உதவித் தொகையினை பெறுவதற்கு விண்ணப்பம் மற்றும் இதர விவரங்கள் அந்நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புதலும் பெறப்பட்டது. இந்த உதவித் தொகையினை பெறுவதற்கு, அந்நிறுவனத்திற்கும், சென்னை மாநகராட்சிக்கும் இடையே உடன்படிக்கை செய்து கொள்வதற்கான மாதிரி உடன்படிக்கையும் பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட **Cities Development Initiative in Asia (CDIA),** பிலிப்பைன்ஸ் நிறுவனத்திடமிருந்து, சென்னை மாநகராட்சிக்கு அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் கொசு உற்பத்தியினை தடுப்பதற்கும் மற்றும் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் குப்பையில்லா நகரமாக உருவாக்குவதற்கும் தொழில் நுட்பத்துடன் கூடிய உதவித் தொகை தோராயமாக ரூ.1.90 கோடி பெறுவதற்கும், இந்த உதவித் தொகையினை பெறுவதற்கு **Cities Development Initiative in Asia (CDIA),** பிலிப்பைன்ஸ் நிறுவனத்திற்கும், ஆணையாளர், சென்னை மாநகராட்சிக்கும் இடையே ஒப்பந்தம் மேற்கொள்வதற்கும் மற்றும் இத்திட்டத்திற்கான நிர்வாகச் செலவினம் தோராயமாக ரூ.19.00 லட்சம் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.7.08 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.184, நாள்: 25.7.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.நி.பி.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/937/2007**
**ஆணையரின் 25.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :405/2008 பொருள் எண்.116

**பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல் திட்டத்தை செயலாக்குதல்**

சென்னை மாநகராட்சியில் நாள்தோறும் சுமார் 3500 மெ.டன் குப்பை சேகரிக்கப்பட்டு அவைகள் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்படுகின்றன. நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000ன்படி குப்பை கொட்டும் வளாகங்களை சுகாதார குப்பை கொட்டும் தளங்களாக பராமரிக்க வேண்டும். மேலும் அழுக கூடிய குப்பைகள் உரம் தயாரித்தல், மின்சாரம் தயாரித்தல் குப்பை பதனிடுதல்(Processing of waste) போன்றவற்றிற்கு உட்படுத்தப்பட வேண்டும். அவைகளை குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டி களையக் கூடாது.

எனவே சென்னை மாநகராட்சி கொடுங்கையூர் குப்பை வளாகத்தில் குப்பையிலிருந்து எரிகட்டிகள் தயாரித்து பின்னர் அதனை உபயோகித்து மின்சாரம் தயாரிக்க தொழில் முனைவோரை தெரிவு செய்ய தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம்(Tamil Nadu Industrial Development Corporation Limited) அவர்களை அணுகியது. ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை தயாரித்து தொழில் முனைவோரை தெரிவு செய்ய தமிழ்நாடு தொழில் வளர்ச்சிகழகம் அவர்களுக்கு உதவி செய்ய ஆலோசகர்களை நியமனம் செய்து கொள்ளவும் இதற்கென சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துறையின் மேற்பார்வை பொறியாளர், சென்னை மாநகராட்சியின் நிதி ஆலோசகர் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்தின் வளர்ச்சி மேலாளர் ஆகியவர்களை கொண்ட குழுவினை அமைக்கவும் சென்னை மாநகராட்சி தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகத்தின் வேண்டுகோளினை ஏற்று சம்மதம் தெரிவித்தது.

மேலும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் அவர்களுக்கு ரூ.1 கோடி தொழில் கட்டணமாக சென்னை மாநகராட்சி தரவேண்டும் என்றும் கூறினர்.

மேலும் சென்னை மாநகராட்சி அவர்கள் அளித்த ஒப்புதலின் அடிப்படையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் ஒப்பந்த ஆவணங்களை தயாரித்து ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றி மேற்சொன்ன திட்டத்தை செயலாக்க தொழில் முனைவோரை தெரிவு செய்ய திருவாளர்கள் ஐ.எல். அண்ட் எப்.எஸ்.(IL & FS) என்ற நிறுவனத்தை ஆலோசகர்களாக சென்னை மாநகராட்சியின் சம்மதத்துடன் நியமனம் செய்து கொண்டனர்.

தமிழ்நாடு தொழில் இதில் ரூ.10 இலட்சம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.. இந்த தொழில் கட்டணம் வழங்குவது தொடர்பாக அரசுக்கு எழுதப்படும் என்றும் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் திருவாளர்கள் ஐ.எல். அண்ட் எப்.எஸ் அவர்களுக்கு ஆலோசனை கட்டணம் வழங்க சென்னை மாநகராட்சி திருவாளர்கள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் அவர்களுக்கு சென்னை மாநகராட்சி ரூ.20 இலட்சம் வழங்கியது. அந்த நேரத்தில் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல் மற்றும் சுகாதார குப்பை கொட்டும் தளங்கள் அமைத்தல் திட்டத்தை தனியார் மூலம் செயலாக்கவும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்தின் மூலம் சென்னை மாநகராட்சியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்ததால், இந்த குப்பையிலிருந்து எரிகட்டிகள் தயாரிக்கும் திட்டதை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு பதிலாக பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் செயல்படுத்தலாம் என்று கருதப்பட்டு குப்பையிலிருந்து எரிகட்டிகள் தயாரித்து பின்னர் எரிகட்டிகளை உபயோகித்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் செயல்படுத்த உரிய திருத்தங்களை மேற்கொள்ள தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன் பிறகு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டுவரப்படும் திட்டம் போலவே பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திலும் ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல் மற்றும் சுகாதார குப்பை கொட்டும் தளம் அமைத்தல் திட்டத்தை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகளை இறுதியாக்கம் செய்ய தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதற்கு ஆலோசகர்களுக்கான பணியின் வரம்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் திருவாளர்கள் ஐ.எல். அண்ட் எப்.எஸ் நிறுவனம் மேற்கொண்டும் தங்களால் பணியினை செய்ய இயலாது என்று கூறிவிட்டதால் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் அவர்களே ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல் மற்றும் சுகாதார குப்பை கொட்டும் தளங்களை அமைக்கும் திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை இறுதியாக்கம் செய்யுமாறு கோரப்பட்டனர்.

பின்னர், 23.04.2008 அன்று எக்கனாமிஸ் டைம்ஸ், தி இந்து மற்றும் தினத்தந்தி ஆகிய நாளிதழ்களில், பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் [Design, Built, Operate, Maintain and Transfer(DBOMT)]அடிப்படையில் ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல் மற்றும் சுகாதார குப்பை கொட்டும் தளம் அமைத்தல் திட்டத்தை செயலாக்க தனியார் தொழில் முனைவோர்களிடமிருந்து, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்தால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கான நாள் ஜூன் 20, 2008 என்று குறிக்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளிதாரர்களுடன் ஜூன் 02, 2008 அன்று முன் ஒப்பந்தப்புள்ளி கூட்டம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/937/2007**

குறித்த நாளான 20.06.2008 அன்று ஒப்பந்தப்புள்ளியினை பெற்ற 26 நிறுவனங்களில் கீழ் வரும் 4 நிறுவனங்கள் மட்டும் தங்களது ஒப்பந்தப்புள்ளியினை சமர்ப்பித்தனர்.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியினை சமர்ப்பத்தவர்களின் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்கள். தேரா–பிர்மா பயோடெக்னாலஜீஸ் லிமிட்டட் பெங்களூர் மற்றும் அமால்கமேட்டட் பீன் காபி டிரேடிங் கம்பெனி லிமிட்டட் அவர்களின் கன்சார்டியம் |
| 2 | திருவாளர்கள். தி இண்டியா சிமெண்ட்ஸ் லிமிட்டட், சென்னை–செல்கோ, ஹைதராபாத் அவர்களின் கன்சார்டியம் |
| 3 | திருவாளர்கள். ஹைட்ரோஏர் டெக்டானிக்ஸ்(பி.சி.டி) லிமிட்டட், நாவி மும்பை |
| 4 | திருவாளர்கள் ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிட்டட், ஹைதராபாத் |

20.06.2008 அன்று அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் திறக்கப்பட்டன. இந்நிகழ்வில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் அவர்கள் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கான திட்டத்தில் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்ட ஆலோசகர்களான திருவாளர்கள் ஏனர்ஸ்ட் அண்ட் யங்(M/s. Earnst & Young) என்ற ஆலோசகர்கள், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்து அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் முன்தகுதி பெற்றவர்களாக உள்ளதாகவும் மற்றும் அவர்களின் தொழில்நுட்ப திட்டவடிவினை திறக்கலாம் என்றும் தங்களது அறிக்கையினை அளித்தனர். அந்த அறிக்கை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்தால் ஏற்கப்பட்டது. அதன்படி அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் தொழில்நுட்ப திட்ட முன்வடிவும்(Technical Proposal) திறக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டது. மேலும் அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் தங்களின் தொழில் நுட்ப திட்ட முன்வடிவு பற்றி 02.07.2008 அன்று வழங்குரைகளை அளித்தனர். பின்னர் அந்த தொழில் நுட்ப திட்ட முன்வடிவுகள் பரிசீலிக்கப்பட்டு அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளியினை திறக்கலாம் என்று ஆலோசகர்கள் 17.07.2008 அன்று தங்களின் அறிக்கையினை அளித்தனர். அதன்படியே 18.07.2008 அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும்(Commercial Proposal) திறக்கப்பட்டன.

இந்த ஒப்பந்தப்புள்ளியில் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி இரண்டு விதமாகும். சென்னை மாநகராட்சியிடம் இருந்து பெறப்படும் குப்பைக்கு ஒப்பந்தப்புள்ளிதாரர் எவ்வளவு தொகை தர விழைகிறார்(Royalty) என்றும் அல்லது சென்னை மாநகராட்சியிடமிருந்து அவர் பெறும் குப்பைகளை கையாள எவ்வளவு தொகை கோருகிறார்(Tipping fee ) என்றும் இவைகளில் ஏதேனும் ஒன்றை ஒப்பந்தப்புள்ளிதாரர் குறிப்பிட வேண்டும்.

இந்நிகழ்வில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் கோரியுள்ள விலைவிகிதங்கள் கீழ்வருமாறு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளியினை சமர்ப்பத்தவர்களின் பெயர் | குப்பை பெற கட்டணம் ஒரு டன் குப்பைக்கு (tipping fee) ரூபாய் | லாபத்தில் பங்கு ஒரு டன் குப்பைக்கு (Royalty) ரூபாய் |
|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். தேரா–பிர்மா பயோடெக்னாலஜீஸ் லிமிட்டட் பெங்களூர் மற்றும் அமால்கமேட்டட் பீன் காபி டிரேடிங் கம்பெனி லிமிட்டட் அவர்களின் கன்சார்டியம் | 99.00 | –– |
| 2 | திருவாளர்கள். தி இண்டியா சிமெண்ட்ஸ் லிமிட்டட், சென்னை–செல்கோ, ஹைதராபாத் அவர்களின் கன்சார்டியம் | –– | 5.00 |
| 3 | திருவாளர்கள். ஹைட்ரோஏர் டெக்டானிக்ஸ்(பி.சி.டி) லிமிட்டட், நாவி மும்பை | –– | 15.00 |
| 4 | திருவாளர்கள் ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிட்டட், ஹைதராபாத் | 99.00 | –– |

இதில் ஒரு டன் குப்பைக்கு லாபத்தில் பங்குதருவதாக விலைவிகிதம் அளித்துள்ள திருவாளர்கள். ஹைட்ரோஏர் டெக்டானிக்ஸ்(பி.சி.டி) லிமிட்டட், நாவி மும்பை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியே சென்னை மாநகராட்சிக்கு மிகவும் ஆதாயம் உள்ள விலைவிகிதம் என்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் அறிக்கை அளித்துள்ளது.

இது குறித்து மேலும் சமர்ப்பிக்கப்படுவதாவது ஏற்கனவே கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களை வடிவமைத்தல், கட்டுதல், உரிமை பெற்றிருத்தல், இயக்குதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல் (Design, Build, Operate and Transfer ) அடிப்படையில் மேம்பாடு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பியதில் அரசும் தங்களது அனுமதியினை அரசாணை(நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.1) துறை, நாள் 08.05.2008ல் சென்னை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளது.

மேலும் அவர்களுடன் கீழ்வரும் ஒப்பந்தப்புள்ளி இனங்கள் குறித்து தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகத்தில் கலந்துரையாடப்பட்டது.(Discussed).

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/937/2007**

1. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் படி சென்னை மாநகராட்சி அவர்களுக்கு அதிகபட்சமாக 30 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு பதனிடுதல் வசதிகளை(Integrated Municipal Solid Waste Processing Facility) ஏற்படுத்தி தினசரி 1400 மெட்ரிக்டன்( 10 சதவிகிதம் ஏறக்குறைய ) இயக்க பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அனுமதி வழங்கும். இந்த நிலம் அவர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்படாது. மேலும், அவர்களுக்கு இந்த நிலத்தில் குத்தகை உரிமை(Lease-hold right) கூட வழங்கப்படாது. இந்த நிலத்தை அவர்கள் விற்கவோ, மேல் வாடகைக்கு விடவோ அல்லது அடமானம் வைக்கவோ அவர்களுக்கு உரிமை கிடையாது. இந்த நிலத்தில் அவர்கள் இந்த திட்டத்திற்காக பதனிடுதல் வசதிகள் தவிர வேறு எந்த உபயோகத்திற்கோ அல்லது கட்டடங்கள் கட்டவோ பயன்படுத்தக்கூடாது நிலத்தின் முழு உரிமையும் (title) சென்னை மாநகராட்சி வசமே இருக்கும்.

2. ஒப்பந்தகாலம்(Concession :Period) 20 ஆண்டுகளாக இருக்கும்

3. ஒவ்வொரு மாதத்திலும் பெறப்படும் குப்பையின் அளவில் சுகாதார குப்பை கொட்டும் தளத்தில்(Sanitary Landfill)கொட்டி நிரவப்படும் குப்பையின் அளவு 25 சதவிகிதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

4. இந்த திட்டத்தினை செயலாக்குவதற்கு தேவையான ஒப்புதல்கள், உரிமங்கள் தடையின்மை சான்றிதழ்கள் ஆகியவைகளை பெறுவது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும். இதற்கான உதவிகளை இயன்ற அளவிற்கு சென்னை மாநகராட்சி செய்யும்.

இது குறித்து இங்கு தெரிவிப்பது என்னவென்றால், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி குப்பையை பெறுவதற்கு உள்ள கட்டணமாக இருந்தாலும், அல்லது சென்னை மாநகராட்சி அவர்களுக்கு வழங்கும் குப்பைக்கு லாபத்தில் பங்கு தருவதற்காக இருந்தாலும், ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அவர்களின் விலைவிகிதத்தை ஒரு மெட்ரிக்டனுக்கு, கூற வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் அவ்வாறு கூறப்படும் விலை விகிதத்தில் 5 சதவிகிதம் கூட்டி வழங்கப்பட வேண்டும்.

இந்த திட்டத்தில் பெறப்பட்டுள்ள குறைந்த விலைவிகிதத்தின் அடிப்படையில் முதலாண்டுக்கு சென்னை மாநகராட்சிக்கு வரும் வருவாய் ரூ.76,65,000/-(1400 x 365 x 15.00 = 76,65,000/-). இதில் ஒவ்வோர் ஆண்டும் ரூ.3,83,250/- (0.75 x 1400 x 365 = 3,83,250/-) கூடுதலாக வருவாயாக சென்னை மாநகராட்சிக்கு கிடைக்கும்.

மேற்சொன்ன சூழ்நிலையில் சென்னை மாநகராட்சி பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பதனிடுதல் திட்டத்தை செயலாக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் பரிந்துரைத்துள்ள திருவாளர்கள். ஹைட்ரோஏர் டெக்டானிக்ஸ்(பி.சி.டி) லிமிட்டட், நாவி மும்பை அவர்கள் ஒரு டன் குப்பையை பெற்று பதனிடுதல் மற்றும் சுகாதார குப்பைகொட்டும் தளங்களில் கொட்டி களைய அளித்துள்ள ரூ.15/-(ரூபாய் பதினைந்து மட்டும்) என்ற சென்னை மாநகராட்சிக்கு லாபத்தில் பங்கு(Royalty) தரும் விலைவிகிதத்தை ஏற்க மாமன்றத்திற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்க பரிந்துரைகள் வேண்டி ஒப்பந்தப்புள்ளிக்குழுவிற்கு(Tender Committee) சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளிகுழு தங்களது 25.07.2008 நாளிட்ட கூட்டத்தில் இதற்கு பரிந்துரை வழங்கியுள்ளது.

(அ) எனவே, மேற்சொன்ன சூழ்நிலையில் சென்னை மாநகராட்சி பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பதனிடுதல் திட்டத்தை செயலாக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் பரிந்துரைத்துள்ள திருவாளர்கள். ஹைட்ரோஏர் டெக்டானிக்ஸ்(பி.சி.டி) லிமிட்டட், நாவி மும்பை அவர்கள் ஒரு டன் குப்பையை பெற்று பதனிடுதல் மற்றும் சுகாதார குப்பைகொட்டும் தளங்களில் கொட்டி களைய அளித்துள்ள ரூ.15/-(ரூபாய் பதினைந்து மட்டும்) சென்னை மாநகராட்சிக்கு லாபத்தில் பங்கு(Royalty) என்ற விலைவிகிதத்தை ஏற்று அவர்களுக்கு ஒப்பந்தம் வழங்க மன்றத்தின் மேலான அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

**"25.7.08 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.185, நாள்: 25.7.2008-ன்படி நிலைக்குழு (பணிகள்) அனுமதி பெற்று மன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்கின்ற நிபந்தனையுடனும் மற்றும் ஏற்கனவே கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு ரூ.69.30 கொடுக்க வேண்டுமென்று இயற்றப்பட்ட தீர்மானத்தினை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்கின்ற கருத்தின் அடிப்படையில் இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்கிறது".**

**"இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு ஏற்கனவே கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு ரூ.69.30 கொடுக்க வேண்டுமென்று இயற்றப்பட்ட தீர்மானத்தினை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்கின்ற கருத்தின் அடிப்படையில், 28.07.2008 அன்று தீர்மான எண்.222/08-ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்)-வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."**

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/1879/2007**
**ஆணையரின் 09.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.07.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :406/2008 பொருள் எண்.117

**கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல் மற்றும் சுகாதார குப்பை கொட்டும் தளம் அமைத்தல்**

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சுகாதார குப்பை கொட்டும் தளம் அமைத்தல் குப்பை கழிவு நீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்துதல், குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்து மேம்பாடு செய்தல் மற்றும் அங்கு பதனிடும் வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய அனைத்து திட்டங்களையும் ஒன்றாக சேர்த்து ஒருங்கிணைத்து ஒரே திட்டமாக வடிவமைத்தல், கொட்டுதல் உரிமை பெற்றிருத்தல், இயக்குதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல் (Design Build Own Operate Transfer) அடிப்படையில் தனியார் மூலதனத்தில் செயலாக்க திட்ட முனைவோர்களை தேர்வு செய்யுமாறு தமிழ் நாடு தொழில் வளர்ச்சி கழகத்தை சென்னை மாநகராட்சி கேட்டுக் கொண்டது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் மேற்சொன்ன திட்டத்திற்காக தொழில் முனைவோரை தேர்வு செய்ய சம்மதம் தெரிவித்து அவர்களுக்கு ஆலோசகர்களை நியமனம் செய்ய ஆலோசகர்களுக்கான பணி வரம்பு (Terms of Reference) ஆகியவர்களை தீர்வு செய்ய சென்னை மாநகராட்சியின் மேற்பார்வை பொறியாளர்(தி.க.மே), நிதி ஆலோசகர் மற்றும் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி கழக மேலாளர் ஆகியவர்களை உள்ளடக்கி ஒரு குழுவினை அமைக்கவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. மேலும் அவர்களிடம் இப்பணிக்காக அவர்களுக்கு சென்னை மாநகராட்சி ரூ. 1 கோடி தொழில் கட்டணமாக ( Professional charges) வழங்க வேண்டுமென்றும் கூறியுள்ளனர். மேலும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்திற்கு தொழில் கட்டணமாக ரூ.10 லட்சம் வழங்கப்பட்டது.

ஆலோசகர்கள் கூறிய அறிவுரைகளின்படி, வடிவமைத்தில், கட்டுதல், பராமரித்தல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல்(Design, Build, Maintain, Operate and Transfer) அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரைவு செய்யப்பட்டன.

ஆலோசகர்கள் வழங்கிய கருத்தின் அடிப்படையில் இந்த திட்டத்தை பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் செயல்படுத்துவதற்கு பதிலாக கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் செயல்படுத்துவதற்கு சென்னை மாநகராட்சி தனது சம்மதத்தை தெரிவித்தது. மேலும் சென்னை மாநகராட்சி ஆலோசகர்களுக்கு ரூ.21,34,840/– ஆலோசனை கட்டணமாக (வரிகள் உட்பட) தமிழ் நாடு தொழில் வளர்ச்சி கழகத்திற்கு வழங்கப்பட்டது.

இதற்கிடையில் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களை வடிவமைத்தல், கட்டுதல், உரிமை பெற்றிருத்தல், இயக்குதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்(Design. Build, Own, Operate and Transfer(DBOOT)} அடிப்படையில் மேம்பாடு செய்ய அரசின் ஒப்புதல் வேண்டி முன்மொழிவுகள் சமர்ப்பிக்க 28.11.2007 நாளிட்ட 582/2007 எண்ணிட்ட மன்றத்தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு அரசுக்கும் அனுமதி வேண்டி 10.12.2007 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

பின்னர் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் வரைவு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 27.03.2008 என்று நாள் குறித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ஒப்பந்தப்புள்ளிதாரர்களுடன் ஒரு முன்ஒப்பந்தப்புள்ளி கூட்டம் 05.03.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட 27.03.2008 அன்றே முன்தகுதி ஒப்பந்தப்புள்ளிகள்(Pre-qualification bids) திறக்கப்பட இருந்தது. முன்ஒப்பந்தப்புள்ளி கூட்டத்தில் ஒப்பந்தப்புள்ளிதாரர்களால் கேட்கப்பட்ட விளக்கங்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டு முன்ஒப்பந்தப்புள்ளி கூட்டக்குறிப்புரை(Minutes of Pre-bid Conference) தயாரிக்கப்பட்டு அந்த கூட்டக்குறிப்புரை அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கும் அனுப்பப்பட்டது. மேலும் போட்டியுள்ள விலைவிகிதங்களை பெற(Competitive bidding) இந்த ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பிப்பதற்கான நாளும் 23.04.2008க்கு நீட்டிக்கப்பட்டது.

இந்த திட்டத்திற்காக மொத்தம் 38 ஒப்பந்தப்புள்ளிகள் வாங்கப்பட்டன. ஆயினும் 6 ஒப்பந்தப்புள்ளிகளே சமர்ப்பிக்கப்பட்டன. அவைகளை சமர்ப்பித்தவர்களின் விவரம் கீழ்வருமாறு

1. திருவாளர்கள். 800 சூப்பர் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிட்டட்
2. திருவாளர்கள். பிட்டர்ஸ் டைவர்சிபைட் பெர்ஹாட்
3. திருவாளர்கள். அர்பசெர் அண்ட் ஐ.எல். அண்ட் எப்.எஸ். வேஸ்ட் மேனேஜ்மெண்ட் அர்பன் சர்வீஸஸ் லிமிட்டட் அவர்களின் கன்ஸார்டியம்.
4. திருவாளர்கள். ஹைட்ரோஏர் டெக்டோனிக்ஸ்(பி.சி.டி) லிமிட்டட்
5. திருவாளர்கள். நீல் மெட்டல் ப்ராடக்ட்ஸ் லிமிட்டட் அவர்களின் கன்ஸார்டியம்
6. திருவாளர்கள். ராம்கி என்விரோ என்ஜினீயர்ஸ் லிமிட்டட் அண்ட் ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிட்டட்

மேற்சொன்ன ஒப்பந்தப்புள்ளிகளில் முன்தகுதி ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் 23.04.2008 என்று திறக்கப்பட்டு அவைகள் பரிசீலிக்கப்பட்டு கீழ் வரும் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் அவர்களின் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட முன்தகுதி வழங்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டது.

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/1879/2007**

1. திருவாளர்கள். பிட்டர்ஸ் டைவர்சிபைட் பெர்ஹாட்
2 திருவாளர்கள். அர்பசெர் அண்ட் ஐ.எல். அண்ட் எப்.எஸ். வேஸ்ட் மேனேஜ்மெண்ட் அர்பன் சர்வீஸஸ் லிமிட்டட் அவர்களின் கன்ஸார்டியம்.
3. திருவாளர்கள். நீல் மெட்டல் ப்ராடக்ட்ஸ் லிமிட்டட் அவர்களின் கன்ஸார்டியம்
4. திருவாளர்கள். ராம்கி என்விரோ என்ஜினீயர்ஸ் லிமிட்டட் அண்ட் ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிட்டட்

பின்னர் மேற்சொன்ன நிறுவனங்களின் தொழில்நுட்ப செயல்திட்டம்(Technical Proposal) முதலில் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. மேற்சொன்ன நான்கு முன்தகுதி வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்களும், அவர்களது செயல்திட்டம் குறித்து விளக்கி வழங்குரை(Presentation) அளித்தனர். அனைத்து திடக்கழிவு மேலாண்மை வசதிகளும் அமைப்பது நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகளின் படி அத்தியாவசியமானதால், மேற்சொன்ன நால்வரின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளியினையும்(Commercial Proposal) திறக்கப் பரிந்துரைக்கப்பட்டது. அதன்படியே 03.06.2008 அன்று முன்தகுதி பெற்ற அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கும் முன்தகவல்(Prior intimation) அளித்து விலைவிகித ஒப்பந்தப்புள்ளி அன்றைய தினம் திறக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தப்புள்ளியில் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி இரண்டு விதம் சென்னை மாநகராட்சியிடம் இருந்து பெறப்படும் குப்பைக்கு ஒப்பந்தப்புள்ளிதாரர் எவ்வளவு தொகை தர விழைகிறார்(Royalty) என்றும் அல்லது சென்னை மாநகராட்சியிடமிருந்து அவர் பெறும் குப்பைகளை கையாள எவ்வளவு தொகை கோருகிறார்(Tipping fee ) என்றும் குறிப்பிட வேண்டும்.

இந்நிகழ்வில் மேற்சொன்ன முன்தகுதி வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அனைவரும் குப்பையை சென்னை மாநகராட்சியிடம் இருந்து பெற்று அவைகளை பதனிட மற்றும் களைய(for processing and disposal) சென்னை மாநகராட்சியிடமிருந்து களைதல் கட்டணமே(tipping fee) கோரியுள்ளனர். அவர்கள் அளித்துள்ள விலைவிகிதங்கள் கீழ்வருமாறு.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | ஒரு டன் குப்பையை பெற்றுக்கொள்ள கோரப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். பிட்டர்ஸ் டைவர்சிபைட் பெர்ஹாட் | 200.00 |
| 2 | திருவாளர்கள். அர்பசெர் அண்ட் ஐ.எல். அண்ட் எப்.எஸ். வேஸ்ட் மேனேஜ்மெண்ட் அர்பன் சர்வீஸஸ் லிமிட்டட் அவர்களின் கன்ஸார்டியம். | 289.00 |
| 3 | திருவாளர்கள். நீல் மெட்டல் ப்ராடக்ட்ஸ் லிமிட்டட் அவர்களின் கன்ஸார்டியம் | 886.00 |
| 4 | திருவாளர்கள். ராம்கி என்விரோ என்ஜினீயர்ஸ் லிமிட்டட் அண்ட் ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிட்டட் | 69.30 |

குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திருவாளர்கள். ராம்கி என்விரோ என்ஜினீயர்ஸ் லிமிட்டட் அண்ட் ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிட்டட் அவர்கள் அவர்களுக்கு வழங்கப்படும் நிலத்தில் ஏற்கனவே உள்ள குப்பையை சுகாதார நிலப்பரப்பாக மாற்றுவதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் குப்பையை 25 மெக்காவாட் அளவு மின்சாரம் தயாரிக்கவும் நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகளின்படி செயல் திட்டம் அளித்துள்ளனர்.

மேலும் அவர்களுடன் கீழ்வரும் ஒப்பந்தப்புள்ளி இனங்கள் குறித்து தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகத்தில் கலந்துரையாடப்பட்டது.

1. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் படி சென்னை மாநகராட்சி அவர்களுக்கு அதிகபட்சமாக 100 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு பதனிடுதல் வசதிகளை(Integrated Municipal Solid Waste Processing Facility) ஏற்படுத்தி தினசரி 1800 மெட்ரிக்டன்( 10 சதவிகிதம் ஏறக்குறைய ) இயக்க கொடுக்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் அனுமதி வழங்கும். இந்த நிலம் அவர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்படாது. மேலும், அவர்களுக்கு இந்த நிலத்தில் குத்தகை உரிமை(Lease-hold right) கூட வழங்கப்படாது. இந்த நிலத்தை அவர்கள் விற்கவோ, மேல் வாடகைக்கு விடவோ அல்லது அடமானம் வைக்கவோ அவர்களுக்கு உரிமை கிடையாது. இந்த நிலத்தில் அவர்கள் இந்த திட்டத்திற்காக பதனிடுதல் வசதிகள் தவிர வேறு எந்த உபயோகத்திற்கோ அல்லது கட்டடங்கள் கட்டவோ பயன்படுத்தக்கூடாது நிலத்தின் முழு உரிமையும் (title) சென்னை மாநகராட்சி வசமே இருக்கும்.

2. ஒப்பந்தகாலம்(Concession :Period) 20 ஆண்டுகளாக இருக்கும்

3. ஒவ்வொரு மாதத்திலும் பெறப்படும் குப்பையின் அளவில் சுகாதார குப்பை கொட்டும் தளத்தில்(Sanitary Landfill)கொட்டி நிரவப்படும் குப்பையின் அளவு 25 சதவிகிதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

4. இந்த திட்டத்தினை செயலாக்குவதற்கு தேவையான ஒப்புதல்கள், உரிமங்கள் தடையின்மை சான்றிதழ்கள் ஆகியவைகளை பெறுவது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும். இதற்கான உதவிகளை இயன்ற அளவிற்கு சென்னை மாநகராட்சி செய்யும்.

மேலும், குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள். ராம்கி என்விரோ என்ஜினீயர்ஸ் லிமிட்டட் அண்ட் ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிட்டட் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தை குறைக்க கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதற்கு அவர்கள், தங்களின் இயலாமையை தெரிவித்துள்ளனர்.

**<u>தி.க.மே.து.ந.க.எண்.அ7/1879/2007</u>**

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அவர்களின் விலைவிகிதத்தை ஒரு மெட்ரிக்டனுக்கு கூற வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் அவ்வாறு கூறப்படும் விலை விகிதத்தில் 5 சதவிகிதம் கூட்டி வழங்கப்பட வேண்டும்.

ஏற்கனவே கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களை வடிவமைத்தல், கட்டுதல், உரிமை பெற்றிருத்தல், இயக்குதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல் (Design, Build, Operate and Transfer ) அடிப்படையில் மேம்பாடு செய்ய முன்மொழிவுகள் அனுப்பியதில் அரசும் தங்களது அனுமதியினை அரசாணை(நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.1) துறை, நாள் 08.05.2008ல் சென்னை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளது.

இந்த திட்டத்தில் பெறப்பட்டுள்ள குறைந்த விலைவிகிதத்தின் அடிப்படையில் முதலாண்டுக்கு ஏற்படும் செலவினம்ரூ.(1800 x 365 x 69.3 = 4,55,30,100/–).

திருவாளர்கள். ராம்கி என்விரோ என்ஜினீயர்ஸ் லிமிட்டட் அண்ட் ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிட்டட் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் அளித்துள்ள பரிந்துரையினை ஏற்றுக்கொள்ள தொழில்நுட்பக்குழுவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி குழுவும் பரிந்துரை வழங்கியுள்ளது.

விலைவிகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட 03.06.2008க்கு பிறகு இதில் கலந்து கொண்டு ஒரு டன் குப்பைக்கு ரூ.200/– கட்டணமாக கோரியுள்ள திருவாளர்கள். பிட்டர்ஸ் டைவர்சிபைட் பெர்ஹாட் அவர்கள் குப்பையை எந்த கட்டணமும் இல்லாமல் பெற்றுக்கொள்வதாக 05.06.2008 அன்று கடிதம் அளித்தனர். ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டப்பிறகு பெறப்படும் எந்த ஒரு கோரிக்கைகளையும் ஏற்க வழிவகை கிடையாது. எனினும், சிலநாட்களிலேயே அவர்கள் குப்பை கொட்டும் வளாகத்தினை பார்வையிட்டு குப்பைகளை பரிசோதித்த பின்னர் குப்பையின் எரியும் தன்மை(Calorific value) சாதகமற்றதாக உள்ளதால் 23.06.2008 நாளிட்ட கடிதத்தில் தங்களின் கோரிக்கையை திரும்பப்பெறுவதாக தெரிவித்தது மட்டுமின்றி இது போன்ற பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திற்கு கோரப்பட்ட, 2006.2008 அன்று திறக்கப்பட்ட உலகளாவிய ஒப்பந்தப்புள்ளியிலும் பங்கேற்கவில்லை. எனவே அவர்களின் கோரிக்கை கருத்தில் கொள்ளப்படவில்லை.

மேற்சொன்ன சூழ்நிலையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் சென்னை மாநகராட்சி கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பதனிடுதல் திட்டத்தை செயலாக்க திருவாளர்கள். ராம்கி என்விரோ என்ஜினீயர்ஸ் லிமிட்டட் அண்ட் ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிட்டட் அவர்கள் ஒரு டன் குப்பையை பெற்று பதனிடுதல் மற்றும் சுகாதார குப்பைகொட்டும் தளங்களில் கொட்டி களைய அளித்துள்ள ரூ.69.30 (ரூபாய் அறுபத்தொன்பது மற்றும் பைசா முப்பது மட்டும்) என்ற விலைவிகிதத்தை ஏற்க சென்னை மாநகராட்சிக்கு பரிந்துரைகள் வழங்கியுள்ளது.. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்தின் மேற்சொன்ன பரிந்துரையினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு வரிவிதிப்பு மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.7.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 198/2008, நாள்: 11.7.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

15.7.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 119 /2008 , நாள்: 15.7.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"மேலும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ஒருங்கிணைந்த திட்ட ஒப்பந்த கோப்பில் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது".

25.07.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி), 28.07.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மானித்தவாறு ஏற்கனவே, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு ரூ.69.30 கொடுக்க வேண்டுமென்று இயற்றப்பட்ட தீர்மானத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் இவ்வொப்பந்தத்தை மறு பரிசீலனை செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் மறு ஒப்பந்தம் கோர இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18

மன்றச் செயலாளர்